# வள்ளுவர் கண்ட அரசியல்
## நாடும் மக்களும்

*எழுதியவர்*

**வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்**

*தமிழ்த்துறைத் தலைவர்*

**புதுக் கல்லூரி, சென்னை.**

*வெளியிட்டவர் :*

சென்ட்ரல் புக் டிபோ

**திருவல்லிக்கேணி : : சென்னை—5.**

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு ... 1956.

" சென்ட்ரல் அச்சகம் "

97, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்-5.

விலை ரூ. 1—12—0

# பொருள் அடக்கம்


| | | | |
|---|---|---|---|
| I. | முன்னுரை | | I—IV |
| II. | பதிப்புரை | | V |
| 1. | நாடு | .. | 1 |
| 2. | அரண் | .. | 14 |
| 3. | குடிமை | .. | 24 |
| 4. | குடி செயல் வகை | .. | 33 |
| 5. | மானம் | .. | 38 |
| 6. | பெருமை | .. | 50 |
| 7. | பண்புடைமை | .. | 59 |
| 8. | நாண் உடைமை | .. | 63 |
| 9. | சான்றாண்மை | .. | 67 |
| 10. | கயமை | .. | 73 |
| 11. | நல்குரவு | .. | 83 |
| 12. | இரவு | .. | 91 |
| 13. | இரவச்சம் | .. | 98 |
| 14. | உழவு | .. | 103 |
| 15. | நன்றியில் செல்வம் | .. | 110 |
| 16. | மருந்து | .. | 119 |

# முன்னுரை

உலகம் போற்றும் தமிழ் மொழியில் திருக்குறள் உயர்ந்த நூல்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இந் நூல் மொழி வேறுபாடு, இனவேறுபாடு, சமய வேறுபாடு இன்றி, எல்லோரும் ஏற்றுப் போற்றும் நிலையில் இன்று வரையில் இருந்து வருகிறது. இத்தகைய பெருமைபெற்று விளங்கிவருவதால்தான் பழங்காலம் முதற்கொண்டே பதின்மர் இதற்கு உரை எழுதிச் சிறப்புற்றனர்.

அந்தப் பெருமை அழிவுறாதிருக்கவே இக்காலத்திலும் கூடத் திருக்குறள் நூல், பலப்பல வடிவில் வந்துகொண்டிருக்கிறது. எத்துணை வகையில் இந்நூலின் கருத்துக்கள் வெளிவரினும், மேலும் இந்நூல் பலதுறை வடிவங்களை ஏற்று வருவதற்கு உரிய நிலைமை பெற்றே திகழ்கிறது. இதனை உளங்கொண்ட யானும், திருக்குறட்கு என்னால் ஒரு தொண்டினைச் செய்ய வேண்டுமென்று எண்ணி, உரைநடையில் இந் நூலை வெளியிடத் துணிந்தனன். உரைநடை நூல்கள் பல திருக்குறளை ஒட்டிவந்துள்ளன. என்றாலும், என்னால் வெளியிடப்படும் இவ்வுரை நடை நூல் பெரிதும் வேறுபாடு உடையது என்பதை முன்பு வெளிவந்த நூற்களையும் இந்நூலையும் ஒப்பிட்டுப் பார்ப்பின் உண்மை வெளியாகாமல் இராது. இவ்வுரை நடை நூல், இதுவரை வெளிவந்துள்ள திருக்குறள் உரைகளை ஒட்டி, அவ்வுரைகளில் கருத்துக்களை விடாமலும், தொடர்பு கெடாமலும், எழுதப்பட்டதாகும்.

யான்கொண்ட திருக்குறள் உரைகள் பரிமேல் அழகர் மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர், பரிதியார் பழைய உரை என்பன. ஆனால், இவ்வுரை ஆசிரியர்கள், திருக்குறள் பாக்களின், வைப்பு முறையில் வேறுபட்டவர் கள். யான் பரிமேல் அழகர் வைப்பு முறையை ஒட்டியே உரைநடையினை எழுதியுள்ளேன். உரைநடைப்படுத்தும் போது மற்றையோருடைய உரைப் பகுதிகளைப் பரிமேல் அழகர் வைப்புமுறைக் கிணங்கவே இணைத்து வரைந் துள்ளேன்.

இவ் வுரைநடை ஒவ்வொரு திருக்குறட்பாவைச் சார்ந்து எழுதப்பட்டதேனும், குறட்குப் பொருள் தருவது போன்று இராமல், தொடர்புடைய கருத்துக்களைப் போன்றே அமைந்து காணப்படும். அக் கருத்துக்களுக் கேற்ற பல நூல் மேற்கோள்களுடனும் இது திகழ்ந்து விளங்குகிறது. உதாரணங்களும் சில எடுத்துக் காட்டுக் களாகக் காட்டப் பட்டிருக்கின்றன. இம் முறையில் இவ் வுரை நடை நூல் எழுதப்பட்டிருப்பதனால், திருக்குறளைப் படிக்க விரும்புபவர் "மூல நூலைப் படிக்க இது பெருந்துணை யாக இருக்கிறது" என்று எண்ணுவதுடன், இவ் வுரை நடையினைப் படித்தே உள் பொருளை உணரலாம் என்னும் உணர்ச்சியும், கதைபோன்று படிக்க எளிமையாக இருக் கிறது இது, என்னும் மகிழ்ச்சியும் அடைவர் என்பது என் துணிபாகும்.

இவ்வமைப்பு முறையில் எழுதப்பட்ட இவ்வுரைநடை நூல், திருக்குறட் பொருட்பாலை அடிப்படை யாகக் கொண்டு வெளிவருகிறது. பொருட்பால் அரசியல் முறையினை அறிவிப்பதாதலின், **வள்ளுவர் கண்ட அரசியல்** என்னும் தலைப்பினைப் பெற்றே இவ்வுரைநடை வெளிவருகிறது. இத் தலைப்பின் கீழ், மூன்று தனித்தனி

நூல்கள் வர இருக்கின்றன. அவையே **1. நாடும் மக்களும் 2. அரசன் பண்பும் அவன் ஆட்சி முறையும், 3. அரசனது அங்கங்களும் அவற்றின் இயல்புகளும்** என்பன. அவற்றுள் இது **நாடும் மக்களும்** என்னும் பெயருடன் வெளிவரும் முதல் நூலாகும். அடுத்தபடியாக ஏனைய இரண்டு நூற்களும் விரைவில் வெளிவரும்.

நாடும் மக்களும் என்னும் பகுதியில், நாட்டின் அமைப்புக்கு நாடு அரண் என்னும் இரண்டு அதிகாரங்களையும், குடி மக்கள் இயல்பிற்குக் குடிமை, குடிசெயல்வகை, மானம், பெருமை, பண்புடைமை, நாணுடைமை, சான்ருண்மை, கயமை, என்ற அதிகாரங்களையும், நாடு வறுமை இன்றி இருக்கவேண்டும் என்பதையும் வறுமை காரணமாக இரவு எடுக்கநேரின், யாரிடத்தில் சென்று யாசகம் பெறவேண்டும் என்பதையும், அதுவே காரணமாகப் பிச்சை எடுத்தல் கூடாது என்பதையும் விளக்க நல்குரவு, இரவு, இரவச்சம் என்ற அதிகாரங்களையும், இணைத்து, வறுமை நீங்க உழைத்து உணவு தேட வேண்டும் என்பதை உணர்த்த உழவு என்னும் அதிகாரத்தையும், குடி மக்கள் உடல் உரம்பெற்று நோய் இன்றி இருக்க வேண்டும் என்பதை அறிவிக்க, மருந்து எனனும் அதிகாரத்தையும் இயைத்து தொடர்பு காட்டி எழுதியுள்ளேன். இத்தொடர்பு காரணமாக அதிகாரங்கள் பழைய முறைப்படி இன்றி, என் கருத்துக்கேற்ப மாற்றி அமைத்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் அன்பர்கள் அறிய வேண்டுகிறேன்.

இவ்வாறு எழுதப்பட்ட இவ்வுரைநடை நூலைத் தமிழ் உலகம் ஏற்று, இதன் தொடர்புடைய ஏனைய இருநூல்களும் விரைவில் வெளிவருதற்கான ஊக்கமும் ஆர்வமும் எனக்கு அளிக்குமாறு வேண்டுகிறேன். இந்நூலுக்கு மதிப்புரை எழுதிய அறிஞர் பெருமக்களுக்கும், இந்நூலை

இத்துணை அழகுற வெளியிடும் சென்டரல் புக்டிபோ உரிமையாளர்க்கும் எனது அன்பு கலந்த நன்றி என்றும் உரித்தாம்.

வாழ்க வள்ளுவர் வாய்மொழி

**பா. து. க.**

"அம்மையப்பர் அகம்"
77, அவதானம் பாப்பையர் வீதி
**தூளை, சென்னை-7.**

சென்னை வண்ணையம்பதி சர் தியாகராய கல்லூரிப் பிரின்ஸ்
பாலும், சென்னைப் பல்கலைக் கழகச் சிண்டிகேட்
செனெட், அகடமிக் கவுன்ஸில் முதலிய
வற்றின் அங்கத்தினருமாகிய

# ம. கி. சண்முகம், எம்.ஏ., எல்.டி.,

எழுதியது

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் எழுதியுள்ள 'வள்ளுவர் கண்ட அரசியல்' என்னும் நூலைப் படித்து மகிழ்ந்தேன். அன்னார் திருக்குறள் ஆராய்ச்சியைப் புதுமுறையில் கையாண்டிருக்கிறார். இது பாராட்டத்தக்கது. பொருட்பாலில் புதைந்து கிடக்கும் வள்ளுவர் கருத்துக்களை உரை நடையின் மூலம் ஒரு கோவையாகச் செய்ததுமன்றி, அதற்குப் பொருத்தமான சான்றுகளையும் தமிழ் இலக்கியங்களிலிருந்து வழங்கியிருக்கின்ற முறை ஆசிரியரின் கல்வித் திறனையும், பன்னூல் ஆராய்ச்சி அனுபவத்தையும் தெற்றென விளக்குகின்றது. "வள்ளுவர் கண்ட அரசியல்" என்ற தலைப்போடு இன்னமும் இரண்டு நூல்கள் வர இருக்கின்றன. நாம் எதிர்பார்க்கும் அளவில் இந்த நூல்கள் சிறப்போடு விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் விற்பனர்களுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் ஆற்றுகின்ற திருப்பணிக்குத் தமிழகம் அவரைப் போற்றாமல் இருக்காது. அரசியலைப்பற்றி மேல்நாட்டு நூல்களில் காணும் கருத்துக்களையும் உண்மைகளையும் மாணவர்கள் வள்ளுவர் வழங்கித்தந்த பொன் மொழிகளைக் கொண்டு ஆராயவும் சீர்தூக்கிப் பார்க்கவும் வித்துவான் கண்ணப்ப முதலியார் தம் நூலின் மூலம் வழி காட்டி அமைத்திருப்பது நாம் பெற்ற பேறு எனக் கொள்ளலாம். வள்ளுவம் தழைக்க.

சென்னைப் பல்கலைக் கழகம் வரலாற்றுச் சிறப்பு

விரிவுரையாளர் (Reader)

## டாக்டர். எம். ஆரோக்கியசாமி M.A., Phd..

எழுதியது

மணல் கேணி தொட்டனைத் தூறும். திருக்குறளும் அத்தகையதோர் அறிவுக்கேணியே. இக்கேணி தோண்டத் தோண்ட ஊறும். அவ்வூற்றுநீர் பருகப்பருகத் தெவிட்டா இன்பந்தரும். இவ்வின்பத்தை நுகர முயன்றவர்கள், முயன்று வருகின்றவர்கள் பலர். ஆனால், தாம் மட்டும் அப்பேரின்பத்தைத் துய்த்தால் போதாது. 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற எண்ணத்தோடு அவ்வின்பத்தைப் பிறருக்கும் அளிக்கின்றனர், சிலர் தெள்ளிய உரை நடை நூல் வடிவிலே. இத்தகைய நூலே புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார் இயற்றியுள்ள "வள்ளுவர் கண்ட அரசியல்". இந்நூல் திருக்குறள் பொருட் பாலுக்குச் சிறந்த விளக்க நூலாகும்; ஆசிரியர் பிற சங்க இலக்கியங்களிலிருந்து தக்க மேற்கோள்களை எடுத்துக் கையாண்டு இனிய நடையில் திருக்குறள் கருத்துக்களை இதில் விளக்கியுள்ளார். இம்முயற்சி பெரிதும் போற்றற்குரியது.

ஆசிரியரின் நன்முயற்சி மேலும் மேலும் ஓங்குவதாகுக.

தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்க கௌரவ செயலாளர்

## ஜனாப் எம். எஸ். அப்துல் மஜீத், பி.ஏ.

எழுதியது

திருக்குறள் ஓர் எல்லையற்ற பரவை. அதில் மதிப்பில்லா மாணிக்கங்கள் ஆழ்ந்து கிடக்கின்றன. ஆற்றலுடையோர் அவைகளைத் தேடி எடுத்துத் தாங்கள் இயற்றும் நூற்களில் கலங்கரை விளக்கமாக அமைக்கின்றார்கள். திருக்குறள் தோன்றிய காலந் தொட்டு அதைத் தழுவிய நூல்கள் பல வெளியாகி இருக்கின்றன. இன்னும் வெளியாகிக்கொண்டும் இருக்கின்றன. அவ்வாறு திருக்குறளைத் தழுவிய நூல்களிலொன்று வித்துவான். பாலூர். கண்ணப்ப முதலியார் வெளியிடும் "வள்ளுவர் கண்ட அரசியல்" இந்நூல் மூன்று பகுதிகளை உடையது என்று ஆசிரியர் அறிவிக்கின்றார். அவற்றில் "நாடும் மக்களும்" முதல் பகுதியாகும். அப்பகுதியை நான் படித்தேன். அது பல வகையில் பயன் தரக்கூடியதாகவே இருக்கிறது. இந்நூலைத் தமிழகம் ஏற்றுப் போற்றுமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இந் நூலைப் படிக்கும் சமயம் பொதுவாகத் தமிழ் இயலிலும் சிறப்பாக வள்ளுவர் மறையிலும் ஆசிரியருக்கு இருக்கும் ஆழ்ந்த ஆற்றலும் ஆராய்ச்சியும் வெளியாகின்றன.

வள்ளுவர் கண்ட அரசியலில் வளம் பெற்ற நாடு, ஆழ் அகழி, அரண், உயர் நடை குடி மக்கள் மானமழியாது பெருமைபட வாழ்தல் முதலியன இடம் பெற்றுள்ளன. அவைகளை அழகிய முறையில் ஆசிரியர் ஆணித்தரமான ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். விளக்கம் படிக்கப் படிக்கச் சுவை தருகின்றது. "நாடும் மக்களும்" எனும் நூலும் அதைத் தொடர்ந்து வெளிவர இருக்கும் ஏனைய இரு நூல்களும் வெற்றியுற வாழ்த்துகின்றேன்.

சென்னை, மீனம்பாக்கம் அகர்சந்து மான்மல்ஜெயின்கல்லூரித்
தமிழ்த்துறைத் தலைவர்

## வித்துவான்: எஸ். வி.வரதராஜ ஐயங்கார், M.A.,M.O.L.,

எழுதியது

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் அழியா மரபினதாக நின்று விளக்கும் ஒப்புயர்வற்ற நூல் திருக்குறளாகும். இதிலுள்ள ஒவ்வொரு குறட்பாவும் ஒவ்வொரு சூத்திரமாக அமைந்து பேருண்மைகளை நெறிப்படுத்தியுரைப்பதால், "ஆரியம் வேதமுடைத்து, தமிழ் திருவள்ளுவனார் ஓது குறட்பா வுடைத்து" என்று போற்றினர் ஆன்றோர். இந்நூலின்கண் பொதிந்துள்ள அரிய கருத்துக்களைத் தெரிய விளக்கியுள்ள உரையாசிரியர்கள் பேரருளாளரான பரிமேலழகரும் ஏனைய ஒன்பதின்மருமாவர். இந்திய மொழிகள் பலவற்றிலுமேயன்றி, அயல் நாட்டுமொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ள பெருமை இத்திருக்குறள் ஒன்றிற்கே யுண்டு.

எனது அரிய நண்பரும் புதுக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவருமாகிய வித்துவான் உயர்திரு. பாலூர் கண்ணப்ப முதலியாரவர்கள் இயற்றியுள்ள 'வள்ளுவர் கண்ட அரசியல்" என்னும் முப்பகுதியாக வெளிவர இருக்கும் நூல்களில் முதலது 'நாடும் மக்களும்' என்னும் பொருள்பற்றிய இது. நண்பரவர்கள் தாம் மேற்கொண்ட பொருளைத் திறம்படத் தொகுத்து விளக்கும் முறையும், ஆங்காங்கே மேற்கோள்களை எடுத்தாளும் திறனும் மிகவும் போற்றற்கு உரியன. கற்பவர்க்குச் சுவை பயக்கும் வகையில் கருத்துக்களைக் கோவைப்படுத்தியும், மாணவர்க்கு ஏற்ற எளிய நடையில் இயற்றியும் உதவியுள்ள இவ்வுரைநடைநூல், பொதுவாகத் தமிழகத்திற்கும், சிறப்பாகத் தமிழ் மாணவர்க்கும் பெரிதும் பயன்படுவதாகும். இதுபோன்ற மற்றிரண்டு நூல்களையும் விரைவில் வெளிப்படுத்தி யுதவுமாறு ஆசிரியரை யான் வேண்டுகின்றேன்.

# வள்ளுவர் கண்ட அரசியல்

—: ⊙ :—

## நாடும் மக்களும்

---

### 1. நாடு

மலர்தலை உலகில் அரசியல் மாண்புற அமைதற்கு அடைப்படை, நாட்டின் வளம் நன்முறையில் இருப்பதே யாகும். நாட்டின் வளம் குன்றி இருப்பின், அரசியலை நடத்துதற்கு இயலாது. சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் எழுதவேண்டும்? அது போல நாடாகிய சுவரை வைத்துக்கொண்டே சித்திரமாகிய அரசியலை எழுதவேண்டும். எனவே, இனி நாடு அமைய வேண்டிய முறைகளையும், இருக்க வேண்டிய வளங்களையும் காண்போமாக.

நாடு குறையாத விளைச்சலைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது. குறையாத விளைவாவது, மழை இல்லாத காலத்திலும் சாவிபோகாது, விளைதல் வேண்டும். செல்வர்களும் அறிவோர்களும் நல்லோர்களும் நிறைந்து காணப்படுதல் வேண்டும். குறையாத விளைவு நாட்டிற்குத் தேவை என்றதால், அவ்விளை வினை ஆக்கவல்ல உழவர்கள் நாட்டில் மலிந்திருத்தல் இன்றியமையாதது என்பதைக் கூறவும் வேண்டுமா ? உழவு மிகுந்தால் உணவுப் பொருள்களும் மிகுதிப்படும் அல்லவா ? உணவு மிகுதியானால் நாட்டில் வறுமை தலைகாட்டாது ஒழியும். அறிவோர்கள் மலிந்து நாடு விளங்கவேண்டும் என்று கூறியதனால், அறிவோர் எனப்படுவோர், பற்றைத் துறந்தவர்களும் அந்தணர் களுமே ஆவர். கல்வியும் ஞானமும் நற்குணமும் அமைந்தவர்களும் இவ்வறிஞர்களைச் சார்ந்தவர்களே. இவர்கள் நாட்டில் மலிந்து காணப்பட்டால், அந்நாடு அழியாது. செல்வர்கள் நிறைந்து இருத்தல் நாட்டிற் குச் சிறப்பாகும் என்றது, கப்பலின் மூலம் கடலைக் கடந்து வெளி நாடுகளுக்குச்சென்று வாணிபம்செய்து அரும் பொருள்களைத் திரட்டிவரும் முயற்சியுடை யோர் நிறைந்திருத்தல் வேண்டும் என்பதாம். “ திரை கடல் ஓடியும் திரவியம் தேடு ” என்பது நம் நாட்டு முதுமொழிதானே ? கடல் கடந்துதான் மக்கள் பொருள் ஈட்டவேண்டும் என்பதில்லை. உள்நாட்டில், பல்வேறு இடங்களுக்குக் கால் நடையாகச் சென்றும் வாணிபத்தினைப் பெருக்கிப் பொருளைத் திரட்ட லாம். இம் முறையில் நாட்டிற்குப் பொருளைத் தேடி வரும் ஊக்கமுடைய மக்களைப்பற்றிச் சிலப் பதிகாரம்,

உரைசால் சிறப்பின் அரசுவிழை திருவில்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொருள் தரூஉம் விருந்திற் றேஎ
ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக்
குலத்தில் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்

என எடுத்துக் கூறுகிறது.

இவர்கள் தேடும் செல்வம் ஈயக் குறைபடாது; பிறரால் இகழவும்படாது. இந்தத் தன்மைகள் அனைத்தும் நாடுகள் பெற்றிருந்தன என்பதற்கு ஒரு சான்றாக ஏமாங்கத நாட்டைக் கூறலாம். அதைப்பற்றித் திருத்தக்கதேவர்,

நற்றவம் செய்வார்க்கிடம் தவம்செய்வார்க் குமஃதிடம்
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள்செய் வார்க்குமிடம்
பெற்றஇன்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென
மற்றநாடு வட்டமாக வைகும்மற்ற நாடரோ.

என்று கூறியுள்ளார்.

நாட்டிற்கு விளைவு மிகமிக இன்றியமையாதது என்று கூறினோம் அன்றோ? அவ்விளைவு முழு விளைவாக இருக்கவேண்டும். இப்படி விளைவுதரும் நிலங்கள் அல்லவோ முப்போகம் விளையும் நிலங்கள் என்று கூறப்பட்டு வருகின்றன? முப்போகம் விளைந்து, முழுவிளைச்சலை நிலங்கள் தருவதாயின், அந் நிலங்களுக்கு எந்தக் கெடுதியேனும் இருத்தல் கூடுமோ? கூடாது. நிலங்களுக்கு மிகுந்த மழையி னாலும், மழையே இல்லாமையாலும், எலி, விட்டில்

பூச்சி, கிளி, பன்றி, மான், யானை, தன்னரசு, காற்று, வேற்றரசு நெருங்குதல் முதலானவற்றால் கேடு வருதல் இயல்பு. இதனை

"விட்டில் கிளி, நால்வாய் வேற்றரசு தன்னரசு
நட்டம் பெரும்பெயல்கால் எட்டு"

என்ற மேற்கோள சூத்திரத்தாலும்:

விட்டில் கிளியே நால்வாய் ஏனம்
தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்புயல்
நட்டம் நாட்டேழ் குற்ற மாகும்

என்ற பிங்கலந்தையாலும் அறியலாம்.

இவ்வாறு நாட்டிற்கு வரும் கேட்டினைவடநூலார் ஈதிகள் என்பர். மேலே கூறப்பட்ட கேடுகள் நிலங்களுக்கு இல்லையானால், நெல், பொன், மணி முதலியன மிகுதியாகப் பெருகும். இதனால் பிறதேயத்தவர்களும் இத்தகைய நாட்டையே தம் நல் வாழ்வின் பொருட்டு வந்து குடியேறுவர். அப்படி விரும்பும் முறையில் நாடு அமைதல் வேண்டும். இந்த நிலையில் எல்லாத் தேயத்தவரும் விரும்பும் வளத்துடன் தொண்டை நாடு இருந்தது என்பதை,

மலிபெரும் பொருளால் பெட்கும்
வண்மையும் நாடாது யாதும்
மெலிவுக உதவும் வாய்ப்பும்
மெலிகலார் மெலிந்த காலும்
நலிதராவளனும் எல்லாம்
நலிவுறநீத் தாற்ற ஈண்டும்
ஒலிகெழு விளையு ளோடும்
உடையது தொண்டை நாடு

என்று கச்சியப்ப முனிவர் தணிகை புராணத்தில் கூறியிருப்பதிலிருந்து நாம் அறிகிறோம்.

பிற நாடுகள் வளமுடைய நாடுகளை நோக்கி வருதற்கு மற்றும் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் சில, பகை அரசர் தம் நாட்டுடன் போர் தொடுத்த காலம், தம் நாட்டு அரசன் கொடுங்கோலனாக மாறிய காலம், மழையின்மையால் உணவின்மை ஏற்பட்ட காலம், ஆகிய இத்தகைய காலங்களில் பிற நாடுகள் வேற்று நாடுகளை நாடும்; அப்படி வரும்போது, மக்கள் மட்டும் வேற்று நாட்டை அடைவர் என்று சொல்ல இயலாது, அம்மக்களைச் சார்ந்த பசுக்களும் எருமைகளும், ஆடுகளும் மற்றும் பிறவும் வளமுடைய நாட்டை அடையும். இத்துணைப் பொருள்களையும் தாங்கும் பொறுப்பையும் நாடு ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். பிற நாட்டு மக்களும், மூவினங்களும் வந்து சேர்ந்தால் உள் நாட்டுப் பொருளாதார நிலை குறைவுபடவும் கூடும். அதன் காரணமாக அந் நாட்டுக் குடிமக்கள் அரசனுக்குத் தர வேண்டிய இறைப் பணத்தில் சிறிதும் குறைக்காமல், கொடுக்க வேண்டிய பொருளை மனம் உவந்து கொடுத்து வருதல் முறைமையாகும். இப்படிப் பிற நாட்டுப் பாரங்களையும் தாங்கி, அரசனுக்குக்கொடுக்க வேண்டிய ஆறில் ஒரு கடமையும் கொடுத்துச் சிறப்புடன் விளங்கியது தொண்டை நாடு என்பதைப்

பல்குழு வேந்தலைக்கும் படர்கொலைக் குறும்பு தீய
பல்குமுள் பகையு டற்றும் பகையுறு பசிதீ ராவோ

பல்குறி தானும் இன்றிப் பொறையொருங் குறுகால் தாங்கி
நல்கிறை வேந்தர்க் குய்க்கும் நலத்தது தொண்டை நாடு

என்னும் பாடலால் நன்கு அறியலாம்.

நல்ல விளைவு காரணமாக நாட்டில் உணவுப் பொருள்கள் மலிந்து காணப்படும் ஆதலின், பசி நாட்டில் இருத்தற்கு இடம் இல்லை. பசிமட்டும் இல்லாமல் இருப்பது நாட்டுக்குச் சிறப்பில்லை. நாட்டில் தீய காற்றாலும், மிகுந்த குளிரும், வெப்பத்தின் மிகுதியாலும், நாட்டில் கிடைக்கும் பொருள்களைப் பெரிதும் உண்ணும் காலத்து ஏற்படக்கூடிய தீங்கினாலும் நோய் தோன்றுதற்குக் காரணம் உண்டு. ஆதலின், இம்முறையில் ஏற்படக்கூடிய நோய் இல்லாது நாடு திகழ்தல் வேண்டும். வேற்றரசர்கள் படை எடுத்து நாட்டை அழிக்காமல் இருக்க, நிலப்படை, காட்டரண், நீர் அரண், நில அரண், மலையரண் முதலியவற்றைப் பெற்றுப் பகைவரால் அழிவுறாதிருக்கும் நிலையில் நாடு அமைந்திருத்தல் சிறப்பாகும்.

இளங்கோ அடிகளாரும் தமது சிலப்பதிகாரத்தில் நாட்டின் இயல்பைக் கூறுகையில், "பசியும் பிணியும் பகையும் நீங்கி" என்று கூறிச் சென்றார். நாட்டு மக்களுக்கு இம்மூன்றும் இல்லாதிருக்கவேண்டும் என்பதை அடிக்கடி நினைவு ஊட்டும் பொருட்டுப் பறையறைந்து அறிவித்து வந்ததாகச் சிந்தாமணி ஆசிரியர்,

ஒன்றுடைப் பதினை யாண்டைக்
குறுகடன் இறைவன் விட்டான்
இன்றுளீர் உலகத் தென்றும்
உடனுளீர் ஆகி வாழ்மின்

பொன்றுக பசியும் நோயும்
　　பொருந்தலில் பகையும் என்ன
மன்றல மறுகு தோறும்
　　மணிமுரசு ஆர்த்த தன்றே

என்று கூறியிருப்பதனால் அறியலாம்.

நாடு என்பது பரந்த பரப்புடைய நிலப்பகுதி. இதில் எவர்க்கும் இடம் உண்டு. இப்படி இடம் பெறுபவர் பலர் ஆவார். சாதிபற்றியும், கடவுள்பற்றியும் தம் கருத்து வேற்றுமை கொண்டு மாறுபட்டுக் கூடும் கூட்டத்தவர்களும், வழிபறி கொள்ளைக்காரர்களும், உள் நாட்டில் இருந்துகொண்டே திருடுபவர்களும், கோள் சொல்லித் திரிபவர்களும், இச்சகம் பேசிப் பொருள் பறிப்பவர்களும், பொய்சாட்சி கூறுபவர்களும், மித்திரபேதம் செய்பவர்களும், புறம் கூறுபவர்களும், அரசை வருத்தும் குறுநில மன்னர்களும், ராசத் துரோகிகளும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் நாட்டில் இருத்தல் கூடாது. இவர்கள் வாழ இடங்கொடுக்காத நாடே நல்ல நாடாகும்.

இவர்கள் நாட்டுக்குப் பாழ் செய்யும் உட்பகைவர் ஆவர். இவ்வாறான உட்பகைவர்களுக்குள்ளே பன்றி, கரடி, புலி முதலான விலங்குகளும் சேர்ந்தவையே. ஆகவே, மாறுபட்டுக் கூடும் கூட்டமும், உள்பகையும், குறும்பர்களும் கொடு விலங்குகளும் இல்லாமல் நாடு திகழ வேண்டும்.

இந்த முறையில்தான் நாடு இருத்தல் வேண்டும் என்பதை விநாயக புராணமும் நமக்கு நன்கு எடுத்து இயம்புகிறது.

பழுதுசிர் நாட்டுக் கமரர்கள் சாதி
பற்றுசங் கேதத்தின் ஈண்டும்
குழுவுமா றலைக்கும் கள்வர்பொய் குறளை
கூறுவோர் பன்றிமான் முதலாய்க்
கெழுவுமுட் பகையும் அளவுபார்த் தரசைக்
கெடுக்கும்கொல் குறும்பரும் மிக்க
மழைமழை இன்மை எலிகிளி விட்டில்
மன்னராம் கோளுமாம் மைந்தா!
என்ற பாடலைக் காண்க.

பகைவரால் நாட்டுக்குக் கேடுவராமல் நாடு அமைதல் வேண்டும். அப்படிக் கேடு வந்த இடத்தும் சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் வெள்ளி, பொன் முதலான உலோக வளம் குறைதல் கூடாது. இப்படி விளங்கும் நாடே தலைசிறந்த நாடாகும். கேடு வராமல் நாட்டைப் பாதுகாத்தல் அரசன் கடன். அரசனது ஆற்றலால் குடிகள் பகையைத் தடுத்துக் கொள்ளலாம். கடவுளுக்குச் செய்யும் பூசைகளாலும் அறச் செயல்களாலும் கேட்டை நீக்கிக் கொள்ளலாம். வயல்கள், சோலைகள் முதலியவற்றால் நாடு வளங்குன்றா நிலையில் இருத்தலைக் கம்பரும் தம் ராமாயணத்தில் கோசல நாட்டுச் சிறப்பைக் கூறும்போது,

கதிர்படு வயலின் உள்ள கடிகமழ் பொழிலின்உள்ள
முதிர்பல மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள
பதிபடு கொடியின் உள்ள படிவளர் குழியின் உள்ள
மதுவரை மலரில் கொள்ளும் வண்டெடன மள்ளர் கொள்
[வார்

என்று கூறினர்.

நாட்டிற்கு உறுப்பாக அமையவேண்டுவன சில உள. அவையே நீரும், மலையும், வன்மையான அரணும் ஆகும். நாடு நீரைக் கிணறு, சிறு குளம் ஏரி, ஆறு முதலியவற்றில் இருந்து பெற்று வருகிறது. இந்நீர் நிலைகள் குறைவின்றி இருந்தால், வானம் பெய்யாது நாடு வரண்ட காலத்தும் நீரைத் தரவல்லனவாக இருக்கும். மலை நாட்டிற்கு உறுப்பாக அமைவதனால் இரண்டு விதங்களில் நன்மையாகும். அரணாக இருந்து பகைவர்கள் எளிதில் நாட்டில் புகுதல் இயலாமல் இருக்கத் தடுத்து நிற்கும். மழைக் காலத்தில் உட்கொண்ட நீரை, வெயிற் காலத்திலும், வெளிப்படுத்தி ஆறுகளைத் தன்னிடம் இருந்து உற்பத்தி செய்து வரும். மேலும் மலைகள் இருந்தால், அகில், மிளகு, வாசனைப்பண்டம், வால் மிளகு, குங்குமம் ஆகிய பொருள்களைப் பெறலாம்.

பல பெரிய வீடுகளும் பல மக்களும் அமைந்து அரணுடைய கோட்டையினையும் உடையது புரம் என்றும், பல பெரிய வீடுகள் இருந்து, பலமக்களும் நிறைந்து கிராமத்தினும் பெரியதாய் நகரில் சிறியதாய் இருப்பது பட்டணம் என்றும், பெரிய பெரிய வீடுகளைப் பெற்றுப் பட்டணம் புரம் ஆகிய இவற்றிலும், நிலப்பரப்பில் பெரியதாய் உள்ளது நகரி என்றும் கூறப்படும். இதுவே மாவட்டம் இராஜதானி எனப்படும். இன்னமும் தெளிவுற இந்தக் கருத்தை விநாயக புராணம், அரசியல் படலம்,

இருபுனல் வாய்ந்த மலைதரு புனலும்
இடவிய நகர்களும் உடைத்தாய்ப்
பெருகவெப் பொருளும் ஒழிவற விளைக்கும்
பெருங்குடி களும்கலம் காலால்

பொருள்பல ஈட்டும் செல்வரும் மறையோர்
புரையறு தவத்தினர் துறவோர்
மருளறு கலைஞர் ஆதியோர் பலரும்
மன்லிவாழ்ந் திருப்பது நாடு

என்று கூறுகிறது.

இதே கருத்தைத் தணிகைப் புராணமும்,

வருபுனல் வாய்ந்த ஓங்கல்
வல்லரண் இருநீர் என்றும்
பொருவில்பல் உறுப்பிற் ருகிப்
பொங்கிய செல்வம் ஏமம்
வெருள்பிணி இன்மை இன்பம்
விளைவுநன் கணிந்து தாழ்வில்
திருவினர் தமக்கோர் சாலச்
செறிந்தது தொண்டை நாடு

என்று கூறித் தொண்டை நாட்டை இவ்வமைப்புக்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறது.

சிறு நூலாகிய கொன்றை வேந்தனும் "நீரகம் பொருந்திய ஊரகத்திரு" என்று எடுத்து மொழிகிறது. இதனுல் நாட்டுக்கு நீர் வளம் இன்றியமையாதது என்பது தெரிகிறதல்லவா?

நாட்டிற்கு உறுப்புக்கள் மட்டும் அமைந்து பலனில்லை. அழகும் நாட்டிற்கு இன்றியமையாதது. அழகு என்பது மக்களுக்கு மட்டும் இருக்கும் அழகன்று. நாட்டிற்கு அழகு என்று கூறப்படுவன நோய் இன்மையும், பசு, பொன் ஆகிய செல்வம் மிகுதியாக உள்ள

மையும், விளைவின் மிகுதியும், இன்பமும், காவல் உடைமையும் ஆகும். இன்பத்தினை விழாச் செய்தலாலும், யாகாதி செயல்களைப் புரிதலாலும், பெரியோர்களைப் பெற்றிருத்தலாலும், நிலவளம் நீர்வளம் மிக்கு இருப்பதாலும்,மாதர்கள்பால் இன்மொழியினை கேட்டலாலும், அழகினைக் காண்டலாலும், இதழை சுவைத்தலாலும், உச்சி மோத்தலாலும், உடலைத் தழுவுதலாலும் பெறலாம். விளைவினால் ஒரு சில தானியங்களை மட்டும் பெறுதலில் பயன் இல்லை. நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, சோளம், இராகி, எள், கொள்பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை முதலிய தானியங்கள் அனைத்தும் நாட்டில் விளைதல் வேண்டும். விளைவு என்பது விளையக்கூடிய எல்லாவற்றையும் குறிப்பதாகும்.

செல்வம் என்பது பொன், பசு மட்டும் அன்று. வெளிநாடு சென்று திரும்பிவரும் வணிகர் கப்பலிலும், வண்டியிலும், கொணரும் பொருள்களும், குடிகள் குறைவின்றித்தரும் வரிப்பணமும் சுரங்கத்தினின்று கிடைப்பனவும் வயல் முதலியவற்றில் கிடைக்கும் தானிய முதலியனவும் மலைதரும் பொருள்களும், செல்வம் எனப்படும்.

விழாக்கள் நாட்டிற்கு அழகு தரும் என்பதை அறிவிக்கவே, இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும், "அவை மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப் பங்குனி உத்திரமே, கருவூர் உள்ளி விழாவே என இவைபோல் வனவாம்." என்று கூறியுள்ளார். இன்னோரன்ன வளங்களும் அழகுகளும் உடையது நாடு என்பதை வற்புறுத்தவே விநயக புராணம்,

ஆதலில் குடிகள் ஆதியோர் தொகவும்
அழிவுசெய் குழுமுதல் அகன்று
போதவும் காவல் புரிபி ணி இன்மை
புகழ்திரு விளைவின்பம் அளைத்தும்
கோதற நாளும் மிகவுள தாகும்
குலைந்தயல் நாடுகள் உறினும்
மேதகத் தாங்கும் வருந்துறு தெவையும்
வேண்டுழி அளித்திடும் மைந்தா

என்று கூறுகிறது.

இந்த இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியமாகத் தொண்டை நாடு விளங்கியது என்பதைத் தணிகைப் புராணம் கூறியதை முன்பே கண்டனம். நாட்டின் அமைதிக்குக் காரணம்,

செல்வம் விளையுள் பல்வளம் செங்கோல்
கொல்குறும் பின்மை கொடும்பிணி இன்மையென்
றிவ்வகை ஆறும் நன்னாட் டமைதி

என்று பிங்கலந்தை கூறுவதையும் காண்க.

நாடு தன்னிடத்து ஒரு பொருளும் குறைதலின்றி எல்லாப் பொருள்களையும் தன்னகத்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு பொருள் கருதிப் பிற நாட்டிற்குப் போகும் தன்மையில் இருத்தல் கூடாது. தம்மிடம் வாழ்பவர் தேடி வருந்தாமல் அவர்கள் எளிதில் பெறக்கூடிய நிலையில் பொருள்களைப் பெற்று இருத்தல் வேண்டும். தேடி வருந்தச் செல்வத்தை அடைவிக்கும் நாடுகள் நாடு ஆகா. பிற நாட்டில் உள்ள பண்டங்கள் கலத்தாலும் காலாலும் கொணரப்பட்டிருப்பினும், தம் நிலத்தில் மிகுதியாக விளை

யின், பிற நாட்டை நாடிப் போகாமல் இருக்கலாம் அன்றே? பிற நாட்டை நாடி மக்கள் போதல் கூடாது. "பொருள் செய்வார்க்கும் அஃது இடம்" என்றல்லவோ சிந்தாமணி ஆசிரியரும் கூறியுள்ளார்?

காவிரிப்பூம்பட்டினம் இம்முறையில் தன்னகத்து எல்லா வளங்களையும் கொண்டிருத்தலால், பிற நாடு புகா நிலையில்இருந்தது என்பதைத்தன் பெயரினாலும் வெளிப்படுத்தி இருத்தலைப் பூம்புகார் என்னும் பெயரால் அறிகிறோம். அந் நாட்டு மக்கள் பிற நாடு செல்லார் என்பதை இளங்கோ அடிகளாரும்,

"பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்"

என்றனர்.

இதுவரை கூறியதில் இருந்து மேலே கூறப்பட்டவை அனைத்தும் ஒரு நாட்டின் இயல்பு என்பதை அறிந்தோம். ஆனால், இத்துணை நலனும் வளனும் பொருந்தி இருப்பினும், அந் நாட்டிற்கு அரசன் மிக மிக இன்றியமையாதவன். இக்கருத்தை முதுமொழி என்னும் நூல்,

"இறைசாரும் தென்னாடே நாடேனை நாடு
பிறவுடைய வேனும் பேருகாண்"

என்று தெரிந்து கூறுகிறது. இவ்வாறு நாட்டிற்கு மிக மிக இன்றியமையாத அரசனது இயல்புகளை அறிந்து கொள்ளுதற்கு முன், அவன் வாழ் இடமாகிய அரணைப்பற்றி முன்னர் அறிந்து, பின்னர் அவ் வரசனது இயல்பினை அறிவோமாக,

# 2. அரண்

அரண் என்பது நாட்டிற்கு ஓர் உறுப்பாக இருப்பதோடல்லாமல்,பகைவரால் அழிவு வந்துற்றபோது, நாட்டிற்கும், அரசனுக்கும் காப்பாகும் சிறப்பும் பெற்றதாகும். நாட்டுக்கு உரிய அரசன் எவ்வளவு வன்மை யுடையவனுயினும், அவனுக்கோ நாட்டிற்கோ பாதுகாக்கும் முறையில் அரண் அமையாதிருந்தால், அழிவே ஏற்படும். அறிவு, ஆண்மை, செல்வம், படை என்னும் இம்முப்பெருமைகளைப் பெற்ற அரசன் பகை வேந்தர்மேல் போருக்குச் செல்லும் போதும், தனக்கு உரிமையுடைய மகளிரையும் பொருள்களையும் பிறர் கைப்பற்றக்கூடாத நிலையில் அரண் அமைந்து இருத்தல் இன்றியமையாதது. அரணுக்கு உள்ளிருந்தோ, அன்றி வெளியில் இருந்தோ, போர் செய்வார்க்கும் துணையாக அமைந்து பாதுகாவலாக இருத்தல் வேண்டும். மதில்மீது இருந்து பாதுகாப்பவர்க்கும் காவலாய் இருப்பதும் அரணுக்குச் சிறப்பாகும். வீரர்க்கு அரண் ஒரு சிறந்த பொருளாகும். பொருள் படைத்தவர்க்கும் அரணே துணைப் பொருளாகும். இத்தகையதான அரணை அமைக்க வேண்டுவது அரசன் கடமை. பகைமேல் செல்லும் அரசன் ஒருவேளை பகைவரால் தோல்வி யுற்றபோது, நடுக்கடலில் அகப்பட்ட மரக் கலம் திசையறியாது கலங்குவதுபோலக் கலக்கம் உறவும் கூடும். அந்தத் தருணத்தில் அரசன் மீண்டும் தன் அரணில் வந்து தங்குதற்குரிய நிலையில் அவ்

வரண் பகைவர் கையில் சிக்காத நிலையில் விளங்குதல் இன்றியமையாதது.

இத்தகைய சிறப்பியல்புகளுக்குக் காரணமான அரண் அமைவதற்கு, எவை எவை அவ்வரணில் பொருந்தப் பெற்றிருத்தல் இன்றியமையாதது என்று வினவலாம். அவற்றையும் இனிக் கூறுவோமாக.

எக்காலத்தும் வற்றாத ஆழமும் உடைய அகழியையும், நீர் இன்றி முள் ஆணி முதலியன பரப்பப்பெற்ற நிலப்பரப்பையும், குளிர்ந்த நிழலின் குளிர்ச்சியால் பகைவரையும் அகப்படுத்தி, துன்புறுத்தும் காட்டையும் கொண்ட நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் ஆகிய இந்நான்கும் சூழப்பெற்றிருப்பது அரணுக்குச் சிறப்பாகும். சுக்கிர நீதியும், அரணியலைப் பற்றிக் கூறும்போது, "நாற்புறமும் மிக அழகாகத் தோண்டி அமைக்கப்படுவது அகழி அரண்; நாற்புறத்தும் மிக்க நீர்ப்பரப்பினை உடையது நீரரண்; பிறர் உட்புக இயலாதவாறு பள்ளம், முள், கல் ஆகிய இவைகளால் அமைக்கப்படுவது களர் நில அரண்; நீரும் நிழலும் இல்லாமல் நாற்புறத்தும் உள்ள பாலையாகிய மருநிலம் நிலவரண் ; மக்கள் வழக்கமில்லாத இடத்தில் நல்ல நீரைப் பிற்புறத்தே கொண்டு, மிக உயர்ந்திருப்பது மலையரண்; பெரிய முள்மரக் கூட்டங்கள் சூழ அமைக்கப்படுவது காட்டரண்" என்று கூறுகிறது. இவற்றுள் நீரும் நிலமும் மலையும் காடும் படைப்பிலேயே மூன்றற்குக் காவலாக அமைந்த இயற்கை அரண்கள். அகழியும் வெளி நிலனும் செய்குன்றும்,

காடு வளர்த்தலும் செயற்கை அரண்கள். நீர் அரணின் இன்றியமையாமையைச் சிறுபாணாற்றுப் படை,

'மணிநீர் வைப்பு மாலொடு பெயரிய
பனிநீர்ப் படுவில் பட்டினம்'

என்றும், மதுரைக் காஞ்சி, "மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்" என்றும் கூறுகின்றன.

சீவக சிந்தாமணி ஆசிரியர் அரணை ஒரு மாதாக உருவகப்படுத்தி,

அகழ்கிடங்கு அம்துகில் ஆர்ந்த பாம்புரி
புகழ்தரு மேகலை ஞாயில் பூண்முலை
திகழ்மணிக் கோபுரம் திங்கள் வாள்முகம்
சிகழிகை நெடுங்கொடி செல்விக்கு என்பவே.

என்று கூறியுள்ளார்.

சிறுபஞ்சமூலம் நால்வகை யரணுடன் மக்களும் இணைக்கப்பட்டு ஐந்து ஆக்கி, இவ் வைந்தினையும் அரணாக உடையவனையே வேந்தனாக நாட்டுக என்பதை,

நீண்டநீர், காடு, களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு—மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரணு உடையானை
வேந்தனு நாட்டல் விதி"

என்ற பாட்டின் மூலம் கூறுகிறது.

மேலே கூறப்பட்ட நால்வகை அரண்களுள் மதில் அரண் எவ்வாறு இருக்கவேண்டும் எனில், பகைவர்கள் ஏணி சாத்தி ஏறி, உள்ளேவர இடங்கொடாத

உயர்வையும், வெளியில் உள்ள பகைவர் அகழ முடியாத அத்துணை அடியகலமும், உள்ளிருந்து போர் புரிபவர் போர் செய்தற்குரிய மேற்புறமும் சுண்ணங் கலந்து கருங்கல் செங்கற்களால் கட்டப்பட்டுக் குத்திப் பெயர்க்க முடியாத திண்மையும், எந்திரப் பாவை முதலிய பொறிகள் தன்மீது இருக்க முதலையுடைய கிடங்கையும் கொண்டு பகைவர் நெருங்கா வண்ணம் அமைந்த அருமைப்பாடும் பெற்றிருத்தல் வேண்டும். இந்த அமைப்பு முறையினைச் சுக்கிர நீதி என்னும் நூல் கூறும்போது,

"மதில் சுவரின் அடிப்படை அதன் உயரத்தின், சம அளவாதல், பாதி அளவாதல் மூன்றில் ஒரு கூறுதல் இருத்தல் வேண்டும். அதன் அகலம் உயரத்தின் பாதி அளவு இருத்தல் வேண்டும். அதன் உயரம் கள்வரால் கடக்க முடியாவண்ணம் வேண்டிய அளவு உயர்ந்திருத்தல் வேண்டும்" என்று கூறுகிறது.

இதற்கு உதாரணமாக மதுரைமா நகரின் மதில் அரண் தன் இடத்தில் பலவகைப் பொறிகளைப் பெற்றுப் பகைவர் நெருங்காவண்ணம் நகரைக்காத்து வந்தது என்பதைச் சிலப்பதிகாரத்தால் நன்கு அறியலாம்.

"வளைவில் பொறியும் அயில்செறி நிலையும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்

தூண்டிலும் தூடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் உழுவிறல் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாள்கொடி நுடங்கும்"

என்பது அச்சிலப்பதிகாரப் பகுதி.

அரண் தன்னைப் பகைவர் தகர்க்கா வண்ணம் காத்துக் கொள்ளவேண்டிய வெளிப்புற இடம் சிறியதாய் இருந்தாலும், உள்ளே அகன்ற இடத்தைத் தன்னகத்துக்குக் கொண்டிருத்தல் இன்றியமையாதது. பகைவர்கள் ஒருநாள், இருநாள் முற்றுகையிட்டோ இடித்தோ அதனைத் தாக்க முயலும்போது, அவர்களால் அவ்வாறு செய்ய இயலாமல் அவர்கள் மன எழுச்சியையும் கெடுப்பதாக இருப்பது அவசியமாகும். காக்க வேண்டிய இடம் சிறிது என்றது, ஒருபக்கம் மலையையும் மற்றொரு பக்கம் காட்டையும், வேறொரு பக்கம் நீரையும் பெற்றிருத்தலாகும். கோட்டையின் வாயில்கதவுகளும் கோட்டைக்குச் செல்லும் வழிகளும் சிறியனவாய் இருத்தலையும் ஈண்டு நினைவு கொள்க. சிறுபடையினாலும் காத்துக் கொள்ள வல்ல தன்மையுடையதும் அரணின் இயல்பாகும். அகன்ற இடம் அரணில் அமைதலாவது, பகைவர் முற்றுகை இட்ட காலத்தும் உள்ளிருப்பவர் வருத்தமில்லாமல் இருப்பதாகும்.

எக்காரணம் பற்றியும் அரண் வெளியேயுள்ள பகைவர்களால் கைப்பற்றற் குரியதாக இருத்தல்

கூடாது. அதாவது பிரதானமான காவல், புறத்தி லுள்ள அகழி, மதில் மீதுள்ளபொறிகள், உள்ளிருந்தே பகைவர்களோடு போர் செய்தற்கான வசதிகள் முதலானவற்றைப் பெற்று, அருமையுடையதாக இருத்தல் என்பதாம். பகைவர் வெளியே முற்றுகை இட்ட போது, அரணுக்குள் அடைபட்டுக் கிடந்தாலும், உணவிற்குக் குறையாத வசதிகளையும் அரண் பெற்றிருத்தல் வேண்டும். பகைவர் செலுத்தும் ஆயுதம் தம்மீது படாவகையில் உள்ளிருப்பவர் விடும் படை பகைவரைத் தாக்கவல்லதான அமைப்பும் மதிலின் உள்ளேயும் அமைந்திருத்தல் அரணுக்குச் சிறப்பாகும். இம்முறையில் அரண் இருந்தது என்பதைப் பாரியின் அரண் அமைப்பின் முறையினின்று நன்கு உணரலாம். கபிலர் பாரியின் அரணை முற்றுகை இட்ட மூவேந்தர்களுக்குப் பாரியின் அரண் மாண்பினை அறிவுறுத்துகையில்,

ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்வீழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே

என்று கூறியருளினர்.

இக்கருத்தையே சுருங்கிய அளவில் இனியவை நாற்பது,

"பற்பல தானியத்த தாகிப் பலருடையும்
மெய்த்துணையும் சேரல் இனிது"

என்று கூறுகிறது.

அகத்தில் உள்ளவர்க்கு உணவைமட்டும் உடைய தாய் அரண் இருத்தல் இன்றி, நாற்பெருஞ் சேனையும் உலாவுதற்கு வேண்டும் வீதியும், பூவும், சாந்தும், நீரும், நிழலும், பொதுவியர்க்கு உரிய மகளிரும், பிறவும் பெற்று விளங்குதல் வேண்டும். மேலும், அரண் பிறர்க்குத் தோற்றுமல் கள்ளவழியில் நீரைப்பெற்றும், முற்றுகை இட்டார்க்கு நீர் இன்மையுமாக அமைதலும் அரணின் இயல்புகளில் குறிப்பிடத் தக்கவையாகும்.

அரண் தன்னிடத்து நுகரப்படும் எல்லாப் பொருள்களையும், கொண்டிருத்தலோடு படைக் கலங்களையும் பெற்றுப் பகைவர் தாக்கவரும்போது அவ்வரணைக் காக்கவல்ல வீரமுடைய நல்ல ஆட்களையும் தன்னகத்துக் கொண்டு நிலவுதல் இன்றியமையாதது. அவ்வீரர்களும் ஏனோதானோ என்றிராமல் அரசனிடத்து அன்பும் மானமும் வீரமும், சோர்வின்மையும் நல்லார் இணக்கமும், தெய்வ சிந்தனையும், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கமும் ஆகிய பண்புடையவர்களாக இருத்தல் இன்றியமையாதது. உற்ற இடத்துஉதவவல்லவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

பகைவர்கள் அரணைப்பற்ற எண்ணும்பொழுது பலவகை உபாயங்களை மேற்கொள்வர்; வெளியில் இருப்பவர் உள்ளேபோக ஒட்டாமலும் தடைசெய்து நெருங்கிச் சூழ்வர்; இவ்வாறின்றி, அரணுக்கு உள்ளிருப்பவர் சோர்ந்துள்ள சமயம் பார்த்துப் போர் தொடங்குவர். அன்றியும் உள்ளிருப்பவர்களின் உளவு தெரிந்தவர்களைக் கொண்டு வஞ்சித்து மாறு படுத்

ஆவர். இவ்வாறான மூவகை உபாயங்களாலும் அரண் பகைவர்களால் பற்றற்கரியதாக இருத்தல் வேண்டும். அரண் தன்னிடத்து உள்ளே இருப்பவர்கட்கு வேண்டிய பொருள்களைத் தன்னகத்து இருக்கப் பெறுவதால், பகைவர்கள் மேற்கொண்ட முதல் உபாயம் செல்லாது. நல்ல வீரர்களைக்கொண்டு அரண் காக்கப்படுவதால், வைரிகளின் மேலே கூறப்பட்ட ஏனைய இரண்டு உபாயங்களும் செல்லமாட்டா. மேலும், அரணுக்கு அமைய வேண்டிய பண்புகள் பலவுள. அரணைப் பற்ற வரும் பகைவர் தமது முழுப் படைவன்மையுடன் வருவர். அப்படித் தம் படை பலம் கொண்டு எதிர்த்தபோது, அவர்களாலும் பற்றற்கரிய பெருமையுடன் அரண் இருக்க வேண்டும். உள்ளிருப்பவர்களும் எதிரிகளை எதிர்க்கும்போது வெற்றி தரத்தக்க வசதிகளைப் பெற்றும் இருக்க வேண்டும். அவையே வெளியில் உள்ளவரைச் சூழ்ந்து, நொந்து உள்ளிருப்பவரைக் காக்கவல்ல வீரர்கள் வெல்ல இடம் தருவதும், புறத்தில் முற்றுகையிட்ட வீரர்கள் மதிலை நெருங்கவிடாமல், தம் மதிலின்மேல் இருந்து வெல்ல வகை செய்வதும், உள்ளிருப்பவர்களால் முன் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் உள்ளே வர மறைமுகவழியையுடையதாய் இருத்தலும், வெளியில் உள்ள பகைவரையும் அரசனிடத்தில் பற்றுக்கொண்டு முற்றுகை இட்டவர்கள் அனைவரையும் அழித்து வெல்ல வல்லதும் ஆகியவை. இவற்றிற்கு எல்லாம் வசதி தரத்தக்க முறையில் இருக்க வேண்டுவது அரணின் அமைப்பாகும்.

அரண் தன்னிடம் பகைவர் போர் செய்யத் தொடங்கிய போதே, அவர்கள் அழியும்படி போர் செய்யவல்ல வீரர்களைக் கொண்ட பெருமை பெற்றிருக்க வேண்டும். பகைவர்கட்குத் தெரியாத பல சுரங்கவழி, கீழ் அறைவழி ஆகிய கள்ள வழிகளைக் கொண்டு, அரணுக்குரியவர் வெளியே போகவும் வரவும் வசதிகளைப் பெற்று இருக்கவேண்டும். பகைவர்கள் எதிர்த்தபோது, அரணுக்குரிய வீரர் அம்பினை எய்தும், சக்கரம், வேல் முதலியவற்றை வீசியெறிந்தும், ஈட்டியால் குத்தியும், கத்தியால் வெட்டியும் பொருதற்கு உரிய வசதிகளை அரண் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

காலிங்கர் அரணில் அமைந்த வீரர் இயல்பைக் கூறும்போது, "பகையரசன் வெளியே இருந்து போர் தொடங்கியபோது அவர்கள் தலை சாய்ந்து ஓடும்படி அரணுக்குள் இருக்கும் வீரர் வெற்றி கொள்ளக் கல், பொறி, பாம்பு, கனல், கடிகுரங்கு, வில் பொறி, வேல் வெந்தீ வட்டு, காய்ச்சிய மணல், இருப்பு உலக்கை, தூண்டில், விசைத்து எறியும் கவண் ஆகிய அமைப்புப் பெற்றிருத்தல் வேண்டும்" என்றும் கூறினர்.

இதனை விநாயக புராணம்

மருங்கு நீர்க்கிடங்கு வெள்ளிடை கானம்
மலையுற அகன்றுயர்ந் துரங்கொண்டு
ஒருங்குபல் பொறியும் அணிந்துபேர் இடத்தாய்
உறுசிறு காப்பினல் வீரர்

பெருங்குபல் பொருளும் தழுவிளத் திறத்தும்
நேரலர் கொளப்படா தாகிச்
சுருங்கையா திகளும் பொதிந்தகத் துறைவோர்
தொழிலினி தாற்றுவ தரண்.

என்று கூறுகிறது.

அரண் எல்லா வசதிகளைப் பெற்றும் முழுப் பலனையும் தரவல்லதாகாது. தகுதியோடு போர் செய்ய வல்ல வீரர்களைப் பெற்றிருப்பதும் மிக மிக இன்றியமையாத தாகும். தகுதி அறிந்துபோர் செய்யும் வீரர்கள் சும்மா இருத்தல் கூடாது. அளவு தெரிந்து காரியங்களைச் செய்யவேண்டும். பொருந்தாத வற்றைச் செய்தல் கூடாது. இப்படி அறிந்து செய்யத் தகுதி இல்லாத வீரர்கள் அரணுக்குரியவரா யின், அரண் அழிந்தேபோகும். ஆகவே, அரணது மாட்சிக்கு வீரர் பாதுகாவல் வேண்டற்குரியதென்க. இத்தகைய மாட்சிமை பெறாத அரண்கள் அழிந்தன என்பதை,

" வல்லதிகன் தன்னரணம் வான்வளவன் சேனைசெலத்
தொல்லைவலி மாண்டது"

என்ற சோமேசர் முது மொழி வெண்பாவாலும்

சம்மரனுர் செய்புன் நகையில்வெந்த வேஅசுரர்
மும்மதிலும் மேனுள்.

என்ற முருகேசர் முதுமொழி வெண்பாவாலும் அறியலாம்.

## 3. குடிமை

நாடும், அரணும் நன் முறையில் அமைந்திருப்பினும், குடிமக்கள் இல்லாதபோது அந் நாடும், அரணும் நன் முறையில் அமைந்திருந்தும் பயன் உறாது. ஆகவே, நாட்டில் குடிமக்கள் நிறைந்து வாழ்தல் வேண்டும். அக் குடிமக்களும் வெறும் மானிட வடிவம் தாங்கிமட்டும் இருந்து பயனில்லை. "உயர்திணை என்பனார் மக்கட் சுட்டே" என்று ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியனார் கூறிய மக்கள் பண்பு வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். நல்ல குடியில் பிறந்து, மனம், வாக்கு, காயம் ஆகிய இம்மூன்று கரணங்களின் செயல்களாகிய நினைப்பது ஒன்று, சொல்வது ஒன்று, செய்வதொன்று என இருக்காமல், நடுநிலைமை தவறாது தம்முள் ஒத்து, பழிபாவங்களுக்குக் காரணமான செயல்களைச் செய்வதற்கு அஞ்சும் மக்களே நாட்டிற்குத் தேவையானவர். இப்பண்புடைய மக்கள் தமக்குக் கூறிய நிலைகளினின்று, அறங்களிலிருந்து வழுவாது ஒழுகும்ஒழுக்கம் உடையராயத்திகழ்வர் : உண்மையினின்றும் சிறிதும் விலகார்; நாணமும் உடையராய் இருப்பர். இம் மூன்றும் முறையே மெய்க்கும், மொழிக்கும், மனத்திற்கும் உரிய பண்புகள். ஆதலின், மனமொழி மெய்களில் தூய்மையாக, இருப்பவர் மேலே கூறப்பட்ட ஒழுக்கம், உண்மை, நாணம் ஆகிய இம்மூன்று பண்பினின்றும் தவறமாட்டார். இம் மூன்றும் நற்குடியில் பிறந்த மக்கள் பண்புகள் என்பதை,

"சான்றாண்மை, சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயும்
மலைதவழ் வெற்ப படாஅ, பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு"

என்று கூறி நாலடியும் வற்புறுத்துகிறது. இக்கருத்தையே வலியுறுத்தி விநாயக புராணமும்,

உன்னல் மொழிதல் செயல்மூன்றுத்
தொழுக்கம் வாய்மைநாண் இழுக்கார்
மன்னு மனையில் பிறந்தார்கள்
மலர்தல் ஈகை இகழாமை
நன்னர் மொழியும் அவர்க்கேயாம்
நன்மை பயவா வினைவறுமை
துன்னல் இடத்தும் புரியார்கள்
ஏம கண்டா இனிஅறிமோ.

என்று கூறுகிறது.

நாட்டில் வாழும் நல்குடி மாந்தர் இம் மூன்று பண்புகளுடன் ஏழைகள், தம்மை நாடி வந்தபோது, முகமலர்ச்சியும் தம்மிடம் உள்ளதைக் கொடுக்கும் ஈகைப் பண்பும், இனிய சொற்களைப் பேசும் இன்சொல்லும் எவரையும் இகழாத இயல்பும் பெற்றிருத்தல் வேண்டும்.

"இனநன்மை இன்சொல்லொன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை எல்லாம்—கனமணி
முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள"

என்னும் நாலடிச் செய்யுளைப் படிப்பின் இக் கருத்து, மேலும் நன்கு விளங்கும்.

இப்பண்பு பெற்ருேர், ஒழுக்கத்தினின் று தவருர் என்பது கூருமலே அறியக் கிடக்கும் உண்மை அன்ருே? இத்தகைய குடிமக்கள் கோடியளவாகப் பொருள் பெறினும், தம் ஒழுக்கக் குறைவுற்குரிய செயல்களைச் செய்தல் கூடாது. அவர்கள் தாம் கொடுக்கும் பொருள் சுருங்கியபோதும் தம் பண்புடைமையில் இருந்து நீங்கமாட்டார். இம்முறையில் தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்கள் பலர். குங்கிலியக்கலய நாயனர் தாம் வறுமையுற்றுச் சுருங்கிய காலத்திலும், தம் பண்பில் குறையாமல், தம் கடமைகளைச்செய்து வந்திருக்கிருர். இவரையே இப்பண்புக்கு எடுத்துக் காட்டாகச் சோமேசர் முதுமொழி வெண்பாவும்,

"மங்கிலியம் விற்றும் வழாதுபணி செய்துவந்தார்
துங்கமறை தேர்கலயர் சோமேசா"

என்று பாராட்டுகிறது. மேலும்,

"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்,
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையின் குன்ருர்,
எற்றென்றும் இல்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தன் சேர்ந்தார்க் கசைவிடத் துற்ருவர்"

என்று நாலடியாரும்,

"கூஉய்க் கொடுப்பதொன் றில்லெனினும் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்ருரே துன்பந் துடைக்கிற்பார்"

என்று பழமொழி நானூறும்.

"நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனலும்
இல்லையென மாட்டார் இசைந்து"

என்று நல்வழியும் கூறுகின்றன.

நாட்டில் வாழ்வு நடத்தும் நற்குடி மக்கள் தமக்குள் ஒத்து வாழ்தல் வேண்டும். அவர்கள் வறுமையுற்றபோது தம் நல்வாழ்வுமீறி வஞ்சனையான மனத்துடன் வாழ்தல் கூடாது. அமைவு இல்லாதனவாகிய செயல்களைப் புரிதல் கூடாது. இத்தகையராகிய நாட்டு நற்குடிமக்கள் இயல்பை மேலும் சிறப்புறும் வகையில் நாலடியார்,

"வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயில் இசைந்து"

என்றும்,

"கள்ளார்கள் உண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்"

என்றும்,

நாம்பெருந்து நல்கூர்ந்தார் ஆயினும் சான்றோர்
குராம்பெழுந்து குற்றம்கொண் டேறார்—உரங்கவறு
உள்ளமெனும் நாரினல் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை"

என்றும் கூறுகிறது.

"ஏன் இவ்வளவு விழிப்புடன் நற்குடி மக்கள் இருக்கவேண்டும்?" என்னும் ஐயம் எழலாம். நற்குடி மக்களிடத்தில் சிறு குற்றம் காணப்படினும், அது அழியாது. என்றும் அவர்கட்குப் பெருங் குற்றமாகவே அது காணப்படும். சந்திரன் ஒளியுடையனுயினும், அவனிடத்துள்ள களங்கம் எப்படி நன்கு

கண்ணுக்குப் புலப்பட்டுக் களங்கமுடையவன் என்னும் குற்றத்திற்கு அவனை ஆளாக்கி இருக்கின்றதோ, அதுபோன்ற குற்றத்திற்கு நன்மக்கள் ஆளாகிவிடுவர். ஆகவே, நற்குடிப் பிறந்தவர் தம்மிடம் சிறுகுற்றமும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இதனை வலியுறுத்தவே தமிழ் நூல்கள் பலவும் அவர்கள் குற்றம் மறையாது நன்கு விளங்கும் என்பதைப் பல உதாரணங்களாலும் விளக்கியுள்ளன.

> "பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்
> மதிப்புறத்தில் பட்ட மறு"

என்று அறநெறிச்சாரமும்,

> நிரைதொடி தாங்கிய நீடோள் மாற்கேயும்
> உரையொழியா யாகும் உயர்ந்தோர்கண்—குற்றம்
> மரையாகன் றூட்டும் மலைநாட மாயா
> நரையான் புறத்திட்ட சூடு''

என்றும்,

> "கன்றி முதிர்ந்த கழியப்பல் நாள்செயினும்
> ஒன்றும் சிறியார்கண் என்றாலும்—தோன்றாதாம்
> ஒன்றாய்விடினும் உயர்ந்தார்ப் படும்குற்றம்
> குன்றின்மேல் இட்ட விளக்கு"

என்று பழமொழி நானூறும்

> "பெருவரை நாட பெரியார்கண் தீமை
> கருநரைமேல் சூடேபோல் தோன்றும்."

என்று நாலடியாரும்,

"வந்துதோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறம் கிளர"

என்று மணிமேகலையும் கூறுதலைக் காண்க.

நற்குடிப் பிறந்தவர் பெரும்பாலும் அன்புடையராகவே இருத்தல்வேண்டும். இவ்வன்பு இல்லாது இருப்பாராயின், அவர்கள் நற்குடிப் பிறப்பினர் என்று எண்ண இயலாது. அவர்களின் குலப்பிறப்புப் பற்றி ஐயம்தான் தோன்றும். ஈரமாகிய அன்பு இல்லையானால், கடுஞ்சொல்தான் அவர்கள்பால் அமையும். பிறர்க்கு ஈயாத லோபத்தன்மைதான் மிகும். இனிய முகமும் இராது. இகழும் பண்பே மிகுந்து காணப்படும்.

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப

என்ற முதுமொழிக் காஞ்சியடிகளாலும்,

மன்னும் அரண்புலியூர் வாய்மை மதியானை
தன்னை வயின்குறைஎன் றையுற்றார்

என்ற முதுமொழி மேல்வைப்பு என்னும் நூலின் அடிகளாலும் நற்குடிப் பிறந்தார் அன்புடையவரா இருத்தல் வேண்டும் என்பதும், அது இல்லாதவர் குலப்பிறப்பு ஐயத்திற்கு இடந்தர வல்லதாக இருக்கும் என்பதும் அறியவருதலைக் காண்க.

இக்கருத்தை ஒரு வரலாற்று நிகழ்ச்சியினால் வற்புறுத்த வேண்டினால், புறநானூற்றில் கண்ட

ஒன்றை உதாரணமாகக் கூறலாம். சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும், தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தனர். அப்போது, தனக்குத் தோல்வி வரும் என்று அறிந்த மாவளத்தான் ஒரு காயை மறைத்துக் கையில் வைத்திருந்தான். இதனை அறிந்து கொண்ட புலவர், வெகுண்டு உடனே "நீ சோழன் மகன் அல்லை" என்றுகூறினார். இதன் பொருள் யாது? "உன் பிறப்பு ஐயத்திற்கு இடந்தருகிறது. நற்பிறப்பாயின், இந்த இழிசெயலைச் செய்யாய்" என்பதல்லவா? அவனை நோக்கி அப்புலவர் பாடிய பாடல்,

" ஐயமுடையேன்
ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கிது "

என்பது.

நற்குடிப் பிறந்தார் இன்னார் என்பதை அவர்கள் பேசும் பேச்சின் மூலமாகவும் அறியலாம். குணமும் இனமும் பேச்சால் தெரியவரும். இதனை உதாரணமுகத்தால் விளக்கினால், நிலமானது அதன் கண் மறைபட்ட விதை, முளையின் மூலம் காட்டுவது போல எனக் கூறலாம். அதாவது மறைபட்டிருந்த விதை இன்ன விதை என்பது, முளையால் அறியவருவது போல், மக்களின் வாய்ச்சொல் நல்ல குடியினர் தீய குடியினர் என்பதை வெளிப்படுத்திவிடும் என்பதாம். ஆகவே, நற்குடி மக்கள் தம் வாயால் தீயனவற்றைக் கூறமாட்டார். கூறவும் கூடாது.

' வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து'

என்ற நாலடி பாட்டால் இதனை நன்கு அறியலாம்.

மேலும் தினகர வெண்பா,

" இன்னநலம் இன்னகுலம் இன்னமா பென்றிகழும்
சின்னம் பலவேன் தினகரா—முன்னும்
நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் "

என்று கூறுவதையும் இங்கு நினைவு படுத்திக் கொள்ளலாம்.

மேலே கூறப்பட்ட பண்புகள் நற்குடி மக்களுக்கு இன்றியமையாதவை என்பதை அறிந்தோம். இன்னோரன்ன பண்புகள் அமையப்பட்டபோது, செருக்கு மிஞ்சுதலும் கூடும். அது மிஞ்சுதல் கூடாது. எவ்வளவு நற்குண நற்செயல்கள் இருப்பினும், எவரிடத்திலும் பணிவுடையராக நற்குடிப் பிறந்தார் நடந்து கொள்ளுதல் முறையாகும். ஒருவன் தனக்கு நலன் உடைமையை வேண்டினுல், அவன் நாணம் உடையனுதல் வேண்டும் அல்லவா? அதுபோலவே குலம் வேண்டினுல், எவரிடத்திலும் பணிதல் வேண்டும். எவரிடத்தும் என்பது அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தமக்கு முன் பிறந்தவர், தாய், தந்தையர் முதலானவர்களிடத்திலும் என்க. பணிவுடையவராய் இருத்தல் என்பது, மேலே கூறப்பட்ட பெரியவர்களைக் கண்டபோது, இருக்கைவிட்டு எழுந்து மரியாதை செய்தலும், எதிர் சென்று வரவேற்றலும் ஆகிய பணிவுகளாம்.

' இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன குடிப்பிறந்தார்
குன்று ஒழுக்கமாக் கொண்டார்.

என்ற நாலடியாரையும் காண்க.

" அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டல் முறை."

என்ற புறப்பொருள் வெண்பா மாலையால், பெரியோர்கள் முன் பணிவாய் நடத்தலைப்பற்றிக் கூறப்பட்டதையும் அறிக.

# 4. குடிசெயல் வகை

குடிமக்கள் இயல்பு இன்ன என அறிந்தோம். அக் குடிமக்கள் பண்புடையவர்களாய் இருந்தால் மட்டும் போதாது. அவர்கள் தாம் தோன்றியகுடிக்கு யாதோர் இழுக்கும் நேராவண்ணம் அக்குடியினை மேன்மேலும் உயர் நிலையில் திகழ முயறல்வேண்டும். தன்குடியில் பிறந்த ஒருவனுக்கு எது பெருமை? தன் குடியை உயரச் செய்தற்கான செயல்களைச் செய்து முடித்தலே பெருமை. பல்வேறு வகையான பயனுடைய செயல்களைச் செய்தால், செல்வமும் புகழும் பெற்று உறவின் முறையாரும் கிளைஞரும் பெருகி நல் வாழ்வு வாழ்வர். இங்ஙனம் தம் நாடும், தம் குடியும் உயரும்படி எப்போதும் அவற்றிற்கு ஏற்ற செயல் களைச் செய்பவர், தம் கரத்தைப் பிற ஒன்றற்கும் பயன்படுத்தவும் மாட்டார். அப்படிப் பயன்படுத்தா மையைப் பெருமையாகவே கருதுவர். இம்முயற்சியில் ஈடுபட்டோர் உயர்வர் என்பதை விநாயக புராணம்,

'எடுத்த கருமம் முற்றுமை
எய்தின் முடித்தே விடுவல் எனத்
தொடுத்த முயற்சி அறிவிரண்டில்
தோலா துயர்வார் குடிசெய்வார்''

என்று கூறுகிறது.

குடியை உயர்த்த செயல் தேவை என்று அறியபோது, அச்செயல் முயற்சி, இயற்கை அறிவு

செயற்கை அறிவு இரண்டும் ஆகிய நிறைந்த அறி வுடைய இடையறாத செயலாக இருக்கவேண்டும் அறிவுடன் செய்யும் செயல்களில் ஈடுபடும்போது நல்லதையும், தீயதையும்பகுத்து அறிந்து செய்ய படவேண்டி இருத்தலின், அறிவு இன்றியமையா தாகின்றது.

இவ்வாறு அறிவும், முயற்சியும் கொண்டு செயல் களைச் செய்பவனுக்கு ஊழும் துணைசெய்யும். அவ் வூழ் ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு "குடியை உயர்த்துவேன்" என்று செயல் புரிபவனுக்கு முன்னே நின்று, அவனுக்கு உதவிபுரியும். ஊழ் துணை செய்யும் என்பதனால், தெய்வமும் முன் னின்று அவனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கும் என்பதையும் உணரலாம். குடியை உயர்த்த பாடு பட்ட ஒருவர்க்குத் தெய்வம் உதவியதைப் பாண பத்திரர் வரலாற்றாலும் அறியலாம். பாணபத்திரர் பொருட்டுச் சிவபெருமான் விறகு வெட்டியாகவந்து ஏமநாதனை விரட்டிய வரலாற்றைத் திருவிளையாடல் புராணத்தில் விறகுவிற்ற படலத்தின் மூலம் அறிய லாம். இதனைச் சுருக்கி, முதுமொழி மேல்வைப்பு வெண்பா என்னும் நூல்,

"பாணன் குடியுயரப் பண்டரனும் கூடல்வரு
பாணனெனச் சாதாரி பாடுதலால்"

என்று கூறுகிறது.

குடி உயரச் செய்வதற்கு விரைந்த முயற்சி தேவை. அம்முயற்சி தானே நல்ல முடிவைத்தரும்

குடி உயரப்பாடுபடும் ஒருவனை உலகம் தன் சுற்ற மாகத் தழுவி ஏற்றுக்கொள்ளும். அப்படி ஏற்றுக் கொள்ளக் குற்றமற்ற வழிகளாகிய அறநீதிகட்கு உட்பட்ட செயல்களைச் செய்ய வேண்டும். தான் பிறந்த குடியினைத் தாங்குதலே அன்றித் தன்னை அடைந்தோர் யாவரையும் தாங்கும் தன்மைய னையும் அவன் இருத்தல் வேண்டும்.

தன் குடியினுள்ளாரை உயரச் செய்து அவர் களைத் தன்வழிப் படும்படி செய்தலே நல்ல மகனுக்கு நல்லாண்மை எனப்படும். பகீரதன் தன் இல்லின் ஆண்மையை நிலைநிறுத்தியவன் அல்லவா? அந்த நல்லண்மை அவன்பால் இருந்ததனுல் அல்லவோ, அவன் முன்னோர்கள் நற்கதியடைந்தனர்? அவன் செயலைச் சிவசிவ வெண்பா,

"துய்ய பகிரதனும் தொல்லரசர் அல்லலறச்
செய்தவம்என் சொல்வாம் சிவசிவா"

என்று மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறது. இங் ஙனம் தன்குடியின் உள்ளாரை உயர்த்தப் பாடுபடும் ஆண்மையே, நல்லாண்மை ஆகும். இத்தகைய ஆண்மையின்முன் போர்த் தொழிலின்முன் காட்டப் படும் ஆண்மையும் எதிர் நீக்க வல்லது ஆகாது.

ஈண்டு ஒன்றை நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். குடியினை உயரச் செய்தலும், அதன் பாரத்தைப் பொறுத்தலும், ஒரு குடியில் பிறந்த பல ராலும் மேற்கொள்ளக் கூடியவை என எதிர் பார்த் தல் தவறு. எப்படிப் போரில் ஈடுபட்ட வீரர்கள்

பலராயினும், போரைத் தாங்கும் பொறுப்புச் சேனுதிபதியினைச் சார்ந்ததோ, அது போலக் குடிப்பாரத்தைத் தாங்கவல்ல ஆற்றல் உடையார்க்கே மேலே கூறிய பொறுப்புக்கள் உரியவை ஆகும். இதனுல் ஒரு குடியில் பிறந்த பலரும் "நமக்கென்ன? மூத்தவன் பார்த்துக்கொள்வான்" என்று இளையனும், "இளையன் பார்த்துக் கொள்வான்" என்று முதியனும் எண்ணிக் கொண்டு வாளா இருத்தல் கூடாது. எல்லோரும் ஒன்றுகூடி உற்றூர் மேல் வருகின்ற துன்பங்களை வென்று அழிகின்ற நிலையில் உள்ள குடியினை அழியாது தாங்குதல் வேண்டும். அதுவே பெருமையாகும். ஈண்டு "ஆர்த்தார் (ஆரவாரம் செய்தவர்) எல்லாம் போருக்கு உரியர் அல்லர்" என்னும் பழமொழியினையும் நினைவில் வைத்துக் கொள்வோமாக.

குடியினை உயரச் செய்யும் இயல்புடையவர்கள் சோம்பலையும் மானத்தையும் கைவிடுதல் வேண்டும். மேற்கொண்ட காரியத்தை விரைந்து செய்தல் வேண்டும். "தக்க காலம் வரட்டும்" இதுபோது வெயில், மழை, பனி, என்று சொல்லிக்கொண்டு சோம்பி இருந்தாலும், மானத்தை எண்ணி இருந்தாலும் குடி அழியுமே அன்றி உயராது. "பிறர் நல்வாழ்வுற நான்தானு பாடுபடவேண்டும்?" என்று எண்ணுதலும் கூடாது. இவர்கள் இன்ப நுகர்ச்சியைக்கூட விரும்பக் கூடாது. பார்த்தீர்களா குடியை உயரச் செய்யப் பாடுபடுகின்றவர்களுடைய பொறுப்புக்களை?

இதனுல் இன்பம் என்பது இவர்கட்கு இல்லை என எண்ண வேண்டா. குடும்பத்தில் உள்ளார்க்கு

உடம்பைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப்பற்றி வருவனவும் தெய்வத்தைப் பற்றி வருவனவுமாகிய துன்பங்கள் வராமல் பாடுபடுவதால் துன்பம் தோன் ருது இன்பமே தோன்றும். வெளித்தோற்றத்திற்கு உடம்புக்கு வருத்தம் தருவது போலக் காணப்பட்டா லும், அவ்வருத்தம் இம்மைக்கும் மறுமைக்கும் இன் பம் தரவல்லதாகும். ஆகவே, துன்பம் வரினும் நாணு தல் கூடாது. நாணுமையால், புகழேவரும். துன்பம் பொறுத்து நாணுதவனே ஆண்மகனும் ஆவான். இத்தகைய நல்ல ஆண்மை யுடையவனைப் பெருத குடியானது ஆதரவற்று அழிந்துபோகும் என்று கூறவேண்டுமா? குடியாகிய மரம் துன்பமாகிய கோடரியால் அழியாதிருக்கப் பலவான் தேவை என்பதை நாம் மறத்தல் கூடாது. இத்தகைய நல்ல பலவானுன ஆண்மகன் இல்லாமையால் அன்ருே திருதராட்டிரனது குடியே அழிந்தது. இதனைத் தானே சோமேசர் முதுமொழி வெண்பா,

"மற்றிருத ராட்டிரன் சந்தானமெலாம் மாய்ந்ததே
சுற்றுநீர்த் தென்குளத்தூர்ச் சோமேசா"

என்று கூறுகிறது? எவ்வாறேனும் தம் குடும்பம் அழியாதவாறு காத்தல் குடிமகன் கடமை என்க.

தூங்குசிறை வாவலுறை தொல்மரங்கள் என்ன
ஓங்குகுல மைய அதனுள்பிறந்த வீரர்
தாங்கல் கடன்"

என்னும் திருத்தக்கதேவர் வாக்கையும் காண்க. எனவே, நாட்டுக்கு நல்ல குடும்பமும், அக்குடும்பம் அழியாதிருக்க நல்ல ஆண்மை மிக்க ஆண்மகனும் தேவை என்பதை அறிவோமாக.

# 5. மானம்

எந்நாட்டு மக்களாயினும் அவர்களுக்கு மானம் மிக மிக வேண்டற்பாலது. எக்காலத்தும் தம் நிலையில் தாழாமையும் ஊழ் காரணமாகத் தாழ்வு வந்த போது உயிர் வாழாமையுமே மானத்தின் சிறந்த குறிக்கோளாகும். நன்மையைக் குறைக்கக் கூடிய செயல்களைச் செய்தல் கூடாது. இழிவு நேரின் அதனைப் பொறுத்துக்கொண்டும் இருத்தல் ஆகாது. குடிப் பிறப்புத் தாழவரும் செயல்களால், இன்றியமையாத சிறப்பு வருவதாய் இருப்பினும், குடிப் பிறப்புத் தாழவரும் காரணத்தால் அச்செயல்களைச் செய்தல்கூடாது. வரும் சிறப்பையும் குடியின் மானம் நிலைத்திருக்க இழந்துவிடுதல் அறிவுடைமை யாகும். ஒரு சிலர் தாம் இறக்கவரும் இடத்தில் இழிவுதரும் செயல்களையும் செய்து பிழைக்க வழி தேடலாம் என்றும் கூறுவர். ஆனால், அப்படி உயிர் வாழ வள்ளுவர் இடங்கொடுத்திலர். இழிசெயல் களைச் செய்து உயிரோடு வாழாது உயிரை விடுக என்பதே அவரது துணிவு. உடம்பு எந்தக் காலத் தேனும் அழியும். ஆகவே, அழியாத புகழுடம் பைப் பெறும் பொருட்டு முறைமையை மறுத்தும், மானத்தைக் காக்கும் குடிமக்களே நாட்டுக்குத் தேவை. மானத்தாழ்வான செயல்களைச் செய்வத னால் இன்பமும் பொருளும் மிகுமாயினும், அவ்வின்ப மும் பொருளும் வேண்டற்பாலன அல்ல. மானம்

கெடவரும் செயல்களைச் செய்தல் கூடாது என்பதை நாலடியாரும்.

"ஈனமாய் இல்இருந் தின்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்"

என்று கூறுகிறது. இந்த அளவிலும் நிறுத்தாது, மானம் நீங்கும் வழியில் வேங்கையும் செய்யமாட்டாது என அதனை உதாரணமாகக் காட்டியும் மானத்தின் உயர்வை அந்நூல் நிலை நிறுத்துகிறது.

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்"

என்பது இக்கருத்தை நிலைநாட்டும் பாடல்.

உக்கிர குமார பாண்டியன் மதுரையை ஆண்ட போது தமிழ்நாடு மழை பெய்தலின்றி வருந்தியது. அதன்பொருட்டு முடியுடை மூவேந்தர்களும் மழை பெய்விக்குமாறு இந்திரனை வேண்ட அவன் ஊர் சென்றனர். தேவர்கோன் மூவேந்தரையும் வரவேற்றானெனினும், தனக்கு ஒப்ப அமர்ந்திருக்கும் வண்ணம் ஆதனம் அமைக்காமல், தனக்குக் கீழ் இருக்கும் வண்ணம் இருக்கைகளை அமைத்தனன். அதனைப் பொருத பாண்டியன், இந்திரன் ஒப்பவே உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து இருந்து, தானும் மழை வேண்டி வந்திருந்தும், ஏனைய சேர, சோழ மன்னர் தம் வருகைக்

குரிய காரணத்தைத் கூறி மழை பெய்யுமாறு வரம் பெற்றான் பாண்டியன் ஒன்றையும் இரவாது இருந்தனன். இப்படி இவன் இருந்நிலைக்குக் காரணம் இக்குறளின் பொருளை நன்குணர்ந்தமையே என்று கூறலாம். இதனை முதுமொழி வெண்பா.

"இறையருள்சேர் தென்னவன் அன்றிந்திரன்பால்
(சென்றும்
இரையிரவான் போயிருந்தான்"

என்று போற்றுகிறது. புகழும் மானமும் வேண்டுபவர், தம் குடிக்கு ஒவ்வாத இழிசெயல்களை 'எவ்வளவு வறுமை ஏற்பட்ட காலத்திலும்கூடச் செய்தல்கூடாது. சிறிய செல்வம் பெரிதும் கிடைப்பினும் செய்தல்கூடாது.' வறுமையுள்ள காலத்தில் எவரிடத்திலும் மானம்போகும் அளவுக்குப் பணிந்துவிடுதல் ஆகாது. பெருஞ் செல்வம் உள்ள காலத்தில் செல்வம் காரணமாகச் செருக்குற்றிராது, தம் பணிவை மட்டும் காட்டவேண்டும். தாழ்மையாகவே இருத்தல்வேண்டும். அப்போது தாழும் தாழ்வைத் தாழ்மையாக உலகம் எண்ணாது. அதனைப் பெருமையாகவே உலகம் மதிக்கும். இப்பண்பை நெற்கதிர்களின் வளர்ச்சியிலும் காணலாம். இதனைக்கண்டபின் இப்பண்பு மக்களிடத்தில் அமையவேண்டும் என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

உருத்திட்பம் உருக்காலைத் தலைநிறீஇ உற்றதன்பின்
தருக்கற்று வளிவணிங்கிப் பழுத்தகதிர்த் தடம்சாலி
பெருக்கத்து வேண்டுமால் பெரும்பணிவு மிகச்சிறிய
சுருக்கத்து வேண்டும்உயர் வெனும்மொழியின் சுவை
தேற்றும்

என்னும் காஞ்சிபுராணப் பாடலைக் காண்க.

"பெருக்கத்து உயர்வாம் பணிஒழியல் பேணுப் பணிவு
சுருக்கத்தில்
செருக்கல் இன்றி அமையாத சிறப்பிற்றேனும் உயர்வினம்
உருக்கும் வினையைச் செய நினையல்"

என்று விஞயக புராணமும் கூறுகிறது.

"மானத்தினின்று குடிமக்கள் தாழ்ந்தால் குடி என்ன முழுகிப்போகும்? என்று வினவலாம். அந்தோ! யார் மானத்திலிருந்து தாழ்ந்து விடுகிறுர்களோ, அவர்கள் தலையில் இருந்து நீக்கப்பட்ட மயிருக்கு ஒப்பாக மதிக்கப்படுவர். மயிர் தலையில் இருக்கும்போது, அதற்குச் செய்யப்படும் சிறப்பைப்பற்றிக் கூறவேண்டா. அம்மயிர் கோதப்படுகிறது. நல்ல மணமுடைய எண்ணெயால் தடவப்படுகிறது. மணமுடைய மலர்களால் அலங்கரிக்கப்படுகிறது. பல வரிசையாக முடிக்கப்படுகிறது. இத்துணையும் அம்மயிர் தலையில் இருக்கும் காலத்தில் செய்யப்படும் செயல்கள். அம்மயிர் அத்தலையினின்று நீங்கிய பிறகு அதனைத் தூர எறிந்துவிடுகின்றனர். அது போலவே, மக்கள் தம் நிலையில் தாழாது இருக்கும் வரையில் பெருமை பெறுவர்; தாழ்ந்தவிடத்தில் சிறுமை அடைவர். தாம் தாம் இருக்கும் நிலையில் இருந்து நீங்கினுல் சிறுமையுறும் பொருள் மயிர் மட்டும் அன்று. பல், நகம் ஆகிய இவையும் அவ்விழி நிலையினை அடையும்.

"தலைமயிரும் கூர்உகிரும், வெண்பல்லும் தத்தம்
நிலையுடைய மானவரும் நிற்கும்—நிலைதவருத்
தானத்தில் பூச்சியமே சாரும் நிலைதவறும்
தானத்தில் பூச்சியமே தான்"

என்று கூறுகிறது. ஆகவே, மானம் ஒழிய செயல் புரிதல் நற்குடி மக்களுக்கு முறையன்று. "மானம் அழிந்த பின் வாழாமை முன் இனிதே" "மானம் படவரின் வாழாமை முன் இனிதே" என்னும் இனியவை நாற்பது என்னும் நூல் கூறுவதையும் காண்க. "நிலையில் திரியேல்" என்று எவ்வளவு அழகாக நம் ஆத்திசூடி கூறுகிறது பாருங்கள்!

அவர் அவர்கட்குரிய நிலையில் திரிந்தால், குடிப் பிறப்பால் மலைபோல் உயர்ந்தவரும், தம் தாழ்வுக்குக் காரணமான இழி செயல்களைப்புரியின் மிகக் கீழ் நிலையை அடைந்துவிடுவர்.' குன்று போன்ற உயர்ந்த பெருமையுடைய நளன் தன் மனையாளைக் காட்டில் விட்டுச் சென்றதாகிய மானம் கெடவரும் செயலைச் செய்ததால், அவன் உடல் வேறுகிக் குன்றினன் அல்லவா? அவன்,

> ஆகம் குறைந்துருவே ருனன் இல் லாளைவிடுத்து
> ஏகினள வேந்தன் இரங்கேசா "

என்று மானத்தில் குறைந்தமைக்கே ஓர் உதாரணமாக எடுத்துக் காட்டத் தகுந்த நிலைக்கு வந்துற்றான் அன்றோ? மானத்தைவிட்டுத் தன்னை அவமதிப்பவர் பின்னே சென்றால், புகழும் ஏற்படாது; புண்ணிய பூமியை அடையவும் முடியாது. இரண்டு வகையிலும் மானத்தை இழக்கலாமா? மானமே பெரிதெனா வாழவேண்டும்.

> "இம்மையும் நன்றும் இயல்நெறியும் கைவிடாது
> உம்மையும் நல்ல பயத்தலால்—செம்மையின்

நானம் கமழும் கதுப்பினுய் நன்றேகாண்
மானம் உடையார் மதிப்பு ''

என்று நாலடியார் மானத்தின் பாண்பை மதித்துப் பேசுகிறது. மானம் கெடப் பறர்பின் செல்லலாகாது என்றும் அந்நூல் கூறுகிறது.

'' என்பாய் உகினும் இயல்பில்லார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார் ''

என்னும் அடிகளையும் காண்க.

இங்ஙனம் தன்னை இகழ்வார் பின் சென்று பொருள் பெற்று உயிரைவைத்துக் கொண்டு இருத்தலைவிட, அப்படிச் செய்யாமல் இறத்தலே சாலச் சிறந்தது. தன்னை இகழ்வார் பின் சென்று மானம் கெடத் தகுந்த நிலையில் பொருள் முதலியன பெற்று உயர்வாழ்வதை எப்பொழுதும் இறவாத நிலையைப் பெறுதற்குக் காரணமாக இருக்க நேர்ந்தால் ஒருவேளை அவ்வாறு மானம் கெடவரும் செயல்களைச் செய்தற்கு மேற்கொள்ளலாம். அப்படி என்றும் இறவாமல் உலகில் உயிருடன் இருக்க இயலாதே. என்றேனும் ஒருநாளைக்கு உயிரை விடத்தானே வேண்டும்? ஆகவே, இகழ்வார்பின் செல்லல் இறவாமைக்கு மருந்தாகாது. எனவே, பெருமைகெட நற்குடிமக்கள் வாழ்தல் கூடாது. மானம் கெடாது உயிரை விட்டாலேனும் புகழ் நிற்கும். '' மானம் அழிந்து வாழ்வதினும் மரணம் அடைவது உத்தமம்'' ''மானம் அழியில் உயிர் காவலர்'' ''மானம் பெரிதா பிராணம் பெரிதா'' என்னும் மானத்தின் உயர்வைக் காட்டும் உலக வழக்கு மொழிகளைக் காண்க. மானம் கெட்டு உயிர்

வாழ்தல் கூடாது என்பதை எவ்வளவு வெறுப்புடன் குமரகுருபரர் தம் நீதிநெறி விளக்கத்தில்,

தம்முடை ஆற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினும் மன்ற நமக்காங்கு
இறுவரை இல்லை எனின்"

என்று கூறியுள்ளார் கவனியுங்கள்!

"மானம் அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன் மன்?"

"இழித்தக்க செய்தொருவன் ஆர உணலின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ
விழித்திமைக்கு மாத்திரை அன்றோ ஒருவற்கு
அழித்துப் பிறக்கும் பிறப்பு"

என்று நாலடி நானூறும்,

பறைபட வாழா அசுணமா உள்ளம்
குறைபட வாழார் உரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாம் தமக்கொல்லாச்
சொற்பட்டால் சாவுமாம் சால்பு"

என்று நான்மணிக் கடிகையும்,

"தனக்குத் தகவல்ல் செய்தாங்கோர் ஆற்றல்
உணற்கு விரும்பும் இடரை—வனப்பற
ஆம்பல்தான் வாடலே போல அகத்தடக்கில்
தேம்பத்தாம் கொள்வ தறிவு"

என அறநெறிச்சாரமும்,

" உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ— கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான் "

என வாக்குண்டானும்,

" பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை— சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும் "

என நல்வழியும் கூறுதல் காண்க.

அசுரரும் மானத்தைப் பெரிதாகக் கொண்டார் என்பதைக் கந்தபுராணம் அழகுறக் கூறுகிறது. அதுவே,

" இறந்திட வரினும் அல்லால்
இடுக்கணொன் றுறினும் தம்பால்
பிறந்திடு மானம் தன்னை
விடுவரோ பெரிய ரானோர்
இறந்திடும் இரண்டு நாளைச்
செல்வத்தை விரும்பி யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை
சூரனென் றொருபேர் பெற்றேன் "

என்பது.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் கலிக்காமர் என்பவர். என்றாலும் அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் பெருங்கோபங் கொண்டவர். அக்கோபத்திற்குக் காரணம், சுந்தரர் சிவபெருமானைப் பரவை நாய்ச்சியாரிடம் தூது அனுப்பியதற்காக

என்க. இதனால் சுந்தரரைக் காணவும் விரும்பா திருந்தனர். அந்த நிலையில் சிவபெருமான் கலிக்காம ருக்குச் சூலைநோய் தந்து, அதனைச் சுந்தரர் வந்து தீர்த்தால் அன்றி அந்நோய் போகாது என்றும் கூறினர். "சுந்தரர் முகத்திலும் விழியேன்" என்ற சபதம் கொண்டிருந்த கலிக்காமர், சுந்தரர் தம்மை நாடி நோயைத் தீர்க்க வருகின்றார் என்பதை உணர்ந்ததும் உயிரை மாய்த்துக் கொண்டனர். இதற்குக் காரணம் யாது? உயிரினும், மானமே பெரிதென்பதை நிலைநாட்ட அன்றோ? இதனைத் திருத்தொண்டர் வெண்பா.

"ஈசனையாள் வாராம்வந் தென்னையாள் வாரென்று
காசினியில் மாண்டார் கலிக்காமர்"

என்று எடுத்துக் காட்டியுள்ளது.

நல்ல மானிகள், தம் உயிர்போவதனால் மானம் நிற்கும் என்பதை உணர்ந்தால், உயிரை விட்டே தீர்வர். தன் ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழ விரும்பாத நிலையுடையது கவரிமான் என்றால், உயர் திணைப் பொருள்களாகிய மக்கள் உயிரைப் பெரிதாகக் கருதவரோ? கருதார் அல்லரோ? மானம் என்றும் நிலைத்துப் புகழை உண்டாக்குவதாலும், உயிர் என் றேனும் ஒரு நாள் அழிந்தேவிடும் ஆனதாலும், உயிரி னும் மானமே பெரிதாக நாட்டு மக்கள் கருத வேண்டும்.

கவரிமான் தன் மயிரில் ஒன்றுநீங்கினல் உயிர் வாழாது என்பதைப் பெருங்கதை நூல்,

"வான்மயிர் துடக்கின் தான்உயிர் வாழாப்
பெருந்தகைக் கவரி"

என்று பேசுகிறது. கம்பராமாயணமும் மானமுடையாரைப் பற்றிப் பேசும்போது, வள்ளுவர் கருத்தைப் போற்றி,

"மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்"

என்றும்,

"வருந்தலின் மானமா அனைய மாட்சியார்"

என்றும் கூறுகிறது. மானம் நீங்கவரும் நிலையில் கவரிமானை நினைத்தால் மானத்தை நிலைநாட்டலாம் என்பதை விநாயகபுராணம்;

"..............மொய்ம்பார் மானம் கெடவூழ் வந்து
உருக்கு மெனில்·மரைமானை உன்னல்"

என்று நினைவூட்டுகிறது.

மானம் அழிதல் கூடாது என்பதை அர்ச்சுனன் எவ்வளவு அழுத்தம் திருத்தமும் பொருந்தக் கூறினுன் பாருங்கள்! அவன் கூற்றை அன்றே வில்லியார்,

ஊனமே யான ஊனிடை இருக்கும்
உயிரினைத் துறந்தும்ஒண் பூணும்
மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும்
வரிசையும் தோற்றமும் மரபும்
ஞானமே யான திருவடி உடையாய்
ஞாலமுள் ளளவும்நிற் றலினல்
ஈனமே உயிருக் கியற்கையா தலினல்
என்றனன் வீமனுக் கிளையோன்.

என்ற பாடலால் நன்கு அறிவித்துள்ளார்.

இதனையே கற்பனைக் களஞ்சியமாம் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் பிரபுலிங்க லீலையில்,

மானமும் உயிரும் ஒருங்குநில் லாத
வழியுயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளும்உன்
தந்தைதன் செவிப்படில் என்னும்
பானுவும் மதியும் இயங்குறும் அளவும்
பழியிது வழிவழி வாராதோ
யான்உனை வருந்தி ஈன்றதும் இதற்கோ
என்செய்தாய் பாவிஎன் றிசைப்பாள்.

என்று மாயையின் தாய் கூறியதாகக் கூறுகிறார்.

மானத்தால் உயிர்விட்ட சடாயுவைச் சிறப்பித்துச் சிவசிவ வெண்பா,

" அன்றெரிவை வேந்தன் அரிவைதனக் காயமர்க்குச்
சென்றுயிரை ஈந்தான் சிவசிவா "

என்று பாராட்டுகிறது.

ஆகவே, மானத்தைப் பாதுகாக்க வேண்டும். இழிவு வந்தபோது மானத்தைக் காக்க உயிர்விட்டவரை எக்காலத்தும் உலகம் போற்றும். உலகம் போற்றும் என்றது உயர்ந்தவர்களாலே போற்றப்படுவர் என்பதாம், இங்ஙனம் போற்றப்படுபவர் பாகனல் செலுத்தப்படாத விமானத்தில் பொருந்த ஊர்ந்து செல்வர் என்க.

" புலவர் பாடும் புகழ்உடையோன் விசும்பில்
வலவன் ஏவா வானஊர்தி எய்துவர் "

என்ற புறநானூற்றுப் பொன் போன்ற அடிகளைக் காண்க. மானவுயிர்நியில் தேவலோகத்தில் விளங்குவர் என்றால், அவர்கள் சுவர்க்கத்தை அடைவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? வேண்டா அன்றே?

மானத்தை நிலைநிறுத்த வறுமையை அடக்கித் தம் ஈகைப் பண்பில் தளராது வாழ்ந்தனர் மக்கள் என்பதைப் பெருங்கதை என்னும் நூல்,

"செல்வப் பெரும்புனல் மருங்கற வைகலும்
நல்கூர் கட்டழல் நலிந்துகை அறுப்ப
மானம் வீடல் அஞ்சித் தானம்
தளராக் கொள்கையொடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல உள்ள
இன்மை இயையா இடுக்கணாளர்"

என்று கூறுகிறது.

இத்தருணம் கந்தபுராணம் கழறுவதையும் நம் சிந்தனைக்குக் கொண்டு வருதல் தக்கதாகும்.

கூனொடு செவிடே பங்கு குருடுபேர் ஊமை ஆனோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டழியும் அம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வதுண்டே

என்பது அக்கந்தபுராணப் பாடல்.

கூன், செவிடு, முடம், குருடு ஊமையோடு பிறந்தாலும், அப்பிறவியின் இழிவு உடல் இறந்தவுடன், அழியும், ஆனால் மானம் அழிந்தால் பழி ஏழ் பிறவியிலு தொடர்ந்து நிற்குமே என்று இப்பாடல் கூறுமானால், மானத்தை எந்த அளவு போற்றவேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டாவா? ஆகவே, நாட்டு மக்கள் மானமுடையவராய் இருத்தல் இன்றியமையாதது.

## 6. பெருமை

நாட்டில் வாழும் மக்கள் நற்குடிப் பிறப்பினராய்த் தாம் பிறந்த குடியினைத்தாழ் வுறுதிருக்கச் செய்து உயர்த்தவல்லவராய், மானமுடையவராய் இருத்தல்வேண்டும் என்பதைப் பார்த்தோம். மானத்துடன் இருப்பதோடன்றிப் பெருமையோடும் தம் வாழ்க்கையை நாட்டு மக்கள் நடத்தவேண்டும்.

பெருமையோடு வாழ்தலாவது, செயற்கரிய செயல்களைச் செய்தும், செருக்கு இல்லாமலும், பிறர் மீது குற்றம் கூறுமலும் வாழ்தலாம். இம்மூன்று பண்புகளும் உள்ள நிலையினும் மேல் மேல் உயர்த்தும் பண்புகளாகும். ஒருவனது உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் அவனே அன்றிப் பிறர் இல்லை.

> "நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
> நிலைகலக்கிக் கீழ் இடு வானும்—நிலையினும்
> மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
> தலையாகச் செய்வானும் தான்"

என்று நாலடியார் கூறுவதாலும் நன்கு உணரலாம்.

ஒருவனுக்குத் தான் இருக்கின்ற காலத்தும் மிக்குத் தோன்று[illegible]மையாவது, பிறரால் செயற்கரிய செயல்களை[illegible]ம் மெலிதல் இன்றிச் செய்[illegible] எழுச்சியுடைமை[illegible]ச் செயலைச் செய்யும்போது எழும் தோன்றுதலாகிய[illegible]யாகும். இவ்வாறான மிக்குத் பண்பு மக்களுக்குத் தேவை.

உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் ஆஅ
இழந்தான்என் றெண்ணப் படும்

என்னும் நாலடியார் பாட்டினையும் காண்க. செயற்கரிய செய்தலாவன, அளவு கடந்து உபகாரம் செய்தலும், ஈகைக்குணம் உடைமையும் என்க. இப்பண்பைப் பெறாத நிலை, மக்களுக்குக் குற்றம் உண்டாக்கும்; அபகீர்த்தியையும் ஏற்படுத்தும்.

ஐது குடியில் பிறந்தருநூல்
ஆய்ந்து செல்வத் துயர்ந்ததனால்
எய்தல் அரிது பெருமைஅஃது
எய்தும் கொடைஒப் புரவாதி
செய்தற் கரிய செய்துபிறர்
செயிர்கூ றாமல் தருக்காமல்
உய்தி நெறியில் பிறழாமல்
ஒழுகு வார்க்குள் ளதிமைந்தா

என்ற விநாயக புராணப்பாடலையும் காண்க.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர் இனங்களுக்குள் வேறுபாடு இல்லை. பிறப்பளவில் எல்லாம் ஒன்றே. "எம்மினம் பெரிது; உம்மினம் சிறிது" என்று கூறுதற்கு இல்லை. பிறப்பால் உயர்வு தாழ்வு கூறுதல் சிறப்பாகாது. ஆனால், அவர் அவர்கள் செய்யும் தொழிலாலும் செயலாலும் மட்டும் பெருமை சிறுமைகளைக் கூறலாம்.

அவர் அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப, மண், நீர், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்

களின் காரியமாகிய உடம்பைப் பெற்று நின்று அவ்வுடம்பின் பயனை அனுபவித்தல், எல்லா இனத்தவர்க்கும் சமம் ஆதலின், பிறப்பு ஒத்து உள்ளது என்க. அவர் அவர்களின் பெருமை சிறுமைகளுக்கு உரைகல்லாக உள்ளவை அவர் அவர் செய்யும் தொழிற் பிரிவுகள் ஆதலின், அந்நிலையில் உயர் தாழ்வு கருதலாம். ஏனெனில், "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என வள்ளுவர் கூறப்போகின்றார் அல்லவா? எனவே, குலத்தினால் பெருமையை அறிதல் ஆகாது. ஆசாரமே பெருமைக்குக் காரணம்." இந்தத்தருணத்தில் கம்பர் கூறுவதையும் கவனியுங்கள். "எக்குலத்து யாவர்க்கும் வினையினால்வரும் மேன்மையும் கீழ்மையும்" என்பது அவரது கூற்று. "உத்தியினால் எல்லோரும் ஒக்குமென ஒண்ணாதே" என்பது தினகர வெண்பா.

செயற்கரிய செம்மையான செயல்களைச் செய்யாமல், செல்வத்தின் உயர்வு காரணமாக விலைஉயர் படுக்கை,. ஆசனம் முதலியவற்றில் படுத்தும் அமர்ந்தும் இருப்பவர்கள், ஒருக்காலும் பெரியராக மாட்டார். வறுமையுற்றபோதும் செயற்கரிய செயலைச் செய்து வருபவர் வறுமையுடையார் என்று அறிவுடைப் பெருமக்களால் கருதப்படமாட்டார்.

இளையான் குடிமாற நாயனார் பெருஞ் செல்வத்தைப் பெற்றிருந்தபோதும், தம் இல்லத்தில் அடியவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து உபசரித்து மேன்மை பெற்றார். பின்பு வறுமையுற்றபோதும் தம் செய்கையினின்றும் மாறாது உபசரித்து மேன்மை

யுற்றார். அல்லல் நல்குரவு ஆனபோதிலும் வல்லவராய் விளங்கினார். ஆகவே, பெருமையுடையவர் என்பதற்கு அறிகுறி, செல்வமோ குடிப்பிறப்போ அன்று. செயலே இன்றியமையாதது, மனை, மாடு, பொருள், பூமி முதலியவற்றால் பயனில்லை. குலம், ஒழுக்கம், குணம், ஞானம் முதலியன மக்களுக்குத் தேவை. இவை இல்லார் மிகவும் சிறியரினும் சிறியரே.

நக்கீரர் சங்கலப் பலகையின் மேல் வீற்றிருந்தும் பெரியர் ஆகிவிட்டனரோ? சிவனார் அப்பலகையில் நிற்றல் இன்றிக்கீழே நின்று இருந்ததனால், சிறியர் ஆகிவிட்டனரோ? நக்கீரர் பெரியர் ஆயிலர். சிவனார் சிறியர் ஆயிலர்.

" சங்கரன்போய் நின்றளவில் சங்கப் பலகையின்மேல்
அங்கிருந்தான் நக்கீரன் ஆயினும்என் "

என்ற முதுமொழிமேல் வைப்பு வெண்பா இக கருத்தை எவ்வளவு அழகாக நிலைநாட்டுகிறது பாருங்கள்!

நகுடனும் பல்லக்கில் முனிவர்கள் சுமந்துசெல்ல ஊர்ந்துதான் சென்றான். ஆனால், விரைவாகச் செல்க என்றபொருளில் 'சர்ப்ப' என்று கூறிய அளவில் என்னானான்? சுமந்து சென்ற முனிவரால் சர்ப்பமாகும் சாபத்தைப் பெற்றான் அல்லனோ?

" கும்பமுனி யால்நகுடன் சர்ப்பம்என்றே குண்டலியாய்
மொய்ம்பிழந்து வீழ்ந்தான் "

என்னும் முருகேசர் முதுநெறிவெண்பாவைக் காண்க.

இத்தகைய பெருமை ஒருவனுக்கு எப்போது வரும்? ஒருமனப்பட்ட மகளிர் தம் மனத்தைப் பல வாறு சிதரவிடாமல் இருந்து, தம் கற்பைக் காத்துக் கொள்வதுபோல, ஒரு மனிதன் தன் நிறையினையும் தவறாமல் காத்துவந்தால்தான் உண்டாகும். அதாவது காக்கவேண்டுவனவற்றைக் காத்துக் கடிவன வற்றை நீக்கி ஒழுகுதல் என்பதாம். சுருங்கக் கூறின், மனமொழி மெய்களை அடக்கி உபகாரம் முதலியவற்றைச் செய்து வருதல் எனலாம்.

"வாயில் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை அடங்குதல் திப்பியமாம் பொய்யின்றி
நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்தில் தீர்ந்த பொருள்"

என்பது திரிகடுகம்.

வறுமை யுற்றகாலத்திலும், பிறரால் செயற்கரிய செயலைச் செய்ய வல்லவரே பெருமை அடைவர். இங்ஙனம் செய்பவரே சால்புடைய மக்கள் ஆவார்.

"இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்"

என்பது நாலடியார்.

"சிறுமுயற்சி செய்தால் குறுபயன் கொள்ளப்
பெறுமெனில் தாழ்வரோ தாழார் — அறனல்ல
எண்மைய ஆயினும் கைவிட் டரிதெனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார்"

என்ற நீதிநெறி விளக்கச் செய்யுளையும் ஈண்டு நினைவு கூர்க.

இத்தகைய அரிய செயலைச் செய்யும் மக்களாகிய பெரியாரை நாமும் போற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் அரிய செயல்களை ஒவ்வொருவரும் செய்ய முந்த வேண்டும். ஆனால், சிறியராயினார் இங்ஙனம் இப்பெரியார்களைப் போற்றுதலும் செய்யார். அவர்கள் செயலை மேற்கொண்டு ஆற்றுதலையும் செய்யார். அச் சிறியார் ஏன் இவ்வாறு செய்யவேண்டுமென்பதை மனத்தாலும் நினையார். சிறியார் குடிப்பிறப்பு, செல்வம், கல்வி இவற்றால் இறுமாப்புக் கொண்டிருப்பர். பெரியார்களோ இவற்றையுடையராய் இருப்பினும் செருக்குறாது, இவை தமக்கு இயல்பு என்று அடங்கி இருப்பர்.

தண்டியடிகள் தம் இருகண்களின் பார்வையை இழந்தும், தம்மால் செய்யக் கூடியதாக இருந்த தொண்டாகிய நீரால் விளக்கேற்றி வழிபடுதலைச் செய்து இறைவனை வழிபட்டார். இந்த அருமை தெரியாத சமணர்கள் அவரைச் சோதிக்க முயன்று சிறுமை யுற்றனர். இச் சிறுமைக்குக் காரணம் அப் பெரியாரைப் போற்றாமை அல்லவோ? இதனை,

> " தண்டி அடிகளிரு தாளிணைபே ணாதழிந்தார
> தொண்டராம் பேய்ச்சமணர் "

என்று சோமேசர் முதுமொழி வெண்பா கூறுவதைக் காண்க.

குடிமையும், செல்வமும் கல்வியும் சிறியார் இடத்தில் இருக்குமானால், அதனால் தருக்கே அடைவரே அன்றி,வேறு பெருமையுடையார் ஆகார். அவற்றைக் கொண்டு தகாதனவற்றையே செய்வர். ஆனால், இச்

செருக்கு அச்சிறியார் குடிப்பிறப்பாலும், செல்வ வளத்தாலும், கல்வி மேம்பாட்டாலும் நிறைந்த பெரியாரிடத்தில் காணப்படாது. அவர்கள் எக் காலத்தும் தாழ்ந்தே போவர். சிறியவர்களோ மேலே கூறப்பட்டவற்றைப் பெற்ற காரணத்தால் தம்மை வியந்து பெருமை பேசிக் கொள்வர். இவ் வாறான பெரியார் சிறியார் இயல்புகளை மதிலின் மீதும் அகழியின் மீதும் வைத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கற்பித்துக்கூறிய கற்பனை யைக் கண்டால், நாம் கழிபேர் உவகை கொள்வோம் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

தாழ்ந்தோர் உயர்வர் என்றுமிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றுஅறம்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்
மதில்சூழ் கிடந்த தொல்அகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன் றுயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையின் உதிப்பவன்தாள்
கீழ்நின் றதுபோய்ச் சூழ்எயிலே

என்பதே அவரது பாடல்.

பெரியவர்கள் பணிந்து போவர் என்பதற்கு மற் றோர் எடுத்துக் காட்டினுலும் விளக்கலாம். வியாக்கர பாதமுனிவரின் திருமகனார் உபமன்யு முனிவர். அவர் தம்மைப்பல ரிஷிகள் சூழக் கையிலையில் ஒருசார்வீற்றி ருந்தார். அப்போது சுந்தரர் மண்ணுலகு விடுத்துக் கைலைக்கு வந்தனர். இங்ஙனம் அவர் வருதலைக் கண்ட உபமன்யு முனிவர், தம் இருகரங்களையும் சிர மேல் குவித்துச் சுந்தரரைத் தொழுது நின்றார். ஆனல்

ஏனையவர் தொழுதிலர். காரணம் பெருமை என்றும் பணியும்; சிறுமை தன்னை வியந்து தருக்கும் அல்லவா?

"நாவலர் வெள்ளானை நடத்தஉப மன்னியர்போல்
ஆவலுடன் கண்டுபணிந் தார்களோ"

என்ற திருத்தொண்டர் வெண்பாப்பாடலைப் படித்தால், இக்கருத்து நன்கு விளங்கும். ஆகவே, பெருமைக் குணமுடையவர் பெருமிதம் இன்றி இருப்பர். சிறுமைக்குணமுடையவர்கள் செருக்குடன் வாழ்வர். இதனால் குலத்தாலும் செல்வத்தாலும் பெரியராயினார் தாம், பெரியார் என்று எண்ணுதல் வேண்டா.

நற்குடி பிறவா மாந்தர் இவர் என்பதை அவர்களின் செருக்குற்ற மனப்பான்மையால் எளிதில் அறியலாம். "சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப" என்ற முதுமொழிக்காஞ்சி நூலால் இதனை உணர்க.

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேல்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றோ தாழும் துலைக்கு

என்கிறது நீதி நெறிவிளக்கம்.

சிறியாரிடத்து மற்றொரு குற்றமும் உண்டு. என்றும் பிறருடைய குற்றங்களையே பிறரிடம் கூறித்திரிவர். ஆனால், பெருமைக் குணம் நிறைந்த பெருங்குடி மக்கள் பிறருடைய குற்றத்தையும் மறைத்தே பேசுவர், பிறருடைய நற்பண்பையே எடுத்து மொழிவர்.

நரசிங்க முனையரையர் தூர்த்தற்கு இரட்டிப் பளவான நன்மை செய்தார் அல்லவா?

" மூரிநர சிங்க முனையரையர் மாதவருள்
சீரிய தூர்த் தற்கிரட்டி செய்தார் "

என்று இவர் செயலைத் திருத்தொண்டர் வெண்பா போற்றுதலைக் காண்க. அதாவது, திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்க முனையரையர் திருவாதிரை நட்சத்திரந்தோறும், அடியவர்கட்கு உணவு இட்டு உபசரித்துப் பொன்னும் கொடுத்து வந்தார். அவ்வடியவர் குழாத்துள் ஒரு தூர்த்தன் (கொடியவன்) திருநீற்றுக் கோலத்துடன் வர, அவனைக்கண்டதும் மற்றைய அடியவர்கள் கூசி ஒதுங்கினர். ஆனால், அத்தூர்த்தன் திருநீற்றுப் பொலிவுடன் இருந்த காரணத்தால், நரசிங்கமுனை அரையர் அவனுக்கு இரட்டிப் பளவு பொன் கொடுத்து உபசரித்து அனுப்பினார் என்பதாம்.

# 7. பண்புடைமை.

நாட்டுக்குரிய மக்கள் பெருமையும், மானமும் உடையராதல் வேண்டுமென்று பார்த்தோம். பண்புடைமையாகிய குணமும் அமைந்தவராய் இருத்தல் மக்களின் பண்பாகும். அதாவது, உலக ஒழுக்கம், அறிந்து ஒழுகுதல் என்பதாம். கலித்தொகை என்னும் நூல் "பண்பெனப்படுவது, பாடறிந்து ஒழுகுதல்" என்று பண்பு இன்னது என்பதை அழகாக எடுத்து இயம்புகிறது. உலக நடை அறிந்து ஒழுகுதல் என்பது, எவரிடத்திலும் அவர்களோடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதல், அவரிடத்திலும் துன்பம் தோன்றியபோது அதன் பொருட்டு மனம் இளகுதல், இளகிய மனம் காரணமாகத் தமக்குக் கிடைத்தவற்றைப் பிறர்க்குத் தந்து மிகுந்ததை உண்ணுதல், பழிக்கு நாணுதல் முதலியனவாகும். இப்பண்பு எப்படிப் பெறுவது என்று நினைக்கலாம். எவரிடத்திலும் காண்பதற்கு எளிய சமயத்தவராய் இருந்தால் இப்பண்பினை அடையலாம். இதனை அடையப் பின் வாங்குதல் கூடாது. இப் பண்பால, சுவர்க்க பதத்தையும் அடைதல் எளிது. மக்கட் பண்பு இன்ன என வினாயக புராணம் கூறுகையில்,

ஆன்ற குடியன் பெண்பதம்நல் அறநீதிகளின் வழுவாமை
சான்ற மக்கள் பண்பாகும் தன்னை உடையார் நகையானும்
ஆன்றும் இகழார் பகைஇடித்து மதியார் அவர்தம் நற்குணமே
ஏன்ற உலகம் பாராட்டும் எல்லாப் பயனும் அவர்மாட்டாம்.

என்று கூறுகிறது.

பண்புடைமை என்று கூறப்படும் சன்மார்க்க மானது, அன்புடைமையும், உலகத்தோடு பொருந்திய குடியில் பிறத்தலும் ஆகும். அன்பு இருந்தால்தான, பிறர் வருத்தம் கண்டபோது இரக்கங் கொள்ளக் கூடும். வருத்தம் கொண்டவர்களோடு கலந்து உற வாட முடியும். கொடுத்து உதவ மனமும் வரும். குடிப்பிறப்பினால் பழிதரும் செயல்களைச் செய்யாம லும், கண்டவிடத்தில் இனியனாய்ப் பேசிக்காணாத இடத்தில் இழித்துப்பேசா நிலையும் அமையும். ஆகவே, அன்புடைமையும், குடிப்பிறத்தலும் இயற்கையில் அமைய வேண்டிய பண்புகளாகும்.

ஒருவனுக்கு உடம்பால் ஒத்து இருத்தல் ஒப்பு மையாகாது. பண்பால் நன்மக்களோடு ஒத்திருத்தலே ஒப்பு எனக்கூறுதல் வேண்டும். பண்பில்லையாயின் மக்களே அல்லர். பண்புடையவர் நீதி தருமம் ஆகிய இவற்றையே விரும்புவர். இவ்விருப்பத்தால் தமக்கும் பிறர்க்கும் பயனுடையவராவார். இத்தகையவர்களை உலகம் கண்டு சும்மா இருக்குமோ? அவர்களின் குணத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் அல்லவா? இந்தப் பண்பு தினகரன் என்பானிடம் இருந்தமை யால், அவன் ஐம்பத்தாறு தேசத்து மக்களாலும் பாராட்டப்பட்டான் இதனை

"ஆசகலும் நின்குணத்தை அன்புடன் ஐம்பத்தாறு
தேசமும் கொண்டாடும் தினகரா"

என்ற பாட்டாலும் அறியலாம்"

பண்புடைமை மக்களிடம் அமையின் பகைமை ஏற்பட்ட போதும், இனிமையாகவே இருப்பர். வினை

யாட்டாகவும் தன்னை இகழ்தல் ஒருவனுக்குப் பிடிக்காது. இதனால் நல்லோர் எப்போதும் எவர்க்கும் இனியவையே செய்வர். இதனால் பகைவருள்ளும் பண்புடையார் பெருமை உலகத்தாரால் பாராட்டப்படும்.

இப்பண்புடையார் உலகில் இருப்பதால்தான் உலகமும் அழியாது நிலைத்து நிற்கிறது. ஆகவே, உலகியல் பண்புடைய மக்களிடத்தில்தான் உளது. பண்புடையார் காரணமாகத்தான் பல உயிர்களும் உண்டாயின என்றும் கூறலாம். இல்லை எனில், உயிர் இனங்களே இல்லாது போயிருக்கும். அப்படி உயிர்கள் இருந்தாலும், அவைகள் பூட முடையனவாகவே இருக்கும். அவைகள் பூமிக்குப் பாரமானவைகளே. பண்புடைய மக்கள், இருப்பதால்தான் உலகம் நிலைத்து இருக்கிறது என்பதை மேலும் தெறறத தெளிந்த உரையில் புறநானூறு,

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

என்று கூறுகிறது.

பண்புடையவரால் எதற்கும் அழிவு வராது என்பதை முருகேசர் முதுமொழி வெண்பா,

“ஓவாச் சிவசமயம் ஓங்கியதே நால்வரால்
மூவா முதலே முருகேசா”

என்று கூறுகிறது;

பண்பின்றி அறிவுக்கூர்மை இருந்து மக்கட்கு நன்மை இல்லை. மக்கட் பண்பு இல்லாதவர் மரம் போல்பவர்; அதாவது ஆறறிவு உடைய மக்கள் அல்லர். ஓர் அறிவுடைய தாவரம் போன்றவர் என்பதாம். பண்புடைமையோடு கூடிய அறிவுடைமை நட்பின்றிப் பகைமைச் செய்வாரிடத்தும், அன்புடைமையே காட்டிநிற்கும்; அன்பு காட்டாதபோது அன்புடையார்க்கு இழுக்காகும். பிறரோடு நட்புச் செய்து ஒழுகும் பண்பில்லையானல், உலகியல் தெரியாது எல்லாருடனும் கூடி இருந்து மகிழ்தலைச் செய்யாதவர்க்கு உலகம், பகலிலும் இருளில் பட்டதாகும். அதாவது தீவினைப்பயன் வந்தால், "இதற்கு நான் கலக்கம் அடையேன்." என்று கூறும் பண்பு அற்றவர்க்கு உலகம் பகலிலும் இருளாகவே தோன்றும். அவர்கட்கு உலக நீதியேதெரியாது.

பண்புடைமை யில்லாதார் பெருஞ் செல்வராயினும் பயனில்லை. அச்செல்வம் கெட்டொழியும். அப்படிக் கெடுதல் எதுபோன்றது எனில், பால் தூய்மையுடையதாயினும் அது பொருந்துதற்குரிய பாத்திரம் தூயதாக இல்லையாயின் அதில் பெய்யப்பட்ட பால் கெட்டொழிவதுபோல் என்க.

பண்பில்லாமல் செல்வத்தைப் பெற்றும் அச்செல்வத்தின் பயன் இழந்ததோடு அல்லாமல், செல்வத்தையும் இழந்தனர் நான்கு வணிகர்கள் என்பதைச் சோமேசர் முதுமொழி வெண்பா,

> உன்பணிக் கென்றேதி நல்காச் செல்வம் உததிஉறத்
> துன்பமுற்றுர் நால்வணிகர் சோமேசா.

என்று நமக்கு எடுத்துக்காட்டுகிறது,

# 8. நாண் உடைமை.

மக்கள் பண்புடைமையுடன் நாண்உடைமை யாகிய குணமும் பெற்றிருத்தல் இன்றியமையாதது. நாணுடைமையாவது தமக்குத் தகாத செயல்கள் குறித்து நாணுதல் உடையராம் தன்மை என்பதாம். இதனை இன்னமும் விளங்கக் கூறின் அறம்பொருள் இன்பங்களில் பிறர் பழிக்காமல் இருக்க ஒழுகுதலும், நீதியில்லாததைக் கண்டால் நாணுதலும் நாணுடைமையாகும். இந்நாணுடைமை சிறப்பாகப் பெண் மக்கள் இனத்திற்கே உரியது என்று கருதலாம். ஏனெனில், அவர்கட்குரிய குணங்களாக வகுத்த அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கனுள் இதுவும் ஒன்றாகக் கூறப்பட்டிருத்தலினால் என்க. நக்கீரரும், "நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உளதொரு நன்மை" என்று விளக்கினர். ஆனால், நாணுடைமை பெண்கள் இனத்திற்கே அன்றி, ஆண்கள் இனத்திற்கும் வேண்டற்பாலது என்னும் குறிக்கோளுடன், நாண் என்னும் மொழிக்கு நக்கீரர் உரை கூறியதுபோல் நச்சினார்க்கினியர் கூறாமல், "நாணுவது செய்யத் தகாதனவற்றின்கண் உள்ளம் ஒடுங்குதல்." என்று விளக்கம் கூறினர். வள்ளுவரும் ஆண் மக்கள் மேற்கொள்ள வேண்டிய நாண முடைமையையும் பெண் மக்கள் கொள்ளவேண்டிய நாணமுடைமையையும் வேறு படுத்தியே காட்டியுள்ளார். நன் மக்கள் நாணம் இழிந்த செயல் காரணமாக நாணுதல் என்றனர். அவ்வாறின்றி மனம் மொழி மெய்களின்

ஒடுக்கத்தால் வரும் நாண் குலமகளிர் நாண் என்பது அவர் கருத்து. இவர் கருத்தை விநாயகபுராணம் எவ்வளவு அழகாக விளக்கிக் காட்டுகிறது பாருங்கள்!

இழிந்த தொழிலின் நாணுவதே
எய்தற் கரியநா ணென்பர்
ஒழிந்த மனவாக் குடல்ஒடுக்கம்
ஒளிவாழ் நுதலார் நாணேயாம்.

நாணுடைமை என்பது மக்களுக்குப் பொதுப் பாண்பாகும். அது எது நோக்கிப் பொருள்படுகிறது என்ற போது தான், சிறிது வேறுபடும். உணவும் உடையும், உறக்கமும் அச்சமும், காம இச்சையும் மக்களுக்குப் பொதுவாக வேண்டப்படுவன என்றாலும், சிறப்பாக நன்மக்கள் என்னும் பெயர்க்குரியவர்க்கு வேண்டப்படுவது நாணுடைமையே ஆகும். தேவர் கதி, மக்கள் கதி, விலங்கின் கதி, பட்சி கதியாகிய இவை யாவும், நவதாதுவினால் எடுத்த உடம்பு. நால் வகைக் கதிகளில் மக்கட்கதியே சிறப்புடையது. அதற்குக் காரணம் இம்மக்களிடத்துத்தான் நாணம் என்னும் மனப்பயம் அமையப்பெறுகிறது. ஆகவே, இந்த நாணுடைமையை எவரும் இழத்தல் ஆகாது.

கழிந்து விடநாண்மண் கோடல்
கருதார் நலமெல் லாம்வளர்ப்பார்
அழிந்து நாண்மற் றுயிர்வாழார்
ஆவி அழிந்து நாணுள்வார்

என்ற விநாயக புராணச் செய்யுளைக் காண்க. நாண் இல்லா இந்திரன், நாணுடைய பாண்டியனை அணுகிக் குறை இரந்தான் என்பதை முதுமொழி வெண்பா,

" இறையருளும் தென்னவன்பால் இந்திரன் வந்தன் று
குறைபடலும் நாணியது கூறின் முறையன்றோ''

என்று எடுத்துக் காட்டுகிறது.

காப்பு என்னும் குணம் நிலைக்கும் இடம், நாண் என்னும் நன்மைக் குணமே என்பதை மறத்தல் கூடாது. அதாவது உயிர் உடம்போடு கூடி அல்லாமல் பயனைப்பெறாது. அது போலவே, காப்பும் நாணுடைமையைக் கூடி அல்லாமல் பயனைப் பெறாது என்க. எனவே, சான்றோர்க்கு நாணுடைமை ஓர் அணிகலமாகும். இவ்வணிகலத்தைப் பெறாத நன் மக்களது பெருமித நடை ஒரு நோயே யாகும். அவர்கள் யானைபோல, விடைபோலக் கம்பீர நடைகளைப் பெற்றும் பயன் இல்லை. நடையே அன்றி, பெருமையும் ஒழுக்கமும் இல்லை என்க.

நாணத்திற்கு இருப்பிடமாக இருப்பவர் பிறர் பழியையும் தம் பழி எனவே எண்ணி நாணுவர். இதனால் இவர்களை உலகம் புகழும் என்று கூறவும் வேண்டுமோ ? இவ்வாறு நாணுக்கு இருப்பிடமான வர், நாணை இழப்பதனால் உலகமே பெறினும், அதனை விரும்பாது நாணம் சிதையாதபடி பார்த்துக் கொள்வர். பொருளினும் நாணமே சிறந்தது. நாணமே நல்லவர்க்கு வேலி. இவ்வேலி நமக்கு இருப்பின் பழி பாவங்கள் உள்ளே புகமாட்டா. நாணமே உயிரினும் சிறந்தது என்ற பொருளில் "உயிரினும் சிறந்தன்று நாணே" என்று தொல்காப்பியர் கூறி இருக்க பொருளைக் கருதி நாணத்தை இழப்பரோ நன்மக்கள்? ஒருக்காலும் இழவார்.

நாணம் கெட்டவிடத்து உயிரையும் விடுவர் நாணின் சிறப்பு அறிந்து அதனை விடாது ஒழுகும் இயல்பினர். உயிர் நிலைக்கும் பொருட்டு நாணை விடார்.

தக்கார்க்கு உயிரினும் நாண் தக்கதன்றோ என்று தினகர வெண்பா வினவுகிறது. வாலி நாண் துறந்து உயிர் வாழ எண்ணாது உயிரை விட்டான் அல்லனோ?

"புண்ணொடு உயிர்வாழ நாணியுயிர் போக்கினான்
துண்ணெனவே வாலி முனம்"

என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவைக்காண்க. நாணினைத் துறந்தவர் இடத்திலும், அதனால் கண்டாரும், கேட்டாரும் நாணத்தக்க பழியைச் செய்கின்றவரிடத்திலும் அறம் வந்து அணுகாது. அணுகுதற்கு அஞ்சும். எப்படி ஒழுக்கம் தவறுமானால் அத்தவறு காரணமாகக் குடிப்பிறப்புக் கெடுமோ, அதுபோல நாண் இல்லாமையாகிய குணம் உண்டானபோது பிறப்பு, கல்வி, குணம், சொல், இனம், என்ற இவற்றால் ஆகிய நலங்கள் யாவும் கெட்டொழியும். ஆகவே, ஒழுக்க அழிவைவிட நாண் அழிவு மிகவும் தீமை தருவதாகும். இதனால் குலம் கெடும்; ஆக்கம் கெடும்; பெருமை கெடும். ஆகவே, மக்கட்கு நாணுடைமை மிக மிக இன்றியமையாதது. இந்த நாணுடைமை இல்லாமல், உயிருடையார்போல் இருந்து நாட்டில்நடமாடுவாரானால், அந் நடமாட்டம், மரத்தால் செய்யப்பட்ட ஒரு பதுமை, இயந்திரக்கயிற்றால், இயங்கி உயிருடையது போலப் பிறரை மயக்குவது போலாம். எனவே, நாணம் இல்லார் மக்கள் அல்லர். மக்களாவார் நாணுடையராக இருத்தல் வேண்டும் என்பதையும் அவர்களால் நாட்டுக்கு நலம் என்பதையும் உணர்க.

# 9. சான்றாண்மை.

இது வரை மக்களுக்கு இருக்க வேண்டிய குணங்கள் யாவை என்பதை அறிந்தோம். அக் குணங்கள் பலவற்றையும் ஆளும் தன்மையே சான்றாண்மை என்று கூறப்படும். பல குணங்களும் அமைந்த தன்மையே சான்றாண்மை என்றாலும், இது பெரும்பாலும் அறத்தினால், அன்பு செய்து ஒழுகும் நன்மக்களையே பொறுத்த பண்பாகும். குல ஒழுக்க நெறியில் நிற்பதே சாண்றாண்மை எனினும் பொருந்தும்.

இச் சாண்றாண்மையாகிய பண்பை மேற்கொள்வதுதான் நமக்குத் தகுந்தது என்று உணர்ந்து அதனை மேற்கொண்டவர்களிடம், எல்லா நற்குணங்களும் இயல்பாகவே பொருந்தி இருக்கும் என்பது வெளிப்படையாகும். நூல் வல்லார் துணிபும் இதுவேவாகும்.

சான்றோர் நலனாவது குணநலமே. இக் குணநலன் இன்றிக் குடிப்பிறப்பு, கல்வி, கேள்வி, செல்வம் ஆகிய உறுப்புக்களினால் ஆகிய நலம், ஒரு நலத்திலும் உள்ளதன்று. சால்பிற்கு அழகு குணநலமே. சான்றோருக்குப் பொறுமையாவது குணநலமே யாகும். குண நலமாவது தமது உள்ளத்தில் அமைவு உடையவர் என்னும் நலமேயாகும். சால்பு என்னும் பாரத்தைத் தாங்கும் தூண்கள் ஐந்து. அவையே சுற்றத்தார்மீதுமட்டும் அல்லாமல், பிறர் மேலும் உளதாய அன்பும், பழி பாவங்களின் நாணலும், எவரிடத்தும் உபகாரம் செய்தலும், பழையார் மீது தாட்சண்யம் காட்டுதலும்,

எந்த இடத்திலும் உண்மை கூறுதலும் ஆகும். இவ் வைந்து குணங்கள் அமையப்பெற்ற சால்புடைமை யுடையவர்களிடமே மக்கட்பண்பு ஆகிய மரபு உள்ளது. இது இல்லாதார் மக்கள் உருவினரேனும், மக்கட்பண்பு ஏதும் இல்லதாவர் ஆவர். இப்பண்புடைய மக்களை விநாயக புராணம்,

அன்பொப் புரவு கண்ணோட்டம்
அழியா வாய்மை நாணுதி
இன்பம் பெருக்கு நற்குணங்கள்
எல்லாம் நிறைந்து சான்றோர்கள்
துன்புற் றவர்க்கும் இனியனவே
சூழ்வர் துணையின் வினைமுடிப்பர்
அன்பில் தளரார் நட்டார்க்கும்
அடங்கித் தோற்று நாணுரே

என்று பாராட்டுகிறது.

தவம் என்பது எப்படி ஓர் உயிரையும் கொல்லாத அறத்தினிடத்தில் அமைந்த தன்மையுடையதோ, அதுபோலக் காப்பு என்பது, பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் இடத்ததாகும். அதாவது சான்றோர் பிறர் குற்றத்தைச் சொல்லுதல் கூடாது என்பதாம். உயிர்களைக் கொல்லாமையே தவம் என்பதை முன்னும் அறத்துப்பாலில் வள்ளுவனுர்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்று விளக்கியுள்ளார்.

ஒரு செயலை முற்றமுடிய முடித்துவைக்கவேண்டுமானுல், அதற்குதவியாய் இருப்பவரைப் பணிந்து நம்மோடு சேர்த்துக்கொண்டு, அச்செயல்களை முடித்

துக் கொள்ளுதல் வேண்டும். அது போலவே சான்றோராய் இருப்பவரும், பகைவரை வெல்லுதற்குப் பணிந்து போதல்வேண்டும். பணிந்து போதலாவது பகையின்றி வாழ்வதாகும். சால்பிற்கு உரைகல் தோல்வியினை இழிந்தாரிடத்தும் ஏற்றுக் கோடலாகும். இப்படியன்றோ சான்றோர் இருத்தல் வேண்டும்? இத்தகைய பண்புடையவர் நாட்டில், இருந்தால் பகைமை என்பது இருக்குமா? அன்பு அல்லவா நிலவும்! தனக்கு நிகர் ஆகாதவரிடத்துத் தோல்வியினைக் கொள்ளுதல் என்பது இனிமையே செய்யவேண்டும் என்பதாம். அவர் மாட்டுத் தாழ்ச்சி சொல்லி நடப்பதாகும்.

ஏனாதி நாயனார் வீரராக இருந்ததால், அவரை வெல்ல இயலாத பகைவன் திருநீறு பூசி அவர்முன் போரிட, அந் நீற்றைக் கண்டு அஞ்சி நின்றபோது, அப்பகைவன் அவரைக் கொன்றுவிட்டனன். இவ்வாறு அப்பகைவன் வஞ்சித்துக்கொன்றது வெற்றியாகாது. என்றாலும், ஏனாதி நாயனார் தோற்றதற்குச் சமமே. இத் தோல்வியினைத் தம்சால்பு காரணமாக ஏனாதி நாயனார் ஏற்றனர். இது துலையல்லார்கண் கொண்ட தோல்வியாகும். அதாவது தமக்கு நிகர் இல்லாதவரிடத்தில் கொண்ட தோல்வியாகும். வள்ளுவர் கருத்துக்குரியவர் ஏனாதி நாயனார் என்று அறிந்தே இக்குறளினை எடுத்து மொழிந்து, இவரையே உதாரணமாகத் திருத்தொண்டர் வெண்பா கூறுமுகத்தால்,

"தானை வெல்லாதான் தன்னுதல்வி பூதியைக்கண்டு
ஏனாதி நாதர் இகல்இழந்தார்"

என்று கூறுகிறது.

இங்ஙனம் ஏனுதியார் தோல்வி ஏற்றது தமது சான்ருண்மைக்குப் பழுது ஏற்படாதிருத்தற்கே என்க. தீங்கு செய்தவர்க்கும் நம்மையே செய்யவேண்டுவது சான்ருேர் கடன். தீயருக்கு நன்மை செய்திலர் எனில், அவர்கள் சால்புடையவராய் இருந்து பயனில்லே.

தருமர் தமக்குத் தீமை செய்த துரியோதனனுக்கு நன்மையைச் செய்த நிகழ்ச்சியினே இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக மொழியலாம்.

"வன்மைச் சுயோதனற்கும் வானேர் சிறைமீட்டான்
தொன்மை நெறித்தருமன் சோமேசா"

என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவைக் காண்க. பழமொழி நானூறு என்னும் நூல் சான்ருேர் இயல்பினே,

நீர்த்தகவு இல்லார் நிரம்பாமைத் தங்கலியின்
கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்ருல் சான்றவர்க்கும்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினுர் இல்

என்று கூறுகிறது.

நற்குணமுடைய மக்களுக்குச் சால்பே வன்மையாகும். அவர்கள் வறுமையினுல் வாடினுலும் அது இழிவாகாது.

அவ்வறுமை வந்தாலும், சான்ருேர் மேம்பாடுடையவர் ஆவர். சான்ருண்மையாகிய கடலுக்குக்கரையாக இருக்கும் பெரியவர்கள், கடல் கரைகடந்து காலம் திரிந்தாலும், அவர்கள் தம் கொள்கையில் இருந்து தவறமாட்டார். நல்ல பண்புடையவர் சால்பிற்குத்

தளரார் என்பதை, மணிமொழியாரும் தம் திருக் கோவையாரில் "தலைப்படும் சால்பினுக்கும் தளரேன்" என்று கூறியதையும் காணலாம்; "ஊழி பெயரினும் தாம் பிழையார் சான்ருேர்" என்ற கருத்தைப் புறப் பொருள் வெண்பா மாலை,

"இம்மூ வுலகில் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால்—தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்"

என்று கூறுகிறது.

"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர் தம் கொள்கையின் குன்ருர்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று"

என்று நாலடியாரும்,

ஒற்கந்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புல்மேயா தாகும் புலி

என்று பழமொழி நானூறும்,

"நல்லாறு ஒழுக்கின் தலைநின்ருர் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கண் புலியே றறப்பசித்தும் தின்னுவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ்"

என்று நீதிநெறி விளக்கமும் கூறுதல் காண்க.

இச் சான்ருண்மைக்கு அரிச்சந்திரனை எடுத்துக் காட்டாக எடுத்துக் காட்டலாம். அவனுக்கு எத் துணையோ துன்பங்களை விசுவாமித்திரர் செய்தும்,

அவற்றால் அவன் தன் சால்பிலிருந்து மாறவில்லை அல்லவா? அப்படி இருந்ததால் அல்லவோ முருகேசர் முதுமொழிவெண்பா,

"தொக்கிடும்பை கௌசிகனால் சூழ்ந்தும் அரிச்சந்திரன
சொல்
முக்கியமாக் காத்தான் முருகேசா"

என்று அவனைப் பாராட்டுகிறது? எனவே, சான்றோர் சால்பில் இருந்து சிறிதும் குறைதல் கூடாது. அப் படிக் குறைந்தால் நிலமானது உயிர் முதலாகிய பாரத் தைத் தாங்காது; ஆனால், ஏழுகடல், ஏழுமலை, ஏழு தீவு முதலியவற்றைப் பூமி தாங்கி நிற்கவில்லையோ என்றால், நல்லோரைத் தாங்குகிறோம் என்ற மகிழ்ச்சியினால் அவை தனக்குப் பாரமாயினும் தாங்கி நிற்கிறது. ஆகவே, நாடு அழியாது நிலைத்து நிற்கவேண்டுமானால், சால்புடைய நன்மக்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்க.

# 10. கயமை.

இதுவரையில் நாட்டில் நன்மக்கள் இருக்க வேண்டும் என்பதையும், அந் நன் மக்கள் இயல்புகள் இன்ன என்பதையும் அறிந்தோம். நன்மக்கள் இயல்புகள் என்ன என்பதை அறிந்தபோது, தீய மக்கள் இன்னார் என்பதையும், அவர்கள் இயல்பு இன்னது என்பதையும் நாம் அறிதல் இன்றியமையாதது.

கீழ்மைக் குணமுடையவர்களும் மக்களைப் போலவே உருவத்தால் காணப்படுவர். ஆனால், கயவர்களும் நன்மக்களும் குணத்தால் வேறுபடுவர். கயவர் மக்கள் ஆகார். மக்களுயிர்க்கு ஆறுவது அறிவாகிய மன உணர்வு அமைந்திருக்கும். அதாவது தக்கது இன்னது தகாதது இன்னது என்று அறியும் அறிவாகும். இதனால்தான் தொல்காப்பியரும் "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்று கூறினர். இந்த ஆறுவது அறிவு கயவரிடத்தில் இராது. மேலும், கயவர்கள் தம்மனத்தில் கவலை கொள்ளமாட்டார்கள். ஆகவே, அவர்கள் இம்மை மறுமை வீடுகளுக்கு உரியவாய புகழ், அறம், ஞானம் ஆகிய உறுதிப் பொருள்களை அறிவாரைவிட அவற்றை அறியாதவர் 'ஆதலின், வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறுவோமானால் அவர்கள் நன்மை உடையவர்கள் என்று கூடக் கூறலாம். ஏனெனில், உறுதியானவற்றை அறியும் நல்லறிஞர் இம்மை மறுமைக்குரிய புகழ், அறம், ஞானம் ஆகிய இவற்றில் மிகுதியாகத் தம் கருத்தைச் செலுத்தியிருந்தும், மேலும் செலுத்துவதற்கு இல்லையே என்று கவலை

யுறுவர்; துன்பம் வருமோ என்று எண்ணி ஏங்கு வர்; என்ன நேருமோ என்று சிந்திப்பர். ஆனல், கய வர்கள் இவற்றைப்பற்றிக் கனவிலும் சிந்திக்கமாட் டார். ஆதலின், இவற்றைப் பற்றிய கவலையும் கொள்ளாமல் வாழ்வர். இப்படி அவர்கள் வாழ் வதால் புகழ் அடையமாட்டார். பழியே அடை வர். கயவர் இயல்பு இத்தகையது என்று காட்ட வள்ளுவர் அவர்களைப் புகழ்வதுபோல இகழ்ந்து பேசுகின்றனர். இதனல் கயவர் அறமே அறியாதவர் என்பது தெரியவருகிறதன்றோ? கயவர்கள் நன்னெறி ஆகிய கல்வி, அறிவு ஆசாரம், குலம், தருமம், தவம், ஆகிய இவற்றில் நாம் குறைபடாமல் இருத்தல் வேண்டும் என்றும், குறைபடுமானல் குடிப்பிறப் பிற்குக் குற்றம் ஏற்படுமே என்றும் எண்ணும் கவலையே கொள்ளாதவர், கயமைக் குணத்திற்கு எடுத்துக் காட்டாகச் துர்ச்சாதனனைக் கூறலாம். அவன் நன்றியறியாக் கயவனய், நெஞ்சில் அவலம் இல்லாதவனய் இருந்ததனல் அல்லவா ஒரு மங் கையின் ஆடையை அவிழ்க்க முற்பட்டான்?

> "தேனிருந்த சொல்லாளைத் தேர்வேந்தர் காணவுடை
> ஏனுரிந்தான் மேனள் இரங்கேசா"?

என்று வினவும் அளவிற்கு அவனது கயமைக்குணம் கொண்டு வந்துவிட்டதல்லவா?

கயவர்கள் மனத்தில் அவலம் இன்றித் திருவுடை யவர் போலமட்டும் காணமாட்டார். அவர்களது செயலைச் சிந்தித்தால் அவர்களைத் தேவர், என்றே கூறிவிடலாம். ஏனெனில் தேவர்கள் தாம் தேவர் என்ற காரணத்தால் தகாதவற்றையும் செய்யத்

துணிவர். இந்திரன் கௌதமரது, இல்லாளாகிய அகலி கையின் கற்பைக் கெடுத்தான் அல்லவா? மும்மூர்த்தி களில் ஒருவனான பிரம்மதேவன் தான்படைத்த மாதின் அழகில் ஈடுபட்டு அவள் தன் மகளுக்கு நிகர் என்று கருதாமல், அவளைப் பெண்டாள விரும்பி னன் அல்லவா? ஆனால், திருஞான சம்பந்தர் தாம் எலும்பைப் பெண்ணாக்கியபோது, அப்பெண் பேர் அழகுடன் திகழ்ந்தும் அப்பெண்ணிற்கு உரிய தந்தை யார் சிவநேசச் செட்டியார், திருஞான சம்பந்தருக் கென்றே வளர்த்து அவருக்கே மணமுடித்துக் கொடுக்க இசைந்திருந்தும் ஆளுடைய பிள்ளையார் தாம் எழுப்பிய காரணத்தால் தந்தை என்று தம்மை எண்ணி மணக்க மறுத்தார் அல்லரோ? இதுவன்றோ சான்றாண்மை, பண்புடைமை, மானமுடைமை! தோணிபுரத் தோன்றலார் எண்ணத்தை எண்ணும் போது பிரமன் செயல் கயமைக் குணத்தைக் காட்டு கிறது அல்லவா? இதனைச் சேக்கிழார் எப்படி எடுத் துக் காட்டுகிறார் பாருங்கள்!

எண்ணில்ஆண் டெய்தும் வேதாப் படைத்தவள்
எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான்
அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு
பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிர முகத்தால் கண்டார்.

என்ற பாட்டைப் பன்முறை படியுங்கள். இதனால் தான் வள்ளுவனார் கயமைக் குணமுடையவர்கட்குத் தேவர்களை உவமை கூறினார்.

கீழ்மக்கள் மேன் மக்களைக் கண்டு அவர்களைப் போலத் தாம் மேன்மையடைய வேண்டுமெனச் சிறிதும் எண்ணார். ஆனால், தம்மினும் கள்வன் போன்று தாம் விரும்பியவாறு ஒழுகும் பட்டிகளைக் கண்டால், அவர்களைவிடத் தாம் இழிதொழிலில் மிகுந்தவர் என்று எண்ணி இறுமாப்பர். பட்டியாவான் நோவத் தக்க தொழில்களைச் செய்யும் சிறியவனாகிய காவல் இல்லாதவன் என்பதாம். கள்வன் போன்று தாம் விரும்பியவாறு நடப்பவன் என்றோ, வீட்டினின்றும் புறப்பட்டால் பட்டி புகுந்து பயிரை அழுக்கும் பட்டி மாடு என்றோ, வீட்டில் இருந்து, குணவழகு இல்லாத பெண்டிரை என்றோ பொருள் கொள்ளலாம். இவர்கள் செய்யும் கீழ்மைச் செயலினும் தம் கீழ்மைச் செயல் மிகுதிப்பாடு உடைத்து என்று கர்வங் கொள்வதே கீழ்மக்கள் இயல்பாகும் என்க.

ஆனால், இங்கு ஒரு கேள்வி எழலாம். அதுவே "கயவர்கள் ஆசாரமே இல்லாதவர்களா?" என்பது. கயவர்களிடத்தில் காணப்படும் ஆசாரம் பெரும்பாலும் அச்சங் காரணமாகவும் சிறுபான்மை மணி, பொன், நெல் முதலிய பொருட்பேறு காரணமான ஆசையாலும் காணப்படுவதே அன்றி, இயல்பாக இவர்களிடம் அமைந்த ஒழுக்கம் அன்று. இவர்கட்கு இயல்பு மனம் போனவாறு செய்வதே ஆகும். கயவர்க்கு வரும் அச்சம் தம்மைத் தண்டித்தும், சிறை செய்தும் விடலாம் என்ற எண்ணத்தால் ஏற்படுவதாகும். சீரிய ஒழுக்கம் பூரியார்க்கு வருமோ? வராது. "பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்" என்பது கொன்றை வேந்தன் கயவர்களிடம் ஏதேனும் மறைபொருளைக் கூறிவைத்

தால் அதனை வெளியிடாது இரார். உடனே பலரும் அறியக் கூறிவிடுவர். அதனால் அவர்களைப் பறை என்னும் வாத்தியத்திற்கும் ஒப்பிடலாம். பறை யோசை பலரும் அறியும் அளவுக்கு ஓசை செய்கிற தல்லவா? அதாவது பறை ஒருவன் கையால் தன்னை அறிவித்ததொரு விடயத்தை இடந்தோறும் கொண்டு சென்று எல்லோருக்கும் அறிவித்தல் போல், கீழ் மக்களும் தம்மிடம் கூறப்பட்ட மறை பொருள்களைப் பல இடங்களுக்குச் சென்று எல்லோரிடத்திலும் அறி வித்து விடுவர் என்க. ஆகவே, வெளிப் பட்டால் குற்றம் விளைவிக்கக்கூடிய இரகசியங்களைக் கயவ ரிடத்தில் கூறுதல் கூடாது.

"புயல்அமை கூந்தல் பொலந்தொடீஇ சான்றோர்
கயவர்க் குரையார் மறை"

என்று பழமொழி நானூறு அறிவுறுத்துவதைக் காண்க. அப்படிக் கூறியதனால் அம்மறையினைக் காத்து வைக்கும் குணம் ஆற்றவர் கயவர் என்பதும், அறை பறை அனைய நீரார் கயவர் என்பதும் பெறப் படுகிறதன்றோ? "அருமறை காவரோ தான்"? என்று கம்பர் வினவுவதையும் காண்க.

"பெருமலை நாட பிறர்அறியல் ஆகா
அருமறையை ஆன்றோரே காப்பர்—அருமறையை
நெஞ்சில் சிறியார்க்கு உரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று"

என்னும் பழமொழி நானூற்றுச் செய்யுளையும் படித் தறிதல் வேண்டும்.

திருவாப்பனூரில் இறைவனை அருச்சித்து வந்த அந்தணர், அவ்விறைவன் அருளால் பஞ்சகாலத்தில் மணலை அமுதாக ஆக்கித் தம்வறுமையைப் போக்கி வந்தனர். இந்த இரகசியத்தைத் தம் மனையாளிடம் கூறியதால் அது பலருக்கும் தெரிந்துவிடவே, அச்சித்து அவரைவிட்டு நீங்கியது. இந்த வரலாற்றினை முதுமொழிமேல் வைப்பு என்னும் நூல்,

"மணலமுதா மாறு மனையாட்குக் கூறிப்
பரனருள்தீர்மா மறையோர்"

என்று கூறுகிறது.

கயவர் தாம் உண்டு கழுவிய கையைக் கூட உதற மாட்டார்கள். அதற்குக் காரணம், உதறினால் அக்கையில் ஒட்டிய நீர் எதற்கேனும் பயன் பட்டு விடும் என்று எண்ணும் இழிகுணமே என்க. அத்துணைக் கயமைக் குணத்தால் ஆன லாபமுடையவர் 'கயவர் என்பதாம். "எச்சில்கையால் காக்கை ஓட்டாதவன்" என்ற பழமொழியைக் காண்க. ஆனல், இப்படிப்பட்ட கயவர்கள், "உம் கன்னத்தைப் புண்படுத்துவோம்" என்று முறுக்கிய கையுடன் வருபவர்க்கு ஈந்து விடுவர். கொறடாலே அடித்து வாங்கும் வலியவர்க்குச் கொடுப்பர். மெலியவர்க்குக் கொடுக்க மாட்டார். கொறடாலே அடித்தலாவது கொடிறு போல இடுக்கிப்பிடித்து உடம்பை உடைத்தல் என்பதாம். இக்கயவர்களின் இயல்பைத் தமிழ் நூல்கள் மிக மிகப் பழித்துக் கூறுகின்றன.

அழுக்கற் றெவர்க்கும் வடுக்காண்பர்
அச்சம் ஆசை யால்அன்றி
ஒழுக்கம் புரியார் மறைபிறர்பால்
உய்த்தும் மொழிவார் தம்போல
இழுக்குக் கேதம் கவலார்முன்
ஏற்ற மாகிச் செம்மாப்பார்
மழுக்கு ளார்க்கே பயன்படுவார்
வறிதும் வறியார்க் கிடார்கயவர்

என்கிறது விநாயக புராணம்.

"பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார்—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தான்"

என்று கூறுகிறது நல்வழி.

" இட்டக் கடைத்தாரா ஈண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பன்மையார்—நட்ட
சுரிகையால் காணும் சுலாக்கோலால் காணும்
சொரிவதாம் ஆபோல் சுரந்து"

என்பது அறநெறிச்சாரம்.

விரைந்து பாய்பரி மன்னவர் இதம்பட மெலிவுற்
றிரந்து வேண்டினும் கீழோருக் கொருபொருள் ஈயார்
பரந்த போரினில் எதிர்த்தவர் படப்படப் பகழி
துரந்த போத வர்க்குதவுவர் சொன்னவை எல்லாம்

என்பது வில்லியார் வாக்கு.

" பாடுவோர்க் கியாரே பல்உதிரத் தாடையிலே
போடுவார்க் கிவர் பொருள்"

என்பது ஒரு பெரியார் வாக்கு.

சான்ருேர் இனத்தில் கயவர்க்கு இடமே கிடையாது. அவர்களுக்கும் இவர்களுக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. சான்ருேரிடத்தில் வறுமையால் வாட்டமுற்ற ஒருவர் தம் வறுமைக் குறையை எடுத்துச் சொன்ன அளவில் அவர்கள் பொருட்டு இரக்கம் கொண்டு அவர்கட்கு எவ்வாறேனும் பயன் படுவர். அதாவது தம்மிடம் உள்ளதைக் கொடுப்பார். ஆனல், கயவர்களில் அவ்வளவு எளிதில் பயனை எதிர்பார்க்க இயலாது. கயவர்களிடமிருந்து பயனைப் பெற்றே தீரவேண்டுமானல், கரும்பினின்று சாற்றைப்பெற எப்படி அதனைக் கசக்கிப்பிழிந்து எடுக்க வேண்டுமோ அதுபோல நன்கு நெருக்கிப் பயனைப் பெறவேண்டும்.

"தளிர்மேலே நிற்பினும் தட்டாமல் செல்லா
உளிநீரர் மாதோ கயவர்—அளிநீரார்க்
கென்னானும் செய்யார் எனைத்தானும் செய்பவே
இன்னங்கு செய்வார்ப் பெறின்"

என்பது நாலடியார். கயவர்களிடம் இரக்கம் உபகாரம், கொடை ஆகிய இக்குணங்கள் அமையமாட்டா.

"ஓயாப் பரிவும் உபசாரமும் கொடையும்
தீயார்க்கொன் ருது தினகரா"

என்று தினகரவெண்பா கூறுகிறது.

தண்டிக்கின்றவர்கட்கே உதவக் கயவர் முன்வருவர் என்பதை வருணன் நடந்துகொண்ட விதத்தில் இருந்தும் உணர்ந்து கொள்ளலாம். வழிவிடுமாறு இராமன் வருணனைக் கேட்டும் அவன் அதற்கு இணங்காதது கண்டு இராமன் தன் வில்லை வளைத்து

அம்பைத் தொடுத்த போது, வருணன் ஓடிவந்தான்; வழியும் விடுத்தான்.

"வாரிவழி தாரா வருணன் அடைக்கலமாய்ச்
சேரவழி செய்தான் சிவசிவா"

என்ற சிவ சிவ வெண்பாவையும் காண்க. வருந்திப் பயன் பெறத்தக்கவை இன்ன இன்பதையும் தெரிந்து கொள்ளுதல் இத்தருணம் நலமாகும்.

"துச்சனரைப் பொன்னைத் துடியைத் துரகத்தை
அச்சமற முன்நிற்கும் ஆயிழையை—நச்சரவைக்
கண்டித்த எள்ளைக் கரும்பை இளநீரைத்
தண்டித்தார்க் கல்லோ சயம"

என்னும் பாடலைப் பார்க்கவும்.

கயவரிடத்தில் பிறர் ஆக்கம் கண்டு பொறு மைப்படும் குணமும் உண்டு. பிறர், பட்டும் துகிலும் நன்கு உடுப்பினும், பாலுடன் பருப்பன்னம் உண்ணி னும், அவற்றைக் கண்டு பொறுமைப்படுவர். பொறுமைப் படுதலோடு நில்லாமல், அவர்களைப் பற்றிப் பிறரிடம் குற்றம் கூறிக் கொண்டே திரிவர். உண்டு குணம் இங்கு ஒருவர்க் கெனினும் கீழ் கொண்டு புகல்வது அவர் குற்றமே அல்லவா? தம் நண்பன் உடுப்பன பற்றியே பொறுமைப்படுவர் கய வர். இத்தகைய கயவர் பிறரது ஊர்திகளையும், அணி களையும் கண்டு பொறுமைப் படாமல் இருப்பரோ? இரார். இவர்கள் இயல்பைச் சிவபோக சாரமும்,

"சிட்டர்தமக் கில்லாத திங்குரைப்பர் பொல்லாத
துட்டர்தமக் குள்ள தொழில்"

என்று கூறுகிறது. ஆகவே, ஆத்தி சூடி கூறுவது போல் கீழ்மையை அகற்றி வாழக் கயவர் முயல வேண்டும்.

கயவர்கட்கு அடிமைப்புத்தியும் உண்டு. தங்களுக்கு ஏதேனும் துன்பம் வருவதாயின், அத் துன்பத்தைத் தாங்கி மானமுடையவராய் வாழச் சிறிதும் எண்ணார். உடனே தம்மை விற்றாகிலும் உயிர் வாழ விரும்புவர். இந்த அடிமைப்புத்திக்கே ஆளாக உரியவரே அன்றி, வேறு எதற்கும் உரியவர் அல்லர் கயவர். ஆகவே, நற்குடிமக்கள் கயவரோடு சேராது இருக்கத் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். நாட்டிலும் கயவர் வாழ்வதற்குர் இடம் இல்லாதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

# 11. நல்குரவு.

நாட்டின் இலக்கணமும், நாட்டிற்குரிய அரணின் இலட்சணமும், இவ்விரண்டும் அமைந்த இடத்து வாழும் குடிமக்கள் இயல்பையும் அறிந்தோம். நாடும் நாட்டுமக்களும் வறுமையுறாது இருத்தல் வேண்டும். அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்க இல்லாமல் இருக்கும் நிலைமையே வறுமை அல்லது நல்குரவு எனப்படும்.

வறுமை போலத் துன்பம் செய்வது வறுமையே அன்றி வேறன்று. வறுமை போல இன்னாதது வறுமை அன்றி வேறில்லை என்றே விநாயக புராணமும் கூறுகிறது. இக்கருத்தையே நான்மணிக்கடிகையும் "எற்றுள்ளும் இன்மையின் இன்னாததில்லை" என்று அறிவுறுத்துகிறது. இவ்வாறு இவ்வறுமையின் கொடுமையை இப்படி ஏன் புகல வேண்டுமெனக் கருதலாம். ஏன் இம்முறையில் வறுமைகூறப்படுகிறது எனில், இன்மை ஒருபாவியாகும். இஃது இம்மை இன்பம் மறுமை இன்பம் ஆகிய இரண்டும் இல்லை என்னும் நிலையை எய்துவிக்கும். வறுமை காரணமாகப் பிறருக்கே ஒன்றும் கொடுக்க இயலாமையால், இம்மை இன்பமும் இல்லாமல் போகும். பொருள் இல்லாதவன் இன்பத்தை விரும்பினால், அஃது எய்த இயலாது என்பது உதாரணமாகவே குறுந்தொகையும் எடுத்துக் கூறுகிறது. "இல்லோன் இன்பம் காமுற்றாங்கு" என்பது அக்குறுந்தொகை அடி.

வறுமையானது உயர்குடிப்பிறப்பையும், சொல்லையும் கெடுத்துவிடும். இத்தகைய வறுமையை எளிய முறையில் ஒழிப்பதற்குவழி, ஆசையை ஒழித்தலாகும். ஆசை ஒழிந்தால் வறுமை இல்லை. "அல்லல் நல்குரவு அவா எனப்படுமே" என்ற குமரகுருபரர் வாக்கு இக் கருத்தை வலியுறுத்தும். "நசையில் பெரியதொரு நல்குரவு இல்லை" என்பது முதுமொழிக்காஞ்சி. ஆகவே, ஆசையே வறுமையாகும். அவ் வறுமையாகிய ஆசை, உயர்குடியில் உள்ளவர்க்கு இல்லாத இழி தொழில் களையும் இழிந்த சொற்களையும் உண்டாக்கும். சொல்லைக் கெடுக்கும் என்றது மெல்லென்ற சொல்லால் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் சிறந்த பொருள்கள் உண்டாக்கச் சொல்லும் சொற்களைக் கெடுக்கும் என்பதாம். வறுமையானது குடிப் பிறப்பை அழிக்கும் என்பதை,

> குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
> நாணணி களையும் மாண்எழில் சிதைக்கும்
> பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
> பசிப்பிணி என்னும் பாவி

என்னும் மணிமேகலை அடிகளாலும் காணலாம். சொல்லைக் கெடுக்கும் என்றதோடு இல்லாமல், உடம்பையும் அதாவது வடிவழகையும் வலியையும் கெடுக்கும் இந்த வறுமை. வறுமை வந்தபோது என்னென்ன நிகழும் என்பதைப் பலநூற்களின் வாயிலாகவும் அறியலாம்.

"தாங்கொணு வறுமை வந்தால்
சபைதனில் செல்ல நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும்
புல்லருக் கிணங்கச் செய்யும்
வேங்கைபோல் வீரம் குன்றும்
விருந்தினர்க் காண நாணும்
ஓங்கிய அறிவு குன்றும்
உலகெலாம் பழிக்கும் தானே"

என்பது விவேக சிந்தாமணி.

பிறந்த குலம்மாயும் பேராண்மை மாயும்
சிறந்ததம் கல்வியும் மாயும்—கறங்கருவி
கல்மேல் தழூஉம் கணமலை நன்னுட
இன்மை தழுவப்பட் டார்க்கு

என்பது நாலடியார்.

இவ்வறுமை மிகக்கொடியது. இது உயர்குடியில் பிறந்தவரிடத்தில் அவமான சொல்லை உண்டாக்கும் சோர்வையும் தரும். உயர் குடிப்பிறந்தார் "எமக்கும் நல்கவேண்டும்" என்று கேளார் என்றாலும், வறுமை கேட்குமாறு செய்யும். வறுமை காரணமாகத் துன்பம் மிக்குச் சிற்சில சமயங்களில் தம் பிறப்பினை மறந்து அவ்வாறு கேட்குமாறு செய்யும். குடிப்பழியை உண்டாக்கிவிடும். இவ்வளவுதான் வறுமை செய்யும் என்று எண்ணுதல் வேண்டா. இந்த நல்குரவாகிய ஒரு துன்பத்தால், பல துன்பங்களும் வந்து குவியும். பல துன்பங்களாவன, வறுமைத் துன்பம் சோம்பலை உண்டாக்குவதால் செல்வர்களை நாடிச் செல்லுதலாகிய துன்பமும், அச்செல்வரைக் காணுதல் துன்பமும், கண்டால் அச்செல்வர் உதவு மறுத்தபோது

உண்டாகும் துன்பமும், அவர்கள் கொடுத்தபோது வாங்குதல் துன்பமும், வாங்கிவந்த பொருளை அனுபவிக்கவேண்டிய பொருளைச் சேகரிப்பதில் ஏற்படும் துன்பமும், முதலிய பல துன்பங்கள் தினமும் வேறு வேருக வருதலின், துன்பங்கள் பல என்று கூறப்பட்டது. மேலே கூறப்பட்ட துன்பங்கள் மட்டும் இல்லை. இனிது உண்ணப்பெருத துன்பமும், தன் உறவினரைப் பாதுகாக்க இயலாத துன்பமும், பெரியோர்கட்கு உதவ இயலாத துன்பமும், வந்த விருந்தினரை உபசரிக்க முடியாத துன்பமும் பிறவும் என்க. எனவே, வறுமைத் துயர் உற்றவர், எல்லாத் துயரையும் உறுவர். செல்வம் இல்லாதவர்,

> "மெய்வலியும் செல்நிலையும் வாழ்நாளும் தூஒழுக்கும்
> மெய்யா அளிக்கும் வெறுக்கை இலார்—வையத்துப்
> பல்கிளையும் வாடப் பணைஅணைத்தோள் சேய்இரங்க
> ஒல்குயிர்நீத் தாரும் நரகு"

என்று இன்னிலை கூறுகிறது.

ஏழைகள் பேச்சு ஏற்காது. அவர்கள் எவ்வளவு தான் மெய்ந் நூற்களை அறிந்து சொன்னுலும், அவர்கள் சொல் சோர்வுபடும். அவர்கள் கல்வியும் பயனின்றிப் போகும். அவர்கள் கூறும் சொற்களைக் கேளாமைக்குக் காரணம், கேட்டால் தாட்சண்யம் காரணமாக உதவ நேரிடுமே என்று எவரும் கேட்க மாட்டார். எனவே செல்வரும், சுற்றத்தாரும் வறுமையாளரைக் கைவிடுவர். "இல்லார் வாய்ச்சொல்லின் நயம் இன்னு" என்பது இன்னு நாறபது. ஏழைகள் கல்வி சீர்பாடு இல்லாததாகும். நீதி நெறி விளக்கம்,

"எனைத்துணைய வேனும் இலம்பட்டார் கல்வி
இனைத்துணையும் சீர்பா டிலவாம்"

என்கிறது. மாதர்களின் இடை தோற்றம் அற்று இருக்கின்ற நிலை வறுமையாளர் இடத்து உள்ள கல்விக்குச் சமம் என்று, "வறுமையில் கல்விபோலப் புலப்படா மருங்கில்" என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது "ஏழைச் சொல் அம்பலம் ஏறுது" என்பதும் நம் நாட்டுப் பழமொழி.

இல்லானை

"இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது இவன்வாயிற் சொல்"

என்று நல்வழி கூறுகிறது.

நூலுறு கல்வியை நுனித்து நாடியே
வாலறி வெய்திய வரத்தி னோர்களும்
மேலுறு திருவொடும் மேவு ருர்எனில்
ஞாலமங் கவர்தமை நவையுள் வைக்குமால்

என்பது கந்த புராணம்.

இதனுல் செல்வர்கள் சொல் ஏற்கும் என்பது பெறப்படுகிறது. இவ்வாறே தினகர வெண்பா,

"வெல்லுங்காண் செல்வரிட்ட வேடமவர் வார்த்தைவிலை
செல்லுங்காண் கோவைத் தினகரா"

என்று கூறுகிறது.

"ஏழைச்சொல் அம்பலம் ஏறுது" என்பதைத் தருமர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியினுலும் உணரலாம். அவர் எவர் கண்களுக்கும் தெரியாத நிலையில் மறைந்து விராடபுரத்தில் வாழ்ந்தபோது, அவ்வூர் அரசனேடு சொக்கட்டான் ஆடி வென்றும்,

வெற்றி என்று கூறப்படாமைக்குக் காரணம், அவர் தம் அரசபதவி நீங்கி ஏழை ஆசிரியராக இருந்த காரணம் அல்லவோ? இதனைச் சோமேச முதுமொழி வெண்பா,

"நற்றருமன் வெற்றியினை நாடி விராடன்எதிர்
சொற்றமொழி சோர்ந்ததே"

என்று கூறுகிறது.

அந்தோ! வறுமை போலக் கொடியது ஒன்று உண்டா? பெற்றதாயும் வறுமையுற்ற தன் மகனை இகழ்வாள், வெறுப்பாள் என்றால், வேறு கூறுவானேன்? சுற்றத்தாரும் இவனைத் துறப்பர் என்பது வெளிப்படை அல்லவா? இந்த நல்குரவு அறத்தோடும் இயல்பு இல்லாததாகும். "கெட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை" என்பது பழமொழிதானே? வறுமையாளர் எல்லாராலும் கைவிடப்படுவர் என்பதைக்

"கல்லோங் குயர்வரைமேல் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம்—கொல்லைக்
கலாஅற் கிளிக்டியும் கானக நாட
இலாஅஅற் கில்லைத் தமர்"

என்றும்,

ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேல் செல்லாவாம்—நீர்த்தருவி
தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நல்நாட
வாழாதார்க் கில்லைத் தமர்

என்றும் நாலடி கூறுகிறது.

பெண்டிரும் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை இலராயின்
மண்டினர் போலர் தம் மக்களும் ஒட்டார்

என்று வளையாபதி கூறுகிறது.

வறுமையால் துன்பம் உற்றவர், அது வருவது குறித்து அஞ்சுவர். நேற்று இருந்த வறுமை இன்றும் வருமோ என்று ஏங்குவர். இப்படி ஏங்கும்படி இந்த வறுமை செய்துவிடும். ஆகவே, இது தினமும் வருத்தும் தன்மையது. இதனை எண்ணி வருந்தற்குக் காரணம், இது உயிரையும் உடலையும், வருத்தும் தன்மையது என்றதனுல் ஆகும். அம்மம்ம! நெருப்பினுள் இருந்தும் உறங்கலாம். இப்படி உறங்க மந்திரம், மருந்து துணை செய்யும். ஆனல், வறுமையில் ஒருவன் உறங்கவே முடியாது. இதனுல் நெருப்பை விட வறுமை கொடியதல்லவா ?

அனுபவிக்கப்படும் பொருள் எது ஒன்று குறைந்தாலும், பேசாமல் துறவை மேற்கொள்வதே மேல். வறுமையில் வாடவே வேண்டி முழுமையும் துறவாமல், வறுமையோடு இருந்தால் இவ்வறுமையாளர் தாம் வருந்துவதோடு இன்றிப் பிறரையும் வருத்த நேரிடும். பிறருடைய உப்பிற்கும் புளிங்காடிக்கும்தான் இவர்கள் கேடாவர்.

பிறர் வீட்டு உப்பினையும் காடியினையும் எதிர் நோக்குதல் மானக்கேடு அல்லவா ? இம்மானக்கேடு

நிகழா திருக்கத் துறத்தலே சாலச்சிறந்தது. இப்படித் துறப்பதனால் இன்பமாகிலும் ஏற்படும். துறவாமல் போயின், யாவரிடத்திலும் இனிது ஒழுகும் இனிமைக்கும் நடுவு நிலைமைக்கும் ஊறுபயப்பதாகும். இதுவரை கூறியவற்றால் வறுமைபோன்ற துன்பம் எதுவும் இல்லை என்பது புலப்பட்டது. இந்த வறுமை மேலும் என்ன நிலைக்கும் கொண்டுபோகும் என்பதையும் அடுத்துக் காண்போமாக.

# 12. இரவு,

தரித்திரத்தின் கொடுமை இன்னது என்பதைப் பார்த்தோம். அத்தரித்திரமானது பிச்சை எடுக்கவும் தூண்டும். ஆனால், மானமுடையவர் வறுமையுற்றபோது இரத்தல் கூடாது. ஆனால், ஒன்று கூறலாம். அதுயாசிக்க நேர்ந்தபோது வேண்டுமானால் செல்வர் இடம் சென்று யாசிக்கலாம் என்பது. அப்படி யாசிக்க நேர்ந்தபோது செல்வர் உதவாரானால், அவ் வழிவும் பாவமும் செல்வரையே சாரும். வறுமையாளரைச் சாரா. இதனால் வள்ளுவர் யாசிக்க வழி வகுத்துக் கொடுத்ததாகக் கருதவேண்டா. தம் வறுமையை இரக்கமுள்ளவரிடமே கூறுக என்று பழமொழி நானூறும்

> தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பர்எனப் பட்டார்க்கு
> உற்ற குறையை உரைப்பதாம்—தெற்ற
> அறையார் அணிவளையாய் தீர்தல் உறுவார்
> மறையார் மருத்துவர்க்கு நோய்''

என்றும்,

> புரந்தாடும் ஐயர் திருவெங்கை வாணர் பொருப்பில்நின்ற
> வரந்தாழ் அயில்கண் மடமா திரத்தக்கர் ஆதலினால்
> இரந்தாய் குவமிவர் தந்தனம் நாம்இன் றினியநெஞ்சே
> கரந்தால் நமக்குப் பழியுள தாயின் கழறுகவே.

என்று திருவெங்கைக் கோவையும் அறிவிக்கின்றன.

இப்படிச் செல்வரை அடைந்து யாசிக்கின்ற போது அச்செல்வர் ஈந்தபோதோ, யாசித்தவர் விரும்

பிய பொருள் கிடைத்தபோதோதான் இரத்தல் இன்பம் தரும். அப்படி விரும்பியதை யாசகர் பெற வேண்டுமாயின், ஈபவர்காலம், இடம், குறிப்பு அறிந்து சென்று கேட்கவேண்டும். அவர்கள் தம் வயம் ஆகும் அளவுக்குப் பேசவேண்டும். அவர்கள் மனம் இளகும் அளவுக்கும் உரையாடவேண்டும். இப்படி எல்லாம் அறிந்தும், சொல்லியும் விரும்பியது கிடைக்கவில்லை என்றால், துன்பம்வரும் என்று கூற வேண்டுமோ? வேண்டா அல்லவா? செல்வர்களும் வறுமையாளர் தம் இடம்வந்து கேட்டபோது அவர்களுடைய நிலையை முன்னர் உணர்ந்து கொடுத்தல் நலமாகும். "ஈவதுகரவேல்" என்பது நம் மூதாட்டியார் மொழியல்லவா? நளனிடம் தேவர்கள் இந்த முறையைக் கூறி அன்றோ கொடைச் சிறப்பை விளக்கினர்.

குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றெனை
மறுத்தலே கேட்டபின் வழங்கல்; ஆதலின்
பெறற்கரும் ஆவியும் பெட்பின் ஈகுவன்
திறப்பட இவர்உளம் தெரிந்த தில்லையால்

என்ற நைடதச்செய்யுளையும் ஈண்டுக் காண்க.

தம்மிடம் உள்ள பொருளை மறைக்காமல் ஈயவல்லாரிடத்தில் சென்று இரத்தல், இரப்பவர்கள் தம்மிடம்வந்து ஒரு பொருளைக் கேட்பவர்க்குக் கொடுத்தலைப்போன்ற ஓர் அழகுடையதாகும். குடிப்பிறந்தவரும் யாசகர்களின் இன்மை தீரக்கொடுத்தலும் கடமையாகும். "இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோய்" என்று புறநானூறு இப் பண்புடையவள்ளல் ஒரு

வனைப் புகழ்கிறது. உள்ளதை ஒளித்துவைக்கும் இயல்பு இல்லாதவரிடத்தில் சென்று வறுமையாளர் யாசித்தல், ஈகையைப் போன்ற ஒரு செயலே என்னலாம். இதனுல் பொல்லாதவரிடத்தில் யாசிக்காமல் நல்லவரிடக்தில் யாசித்தல் முறை என்று கூறப்படுவதை உணர்க.

இங்ஙனம் இரந்து, பயன் அடைந்தவர்கள் வாமனனும், அக்னியும் ஆவர்.

"தருமகுண மாவலிபால் தானமெனச் சேர்ந்தான்
திருமகிழ் நன் தான்"

என்ற சிவ சிவ வெண்பாவாலும்,

"அங்கியும்பர் கோன்கர் வருந்தநினைந் தர்ச்சுனன்பால்
இங்கிதமாப் பெற்ருன்"

என்ற இரங்கேச வெண்பாவாலும் நன்கு அறிக.

மானத்தின் மாண்பை அறிந்தவரே தம்மிடம் உள்ளபொருளை ஒளிக்காமல் தம்மை அடுத்தவர்க்கு ஈவர். இத்தகையவர்கள் இருப்பதனுல்தான் இரப்பவர் தம் உயிரை ஓம்பப் பிறரிடம் யாசிக்கச் செல்கின்றனர். இத்தகையவர் இல்லையாயின் இரவாமல் உயிரை விட்டொழிப்பர். இல்லை என்று கூறுதல் மிக மிக இழுக்கு. அந்த இழுக்கு எப்பிறவியினும் வருதல் கூடாது என்பதற்காகவே, கன்னன் கண்ணனை நோக்கி, "ஏழ் ஏழ்பிறப்பும் இல்லை என்றுரையா இதயம் எனக்களித்தருள்" என்று வரமாகவே கேட்டனன். இந்த மனப்பண்புடையவரை அடைந்து இரந்தால், வறுமையால் வந்த துன்பம் இல்லையாகிப்

போகும். இல்லை என்றுரையாமனம் உடையவர் தம்மால் உள்ள பொருளை ஒளிக்கும் நோயினைப் பெறு தவர் என்க. இவர்கள் தம்மிடம் வந்து யாசித்தவர் வறுமை தீர்ந்து இனி வேறு எவரிடமும் சென்று யாசியாதவாறு செய்துவிடுவர். அதாவது அவ்வளவு பெரும் பொருளை ஈவர் என்பதாம்.

இப்பண்புடையவர் தம்பால் வந்து கேட்டவரை ஒருவித இழி சொல்லாலும் இழித்து உரைக்க மாட் டார். இப்படிப்பட்டவரை யாசகர் கண்டபோது உள்ளம் மகிழ்வர், இவர்கள் இனியமொழி கூறுவர். அவர்களை நன்கும் மதிப்பர். இப்படிச் செய்தால் யாசகர்கட்கு வறுமைத் துன்பம் வருமா? மகிழ்வு தானேவரும்? அம்மகிழ்வு தம் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் ஆர அனுபவிக்கும் பொருள் களைப் பெறுவதனால் அன்றோ வருகிறது? வறுமை யுடையவர் அறிவுடையராயின் தம் வறுமையைத் தீர்க் காது இழி சொல் சொல்பவரை நாடார். நாடுவராயின்,

"நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தார் என்ஞான்றும்
தம்மாலாம் ஆக்கம் இலர்என்று— தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமும்
தெருண்ட அறிவி னவர்"

என்று நாலடியார் கூறுதன்றோ? யாசகரை இகழ்ந்து உரையாது வாழ்தலே சிறப்பு என்றது, "எளியர் இவர் என்று இகழ்ந்துரையாராகி, ஒளிபட வாழ்தல் இனிது" என இனியவை நாற்பதும் கூறுகிறது. இங்ங னம் எள்ளாது ஈந்தவர், மானக்கஞ்சாறர் ஆவர். மானக்கஞ்சாறர் தம் திருமகள் கூந்தலைக் களைந்து, யாசகர்க்கு ஈந்தார்.

கஞ்சா றர் சோபனப் பெண்கூந்தல் கடிதளிக்கத்
துஞ்சு மகிழ்ச்சிகொண்டாய் சோமேசா''

என்பது சோமேசா முதுமொழி வெண்பா.

வள்ளல்களின் பண்பு அறிதற்கு இரப்பவர் செய்கையே காரணமாகும். இந்த இரப்பாளர் இல்லையாயின், இவ்வுலகில் உள்ள மக்களின் நடமாட்டம் உயிர் இல்லாத மரப்பாவையின் வரவு போக்கிற்கு ஒப்பாகும். கொடுப்பாரும் பெறுவாரும் இல்லையாயின் பாவ புண்ணியம் தெரியா அன்றோ? இவ்வாறு இரப்பவர் இல்லாத வானகம் வன்கண் உடையவர்க்கு இருப்பிடம் என்று கூடப் புலவர்கள் கூறியும் விட்டனர்.

"ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து
வாழ்வாரே வன்கண வர்''

என்ற பாடலைப் பாருங்கள். இதனால் இரத்தலும் ஈதலும் உலகியல்பு என்க. இரப்பார் இல்லையானல் நாட்டில் தாதாக்கள் இல்லை என்பது பெறப்படும். இரப்பவரால் ஈகையாளர் சிறப்புறுவர் என்பதை,

குறிப்பின் உணர்ந்து மொழியாமுன்
கொடுப்பார் முன்னின் றிரந்துயிரைத்
துறப்ப தின்றிச் சிலர்வாழ்வர்
தூய்மை மானம் கெடாமையினால்
இறப்ப உயர்ந்த கொடைமையரே
எனினும் இரப்பார் இல்லாக்கால்
சிறப்பென் பெறுவர் அவரானே
சிறப்பர் கரவா தவர்மைந்தா''

என்ற பாடலால் விநயக புராணம் அறிவிப்பதை அறியலாம்,

இவ்வாறு இரப்பவர் இருந்தால்தானே ஈகையாளர்கட்டுப் புகழ் உண்டாகும். இவர்கள் இல்லாத போது புகழ் ஏது? இக்கருத்தில் ஆபுத்திரன் என்பான் எத்துணை அழகுபட இந்திரனிடத்தில் கூறினான் பாருங்கள்!

அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவம் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர் நல்நாடு

என்பது மணிமேகலை

இக்கருத்தினையே புறநானூறும் "உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும் கடவதன்மையின் கையறவுடைத்து" எனக்கூறுகிறது. யாசகனும் சிறிது எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். தனக்குப் பிறர் ஈயவில்லையாயின் அதன் பொருட்டு அவர்களைக் கோபித்தல் ஆகாது. இவன் யாசித்தற்குக் காரணம் தன்னிடம் பொருள் இன்மையே அல்லவா? "பிச்சை புக்குண்பான் பிளிறுமை முன் இனிது" என்னும் இனியவை நாற்பதில் உள்ள தொடர்ப்பொருளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இந்த அதிகாரத்தில் வள்ளுவனார் இரத்தம் இழிவன்று என்று கூறியிருப்பதாகக் கொண்டு எவரும் யாசிக்க எண்ணுதல் கூடாது. நாட்டில் எல்லோரும் செல்வர்களாக இருத்தல் இயலாது ஆதலின், வறுமைத் துன்பத்தால் இரக்க நேரிடும் ஆதலின், இரவினை இழிவாகக்கருத வேண்டா என்பதற்கும், இரந்தவர்கட்கு ஈய வேண்டுவது செல்வர் கடமை என்பதற்கும், அத

னுல் அவர்கள் புகழைத் தேடவேண்டும் என்பதற்கும் இந்த அதிகாரத்தை அமைத்துள்ளார் என்க. " இரப்பவர்க் ஈயவைத்தார்" என்று அப்பர் கூறும் கருத்து நம்மனத்தில் படிதல் வேண்டும். இரவுத் தொழிலே மேற்கொண்டு வாழலாம் என்பதை வள்ளுவர் சிறப்பாகக் கருதியிருப்பாராயின், இந்த இரவு என்னும் அதிகாரத்திற்கு அடுத்தாற்போல் "இரவச்சம்" என்னும் அதிகாரத்தைக் கூறுர் அல்லரோ ? அவ்வதிகாரத்தில் இரவு எத்துணை இழிவுதரும் என்பதை நன்கு அறியலாம்.

# 13. இரவச்சம்.

இரவச்சமாவது மானம் நீங்குதற்குக் காரணமான இரவிற்கு அஞ்சுதல் வேண்டும் என்பதாம். இதற்கு முன்பு இரத்தல்கூட இனிது ஆகும் என்பதற்குப் பல காரணங்களைக் காட்டினாலும், மேலானோர் அவ்விரத்தலைச் செய்தல்கூடாது என்பதே வள்ளுவர் கருத்து.

தம்மிடம் உள்ளதை ஒளிக்காமல் தம்மை அடுத்து யாசிப்பவர்க்கு ஈயும் தன்மையாரிடத்திலும் சென்று இரத்தல் கூடாது. அப்படி இரவாதிருத்தல் கோடி பங்கு நல்லதாகும். இரவாது உயிர் ஓம்ப வேண்டுமானால், முயற்சி செய்து ஊதியம் தேடி உயிர் வாழ்தல் வேண்டும். இரவாது வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்பது நாலடியார் கருத்தும் ஆகும்.

" கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை— இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு "

என்பது அந் நாலடியார் பாடல்.

" மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு
உறுமா றியைவ கொடுத்தல்—வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி உறும் "

என்பதும் நாலடியாரில் மற்றொரு பாடல். இதே தருணத்தில் விநாயகபுராணம்,

"கண்ணில் சிறந்தார் தம்மிடத்தும் காழ்த்த மானம்
பண்ணற் குரிய அறங்குறித்தும் படர்ந்தொன்
றிரவார் பெருமையினல்

என்று கூறுவதையும் உணரவேண்டும்.

"நான் எப்படி யாசிக்காமல் இருப்பேன்; யாசிக்கும்படிதானே என் தலையில் எழுதிப் பிரமன் படைத்திட்டான்" என்று ஒருவன் கூறுவாணயின், அப்படி வாழ வேண்டுமென்று படைத்த பிரமன் யாசகனைப் போலப் பல இடங்களில் திரிந்து அழிவானுக. பிரமன் படைப்பில், கருவோடே உயிர்களுக்கு வாழ்நாளும் அதற்கு வேண்டிய உண்டியும், அதற்குக் காரண மான செய் தொழிலும் முன்னே விதிப்பயனுல் உண்டாக்குகின்ருன். அவற்ருேடு யாசித்தலையும் சேர்த்துப் படைப்பின் அவன் கெட்டே போகவேண்டும்.

பொருள் இல்லையானுல் யாசிக்கலாமா? இறந்து விடுதலே நல்லது. வறுமையால் துன்பம் வந்தால் அத் துன்பத்தைத் தீர்க்கும் வழியை முயன்று காண வேண்டும். இவ்வாறு இன்றி "வறுமையை இரந்து உண்டு ஒழிப்பேன்" என்று கூறுதல் அறிவீனமாகும். முரட்டுத்தனமும் ஆகும். வறுமையால் இரந்துண்பதால் வரும் இழிவைத் தீர்க்கவே முடியாது. மலையை வேண்டுமானுல் மயிரில் கட்டலாம். கடுகைத்துளைத்து ஏழுகடலையும் அடைக்கலாம். ஆனுல், அனுபவிக்கக்கூடிய பொருள் இன்மையால் வறுமையால் வாடினுலும், பிறர் இடத்தில் சென்று இரத்தல் கூடாது. இவ்வாறு இரவாத தன்மைக்கு, உலகம் கொள்ளாத பெருமை உடைத்து. "உரவோர் என்கை இரவா

திருத்தல்'' என்னும் கொன்றை வேந்தன் அடியினை நினைவுகொள்க.

முயற்சி கொண்டு சிறு பொருளையாயினும் தேடி உண்டு உயிர் வாழ வேண்டும். தெளிந்த நீராகிய சமைத்த சிறு உணவானாலும், இரவாது பெற்றது இனிமையுடையது. இவ்வுணவு அமுதுக்குச் சமம். இரந்து பெற்றது மோர் ஆனாலும், காடியானாலும், சர்க்கரையானாலும், பாலானாலும் அவை வேண்டா. முயற்சியால் பெற்றது தெளிந்த நீரால் ஆன சிறு உணவானாலும் சிறந்ததே.

" பெருமுத் தரையர் பெரிதுவந் தியும்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பும் தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும் ''

என்பது நாலடியார்

" எண்ணிற் சிறந்தார் முயற்சியினால் எலா உப்பில்
வறும்புற்கை
உண்ணற் கமைந்த தமைத்ததென உவப்பர் எம
கண்டனே''

என்பது விநாயக புராணம்.

இரவு மிக மிக இழிந்த குணம் ஆகும். தனக்காக இரவாமல் தண்ணீர் பெறாமல் இறக்கும் நிலையில் உள்ள பசுவிற்கென்று நீரை இரத்தலும், நாவிற்கு இழிவு என்று கருதப்படுமானால், அந்தோ! தனக்காக ஒருவன் இரத்தல் எத்துணை இழிவு தரும் என்பதைக் கூறவும் வேண்டுமா? ஆவினைக் காத்து ஓம்புதல் அறம்தான். பொருள் கொடுத்துப் பெற வேண்டாத நிலையில் உள்ளது, நீர்தான். என்றாலும், அறம் பொருட்டுச் செய்யும் செயலும் இரந்து செய்யாமல் முயற்சி கொண்

டே செய்ய வேண்டும். "இரத்தலின் ஊங்கு இளிவர வில்" என்னும் முதுமொழிக் காஞ்சி அடியினைக் காண்க. ஏற்பது இகழ்ச்சி அல்லவா ?

கணம்புல்லர் விளக்கேற்றலாகிய அறத்தினைச் செய்ய எண்ணினர். விளக்கேற்ற வேண்டுமாயின் எண்ணெய் தேடவேண்டும்; பிறரைக் கேட்க வேண்டும். இது கூடாது என்று தீர்மானித்துத் தம் முடியினையே விளக்காகக் கொளுத்தி விளக்கேற்றினர்.

"எண்ணெயிரப் பஞ்சியுட லேவருத்தித் தீபமிட்டார்
துண்ணெனன் கணம்புல்லர்"

என்று இவர் தருமத்தின் பொருட்டு யாசிக்காமல் தம் உடலை வருத்தியே தருமம் செய்ததைச் சோமேசர் முதுமொழி வெண்பா பாராட்டுகிறது. தேகி என்று இரக்கும் சொல் இன்னாது என்பது தினகர வெண்பா வின் கருத்துமாகும். பிறர்பால் சென்று இரப்பவர் எவ்வளவு நெடியராயினும் குறுகியே போவர். இதற்கு உதாரணம் திருமால் மாவலி இடம் மண் வேண்ட இரந்தபோது தம்மைக் குறுக்கிக்கொண்டுதானே சென்றார் ? இதனை இரங்கேச வெண்பா எவ்வளவு அழகுபடக் கூறி நகைக்கிறது பாருங்கள் !

"சென்று பலிபக்கல் செங்கைவிரித் தேற்றல்பழு
தென்றுகுன்றி நின்றாய் இரங்கேசா"

என்பது அப்பாடல். அந்தோ ! இரவாதீர்கள். இரந் தாலும் தம்மிடம் உள்ள பொருளை ஈயாது ஒளிப்பவர் பலர் நாட்டில் உளர். அப்படி இரக்க வேண்டுமாயின், பொருளைப் பெற்றிருந்தும் ஒளிப்பவர்களிடம் சென்று இரவாதீர்கள் என்று யாசகர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

வறுமையாகிய கடலைக் கடப்பதற்கு இரவு என்னும் படகை மேற்கொள்வோம் என்று சிலர் கருதலாம். அந்தோ! அது, வறுமைக் கடலைக் கடக்கும் போது, கரத்தல் என்னும் பாறையில் தாக்குண்டு அழிந்து போகும். முயற்சியாகிய படகாயின் வறுமைக் கடலைக் கடக்கலாம். இரவு என்று நினைத்த அளவில் உள்ளம் உருகுகிறது. அப்படியே பொருள் உள்ளவர் கொடுக்க மறைத்தபோது உள்ளமே அன்றி எல்லாமும் கெடும். ஆகவே, இரப்பு மிகமிக இழிவு. இப்படி இழிவு என்று தெரிந்தும் போய் யாசித்தபோது "இல்லை போ" என்று பொருள் உள்ளவர் கூறிவிட்டால் மானம் தாங்காது; உயிர் போய்விடும். சொல்லக் கேட்டவர் உயிரே போகுமானால், சொன்னவர் உயிர் மட்டும் இருக்குமோ? இராது. இதனால் யாசித்தலும் தீது; யாசிப்பவர்க்கு இல்லை என்று கூறுதல் அதனினும் தீயது என்று உணரவேண்டும்.

இது வரை கூறியவற்றால் இரவு கூடாது என்பது பெறப்பட்டது. இவ்விரவு கூடாது என்றால் நாட்டில் பொருளாதார நிலை சிறந்து இருக்கவேண்டும். பொருள் பெறுவதற்கு உரிய வசதிகள் நாட்டில் அமைந்திருத்தல் வேண்டும். அவ்வழியினைக் குடிமக்களே செய்துகொள்ள வேண்டும். நாட்டில் தொழில் முறை ஓங்கவேண்டும். அத்தொழில் முறை பலவாயினும் உழவுத் தொழிலாகிலும், ஒழுங்குற நடைபெறவேண்டும். உழவுத் தொழிலே சாலச் சிறந்த தொழிலாகும். அத்தொழிலின் சிறப்பு என்ன? அத்தொழிலை நாட்டு மக்கள் எப்படி நடத்தி நாட்டின் பொருளாதார நிலையைப் பெருக்க வேண்டும் என்பனவற்றை இனிப்பார்ப்போமாக.

# 14. உழவு.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பது நம்நாட்டு முதுமொழி. உழைப்பினுல் பொருளாதார நெருக்கடி, பசியின்மை முதலிய வற்றைப் போக்கலாம் என்பதே இப்பழமொழியின் கருத்து. இந்த அடிப்படையான காரணம் தொன்று தொட்டே நாட்டில் நிலேத்த ஒன்று என்பதை அறிந்தே வள்ளுவரும், தாம் கூறப்போவது தானிய விளே பொருள் தொழிலேப் பற்றியதாக இருந்தும், வேளாண்மை என்பதற்கும் உழைப்பு என்பதற்கும் பொதுவாக இருக்கவேண்டியே உழவு, என்றே தலேப் புக் கொடுத்துப் பேசினர். எல்லாவற்றிற்கும் உணவே இன்றியமையாதது. அவ்வுணவிற்குக் காரணம் உழவு.

இந்த உழவு நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இன்றியமையாத தொழிலாகும். இவ்வுழவுத்தொழில் சிறுபான்மை வணிகர்க்கும், பெரும் பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய தொழிலாகும். இவர் களும் பணியாளர்களே வைத்து உழுது பயன் பெறு வாராயின், அவர்களே உழுவித்துண்ணும் வேளாளர் என்றும், தாமே பயிரிட்டு அதன்பயனே அனுபவித்து வரின், அவர்களே உழுதுண்ணும் வேளாளர்கள் என்றும் நம் முன்னேர் கூறிவந்தனர். ஆனுல், இப்படிப் பாகுபடுத்த வேண்டுவதில்லே. இது எல்லோர்க்கும் உரியது. இது குடியுயர்தற்கும் காரணமானது.' குடியினே உயர்த்த விரும்பும் நல்ல மக்களுக்கு உழவு, தொழில், வரைவு, வாணிகம்

சிற்பம், வித்தை என்ற ஆறும் வேண்டியிருக்கின்றன. இவை முயற்சியினாலும், அறிவினாலும் பெறக் கூடியயவை. இவற்றுள் உழவின் மூலம் தானியங்களை உண்டுபண்ணிக் குடி உயர்த்தல் கடமையாகும். அறிவினால் பெறக்கூடிய அனைத்தினும் இதுவே சிறந்ததாக அறிஞரால் கருதப்படுகிறது. இதற்குக் காரணம், உலகமானது உழவுத்தொழிலை விடுத்து வேறு எந்தத் தொழிலைச் செய்து திரிந்தாலும் முடிவில் ஏர் பிடிப்பவன் பின் சென்றே உணவுக்காக நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உழவே தலை சிறந்த தொழில் என்பது பெறப்படுகிறது அல்லவா? "தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" என்னும் கொன்றை வேந்தன் அடியினையும் காண்க. உழவு செய்து அதனால் கிடைத்த பொருளைத் தருமத்திற்குக் கொடுத்தல் சிறப்புடைய புண்ணியமாகும். உண்ணவேண்டி, கடல் ஓடியும், மலை ஏறியும், காடு சேர்ந்தும், நாடு கடந்தும் ஓடித்திரிந்தும் பொருளைத் தேடினாலும், உணவுப் பண்டத்திற்கு உழவைத் தானே தேடவேண்டும்? ஆதலால், உழவே தலை சிறந்ததொழில். உழுபவர் உபகாரிகள் என்ற பெயருக்கும் உரியர் ஆவர்."

உழுவித்திருவர் இருவர்உழு வித்து முழுதும் உணலாகும்
உழுதுண் பவரே தமக்குரியர் உபகா ரிஎன் பார்அவரே.

என்ற விநாயக புராணப் பாடலைக் காண்க.

அலகிலா மறைவிளங்கும் அந்தணர்ஆ குதிவிளங்கும்
பலகலையாம் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாம் திருவிளங்கும் மழைவிளங்கும் மறுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும் உழவாலே.

என்ற ஏர் எழுபது பாடலையும் பார்த்து உழவின் சிறப்பை உணர்வோமாக.

உலகமாகிய தேர்க்கு அச்சாணியாக இருப்பவர்களும் உழவர்களே. உழவர்கள் உழுதொழிலைச் செய்யாது பிறதொழிலைச் செய்பவரையும் தாங்கி நிற்கின்றனர். இதனால் உலகம் இடையறாது நடக்கிறது. ஆகவே, அவர்கள் உலகமாகிய தேர்க்கு அச்சாணி ஆயினர். உழுதொழிலைச் செய்யாதவர் பிறருடைய பெருமிதத்தினால் எது செய்யினும், அதனைப் பொறுத்து அவர்களைத் தொழுது வயிறு வளர்த்துக் காலங் கழிப்பர். உழவர்கள் பிறரைத் தொழுதல் செய்யாது தம்மையும் அரசரையும் பெரியராக்கி உலகத்தையும் தாங்குவர்.

தொழுதுண் பவரே பிறர்க்குரியார்
தொழில்முற் றுழந்தும் உழவினர்பால்
முழுதும் அடுப்ப வேண்டுதலின்
முதன்மைத் துழவென் றறிமைந்தா

என்று விநாயக புராணமும்

உழவுத் தொழில் முதன்மையானது என்று காட்டுகிறது. ஆகவே, உழுது அதனால் வரும் பயனை உண்டு வாழ்பவரே நல்வாழ்வு வாழ்பவர் ஆவர். மற்றவர்கள் பிறரைத் தொழுது அதனால் வரும் பொருளைக் கொண்டு வாழ்பர் ஆவர். செல்வமும் உழவினால் வருமெனில், அதுவே சிறந்ததாகும். இதனால் ஏற்றவர்க்கும் இட்டு வழங்கி வாழலாம். அரசர்க்கும் உழவர் உணவுப் பொருள்களைத் தர வேண்டி இருக்கிறதல்லவா? ஆகவே, அரசர் வாழ்வும் உழவர் வாழ்வுபோன்ற பெருமை உடையது

அன்று. இதனால் அல்லவா "நெற்பயிர் விளை" "உழு துண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்னும் வாக்குகள் எழுந்தன?

உழுததனால் கிடைத்த தானியங்களை உடையவ ராகிய கருணை நிரம்பிய உழவர்கள், பல அரசர்களின் கீழ்வாழும் மக்களையும் நாட்டையும் தம் அரசர் கீழ் வந்து வாழுமாறும் சேருமாறும் காண்பர். அரசனது வெற்றி உழவர்களின் உழைப்பின் காரணத்தால் என் பதை எல்லோரும் அறிந்திருந்தனர். இதனைப் புற நானூறு "ஊன்று சால்மருங்கின் ஈன்றதன் பயனே" என்று நன்கு எடுத்து இயம்புகிறது. இத்துடனா உழ வின் சிறப்பு நின்றது? சிலப்பதிகாரம் "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப் போர்" என்றும் இயம்புகிறது. இதனால் உழவர்கள் தாம் வாழ்வதோடு அரசரையும் பிறரையும் வாழ் விப்பர் என்பது பெறப்படுகிறதல்லவா? இதனால் தான் "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்றும், "மேழிச் செல்வம் கோழை படாது" என்றும் கொன்றைவேந்தன் கூறுகிறது. உழவர்கள் தம் கையால் உழுது உண்டலை இயல்பாக உடையர். இவ் உழவர்கட்கு இருக்கும் சிறப்புக்கள் பலவற்றுள், தாம் பிறரிடம் சென்று எதுவொன்றையும் கேளாத இயல் பும், தம்மிடம் வந்து கேட்பவர்க்கு இல்லை என்று கூறாது ஈயும் இயல்பும் ஆகிய இவ்விரண்டு சிறப்புக் களும் உண்டு. இதனால் உழவர்கள் எக்காலத்தும் அழிவில்லாத செல்வம் உடையவர் என்பது தெரிகிற தல்லவா? இவர்களே இல்லற நடத்தவல்ல இயல் பினர் என்பதும் அறியவருகின்றதன்றோ?

இங்ஙனம் உழுதொழிலால் வேளாண்மைக் குணம், உரமேறி இருந்த காரணத்தால் அல்லவா, இளையான் குடிமாற நாயனர் தம் இல்லத்திற்கு வந்த அதிதிக்குத் தாம் வறுமையுற்றிருந்த காலத்திலும், உணவு அளித்து உபசரித்தார்? இதனை,

" இன்னலொற்கத் தும்உழவை ஏற்றலினீ சற்கமுது
முன்னமைத்தார் மாறர் முருகேசா "

என்று முருகேசர் வெண்பா மொழிகிறது.

ஆ! நாட்டில் வாழும் உழவர்களுக்கு இருக்கும் பெருமையே பெருமை! உழவர்கள் உழுதொழிலைச் செய்யமாட்டாமல் கைகட்டி இருந்துவிடுவாராஞல், எல்லாவற்றையும் விட்டோம் என்னும் தவசிகளும் தம்தவ ஒழுக்கத்தைச் சரிவர நடத்தி நன்னிலை எய்த மாட்டார். இதன் கருத்து உலகத்தில் இம்மை, மறுமை வீடு என்னும் பயன்கள் நிகழா. ஆகவே, துறவறம் இனிது நடக்கவும் இல்லறம், இனிது நடக்கவும் உழவே காரணமாகும்.

" வேள்வித் தொழிற்கும் உழுதொழில்முன் வேண்டுமால்
சூழிரும் தென்குளத்தூர்ச் சோமேசா "

என்னும் சோமேசர் முதுமொழி வெண்பா கூறுவதை யும் காண்க.

இதுவரை உழவரது பெருமை உரைக்கப்பட்டது அவ்வுழவர் எப்படி உழைத்தால் நிலம் நல்ல பலனைத் தரும் என்பதையும் அறிதல்வேண்டும். நிலம் நல்ல பயனைத் தரவேண்டுமாஞல் நிலத்தை உழுபவன் ஒருபலப் புழுதி கால் பலம் எடைக்குவரும் அளவுக்கு நிலத்தை காயவிட வேண்டும். அப்படிக் காயவிட்ட நிலத்தில்

செய்த பயர் ஒரு பிடி எருவும் இடவேண்டியதின்றி நன்கு வளர்ந்து பயன்தரும். அதாவது புழுதியே எருவாகும் என்பதாம். மேலும், நிலம் நல்ல விளைவினைத்தருதற்குச் சில உபாயங்கள் இருக்கின்றன. ஏர் கட்டி நீர் பதம்கொண்டு உழவேண்டும். பின் எரு இடுதல் வேண்டும். பின் களை எடுத்தல் வேண்டும். அதன்பின் நீரினைக் கால்வாயினின்றும் பாய்ச்ச வேண்டும். நன்கு வளர்கிறதே என்று சும்மா இராமல் கள்வராலும், விலங்குகளாலும் பறவை பூச்சு முதலியவற்றாலும் அழிவு ஏற்படாதிருக்கக் காவல் காக்கவேண்டும். காத்தல் மிக மிக இன்றியமையாதது என்பதற்காக அன்றோ, வள்ளியம்மையும் தினைப்புனத்தைக் காத்து வந்தனள் ?

" வள்ளிபுனம் காத்திருந்த வாறேது வான்பயிர்செய்
தெள்ளிமையால் அன்றோ சிவசிவா "

என்ற சிவசிவ வெண்பாவைக் காண்க.

ஆகவே, பயிருக்கு உழுதல், எருவிடுதல், களை எடுத்தல், கால்வாய் நீரைப்பாய்ச்சல், காத்தல் இன்றியமையாதவை என்பது தெரிகிறதல்லவா ? ஏர் உழுவதால் பயிர் நன்கு வேர் ஊன்றிக் கிளைக்கத் தொடங்கும். எருவிடுவதால் கிளைத்த பயிர் தழைக்கத் தொடங்கும். களை எடுத்ததால் பயிரின் வளர்ச்சியினைக் கெடுக்கும் கோரைமுதலியன மீண்டும் கிளம்பாமல் இருக்கும். நீரைப் பாய்ச்சுவதால் பயிர் வாடாமல் இருக்கும். காத்தல், நிலத்தில் பாய்ச்சிய நீர் பிற நிலத்திற்குப் போகாதவாறு பார்த்துக் கொள்ளுதற்கும், பயிர் அழிவுறாதிருத்தற்கும் ஆகும்.

மேலே கூறிய ஐந்து தொழில்களில் மட்டும் கவனத்தைச் செலுத்திப் பயன் இல்லை. அடிக்கடி நிலத்தைக் கவனித்துக் கொண்டே வரவேண்டும். "உடையவன் கண் ஓடாப் பயிர் அழியும் அல்லவா" அப்படிச் செய்யவில்லையானல், தன்னைக் கவனியா திருக்கும் கணவன்மீது பிணக்கம் கொண்டு ஊடும் மனைவிபோல நிலமும் உழவனை வெறுத்துவிடும். அதாவது பயனைத்தராது போகும். ஆகவே, அடிக்கடி அவனது பார்வை இருந்து வரவேண்டும். பிறரை அனுப்பிப் பார்வையிட்டு வருமாறு செய்தல் கூடாது. "பூமி விரும்பு" என்னும் ஆத்திசூடி தொடரைப் பார்க்க.

> " மைபார்த்த புன்பயிர்க்கும் வான்பயிர்க்கும் போய்ப்
> செய்பார்க்க வேண்டும்." [பல்கால்

என்பது தினகர் வெண்பா.

ஆகவே, நாட்டுமக்கள் உழவை மேற்கொண்டு நன்கு நடத்தவேண்டும். "பொருள் இல்லை பொருள் இல்லை" என்று சோம்பி இருத்தல் கூடாது. இப்படிக் கூறுபவரைப் பார்த்து நிலம் என்னும் மாது எள்ளி நகைப்பாள். "ஏ அறிவிலியே, என்னைத் திருத்தி ஏன் உணவையும் பொருளையும் தேடிக்கொள்ளக் கூடாது" என்பாள். இப்படியெல்லாம் உழவின் சிறப் பினை எடுத்து இயம்பியதனல் ஒரு நாட்டில் நல்ல நிலபலமும் உழவர்களும் பொருந்திப் பொருள்வளம் பெருக்க வேண்டும் என்பதை அறிந்தோம். அப் படிப் பெற்ற பொருளினை எப்படிப் பயன் படுத்த வேண்டும் என்பதையும் இனிப்பார்ப்போமாக.

## 15. நன்றியில் செல்வம்.

செல்வத்தைத்தேடிப் பிறர்க்கும் தமக்கும் பயன் படும் வகையில் செலவு செய்யவேண்டும். இங்ஙனம் பயன் படுத்தப்படாத செல்வம் நன்றி இல்லாத செல்வம் என்றே கருதப்படும். செலவு செய்யாதவன் மீது உள்ள குற்றம் பொருள்மீதே ஏற்றப்பட்டுச் செல்வம் நன்றியில் செல்வமாகிவிட்டது. பயன் படுத்தப்படாத செல்வம், அறமும் பயவாது; இன்பத்தையும் தராது. மக்கள், உழைப்பும் பணமும் உடையராஞல் தேடிய செல்வத்தை நல்வழியில் பயன்படுத்த வேண்டும்.

" பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று "

என்ற குறளால் பண்பறியான் செல்வம் நன்றியில் செல்வமாய்ப் பயன் அற்றுப்போவதைக் காண்க.

" வைத்தப் பொருளைத் தான்நுகரான் வழங்கான்
இருந்தும் செத்தானே
செத்த பின்னர் என்செய்வான்."

என்று விஞயக புராணம் நன்றியில் செல்வனை எப்படி வைகிறது பாருங்கள்! பொருளைச்சேர்த்து நன்முறையில் செலவிடார் துன்பமே உறுவர் என்பதைப் பெருந் தேவஞர் பாரதமும் நன்கு எடுத்து இயம்புகிறது.

தீயாலோ நீராலோ தேர்வேந்தர் தம்மாலோ
மாயாத தெவ்வர் வலியரலோ—யாதாலோ
இப்பொருள்போய் மாய்கின்ற தென்றுபொருள் வைத்
எப்பொழுதும் நீங்கா திடர். [தார்கள்

என்பது அப்பாடல்.

தான் தேடிய பொருளைத் தன் வீடு முழுமையும் குவித்து உலோபம் காரணமாகத்தான் உண்ணுமலும் நல்வழியில் செலவு செய்யாமலும் வைத்துப்பயன் இல்லை. அப்படிப்பட்டவனை உயிர் உள்ளவன் என்று கூடக்கூற முடியாது. செத்தான் என்றே கூற வேண்டும். அவன் பொருளைப் பெற்றும் உண்ணுது இருப்பாஞனல், அவன் செத்தவனே என்று அன்றி, வேறு அவனை என்ன கூறமுடியும்' அவன் நடைப்பிணமே. உண்ணுதல் என்றதஞல் வாய்ச்சுவையினை மட்டும் கூறியதாக எண்ணவேண்டா. செவியாலும், உடம்பாலும், கண்ணுலும், மூக்காலும் அனுபவிக்கக் கூடிய நலன்களையும் துய்க்கவேண்டும். இத்தருணத்தில்,

வழங்கலும் துய்த்தலும் தேற்ருதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப அதுவன்ருே
நாய்பெற்ற தெங்கம் பழம்.

என்றும்,

படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடரும்தம் பற்றிஞல் வைத்திறப் பாரே
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்.

என்றுகூறும் பழமொழிப் பாடல்களையும்

வைத்தப் பொருளைத் தான் நுகரான்
வழங்கான் இருந்தும் செத்தானே
செத்த பின்னர் என்செய்வான்
தீயார் கொள்வர் ஈட்டுதலர்ன்

மெத்தம் வருத்த மேஅன்றி
  வேறொன்றில்லை ஆதலினால்
பொத்தும் வெறுக்கை நன்றியுறல்
  புசித்து வழங்க லேயாகும்.

என்னும் விநாயக புராணச் செய்யுளையும் காண்க.

எல்லாவற்றிற்கும் பொருள்தான் காரணம். அதனால் அதனைத் தேடியே ஆகவேண்டும். தேடிய பொருளைப் பிறருக்கு ஈயாமல் இருக்கலாமா? ஈயாது அப்பொருளினிடத்து ஓயாப்பற்றினை வைக்கலாமா? இப்படி எவன் அப்பொருளினிடத்தில் பற்றுள்ளம் வைக்கின்றானோ, அவனுக்குப் பேய்ப்பிறப்பே உண்டாகும். பொருளைத் தேடும்போது உள்ள அறிவு அப்படித் தேடியபொருளை ஏழை எளியர்க்கு ஈய வேண்டும் என்று அறியும் இயல்பு இல்லாமையால் மயக்க புத்தியே ஏற்படுதலின் அவன் மருள் உடையவனாகவே ஆகின்றான். பொருள் உள்ளபோது பிறரது பசி கண்டும் அதனைத் தீர்க்காத காரணத்தால் ஏற்படும், தீவினை பொருள் பெற்ற போதும் தான் பசித்து வருந்தும் நிலையையே பெறுவான் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இத்தகையவன் தீக்கதியே அடைவான். இவன் நரகில் புகுவான். கடையான பிறப்பே இவனுக்கு உளதாகும். இவன் தேடிய பொருள் வெறும் பாவப்பொருளே ஆகும்.

பொருள் தேடுதலையே பெரிது என்று எண்ணி ஈவதனால் உண்டாகும் புகழை வேண்டாதவன் நில உலகில் வாழ்வது வீணே. அவன் சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமாவான் அந்தோ! இப்படிப் பட்டவன் வள்ளுவர் கூறும்,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு"

என்னும் குறட் கருத்தையும் கவனியாது இருப்பது நன்றன்று.

புகழே இம்மை மறுமைகளுக்கு உறுதியாகிய அறமாகும். ஆதலால், ஈகையால் அப்புகழை விரும்புதல் வேண்டும். அவ்வாறு இன்றிப் பொருளைச் சேகரிக்கும் பொருட்டுத் துன்புறுதலும், காத்தல் பொருட்டுத் துன்புறுதலும் அறிவின்மையே ஆகும். இவ்வறிவீனரைப் பூமிக்குப்பாரம் என்னுது வேறு என்ன கூற இயலும்! இவர்கள் பிறவாது இருப்பதே மேல் அல்லவா! இவர்கள் கீர்த்தி, தானம், கிருபை ஆகிய இவற்றை இழந்தவர் அன்ருே?

செல்வம் பெற்றவன் எவராலும் விரும்பப்படுதல் வேண்டும். அப்படி விரும்பப்படுதற்குக் காரணம் தான்பெற்ற பொருளைப் பிறர்க்கு ஈவதனுல் என்க. ஈயானுயின், அவனை எவரும் விரும்பார். இப்படிப்பட்டவன் இறந்தால் தனக்குப் பின் இவ்வுலகில் எதை நிலை நிறுத்திச்செல்ல வல்லவனுவான்? தான் இறந்த பிறகு தன்னைப்பற்றி நினைக்கவாவது பெற்ற பொருளைச் சிறிது பிறர்க்கு ஈய வேண்டாவா? ஈந்தால் தானே புகழ் நிலைக்கும்? வள்ளுவர் மற்ருேர் இடத்தில்,

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்"

என்ருர்.

புகழைத்தானே எச்சம் என்று கருதவேண்டும்? குலம், உருவு, குணம், ஒழுக்கம் புதல்வர், பொருள், பூமி

ஆகிய இவற்றை ஒருவன் தான் இறந்த பின் விட்டுச் சென்ருல் அவை எச்சம் என்று கருதப்படாதோ எனில், அவை புகழ்போலச் சிறப்புடையன அல்ல. ஆதலின், உலகம் புகழையே எச்சமெனக் கருதும்.

கோடிகோடியாகப் பொருளை ஈட்டியவன் ஏழைகளுக்கு ஈயாமலும், தானும் துய்க்காமலும் இருந்தால் அப்பெரும் பொருளால் அவனுக்குப்பயன் இல்லை. இத்தகையவன் பொருளைப் பெற்றிருந்தும், ஏழையைப் போன்றவனே. ஏன்? ஏழை பிறர்க்கு ஈயவும் இயலாது; தானும் துய்க்கவும் ஒண்ணுது அன்ருே?

" செல்வம் மிகப்படைத்தும் தியாகபோ கங்களில்லார்
செல்வமென்ன செல்வம் தினகரா "

என்னும் தினகர வெண்பாவையும் காண்க.

தானும் அனுபவியாமல், உதவியினைப் பெறத் தக்கவர்க்கு ஈயாமலும் வைத்திருக்கும் பொருள், அவனுக்கு ஒரு நோய் போன்றதேயாகும்; துன்பமும் ஆகும்; குற்றமும் உடையதாகும்; பாவத்திரள் ஒன்றுகூடியது போன்றதும் ஆகும். மேலும், பிறர்க்கு உதவாதான் செல்வத்தின் இயப்பைப் பாருங்கள். ஒருத்தி நல்ல உடல் அழகு, உள்ளத்தழகு முதலிய எல்லாம் பெற்றும், தான் ஒரு மணமகனேடு வாழ்தல் இன்றித் தன் இளமையினைக் கழித்து முதுமையுற்று வருவாளாயின், அவள் அழகு நலங்களைப் பெற்றும் பயன் உறுவாளோ? ஒருக்காலும் பயன் அடையாள். அதுபோன்றதே ஏழைகட்கு ஈயாதவன் தன்னிடம் செல்வத்தைப் பெற்றிருப்பது. அதாவது

அவன் செல்வம் பயன் அற்றதாகும். இங்குச் செல்வத்தைப் பெற்றும் பிறர்க்கு உதவாத ஒருவன் வரலாற்றுக் குறிப்பினையும் அறிதல் நலமே.

கும்பகோணத்தில் மருத்தர் என்பவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அதே ஊரில் திருத்தங்கி என்பவனும் வாழ்ந்து வந்தான். இருவரும் தோட்டப் பயிர் செய்து தம் வாழ் நாளைக் கழித்து வந்தனர். ஆனால், மருத்தர் தம்மை நாடிவந்தவர்கட்கு நல் உணவு ஈந்து தம் தோட்டத்தில் வாழைகள், இலைகள் பூக்கள், காய்களை விற்றுவிற்று ஏழை எளியவர்கட்கே ஈந்து வந்தார். திருத்தங்கியோ எவர்க்கும் ஒன்றையும் ஈயாதவனாய்த் தன் தோட்டத்தை நன்கு செழிப்புடையதாக வைத்துக்கொண்டு, ஓர் இலையும், பூவும், காயும், பழமும் குறைவின்றி இருக்க வைத்திருந்தான். இத்தகையவனை ஔவையார் நாடிவந்து உணவு தருமாறு கேட்டனர். அவ் வுலோபி, மருத்தர் வீட்டிற்குச் சென்று கேட்குமாறு அனுப்பிவிட்டனன்.

ஔவையார் மருத்தர் வீட்டிற்குச் சென்றார்; உணவு கேட்டார். மருத்தர் இல்லை என்று உரையா இதயம் படைத்தவர் ஆதலின், உணவுதர இசைந்து, வாழையிலை பெறத் திருத்தங்கியிடம் வந்து கடனாக ஓர் இலை கேட்டார். அப்பாவி தன்னிடம் பல இலைகள் இருக்கவும், ஓர் இலை கொடுக்க மறுத்து விட்டான். இதனை அறிந்து ஔவையார் திருத்தங்கி செல்வம் பெற்றும் பயன் அற்றவன். ஆனால், மருத்தர் வறுமையுடையராயினும் விருந்தினரை என்றும் உபசரிக்கும் இயல்பினர் என்ற பொருளில்,

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்
உலகில் வருவிருந்தோர் உண்டு

என்று ஒருபாடலை பாடினார்.

இப்படிப்பட்ட திருத்தங்கியை முதுமொழி மேல் வைப்பு என்னும் நூல்,

" எங்கள்இறை அன்பருக் கொன்றீயாமை யால்பிறந்து
பங்கப் படத்துணிந்த பாவித்திருத்—தங்கி "

என்று வைகிறது.

திருத்தங்கியைப் போன்றவர் பெற்ற செல்வம், ஊர் நடுவே நச்சுத்தன்மையுடைய மரம் நன்கு பழுத்து இருப்பதற்குச் சமம்தானே? பழம் என்று எண்ணி நச்சுமரத்தின் பழங்களில் ஒன்றைத் தின்றால், விடம் பொருந்தப்பெற்று இருத்தலின், அதனை உண்டவர் இறப்பர் அன்றோ? அது போலவே பிறரால் விரும்பப்படாதவன் செல்வம் உடையவன் என்று கருதி அவனிடம் ஏதேனும் கிடைக்குமென ஏமாந்து எவரேனும் சென்றால், பயனின்றித் தீங்கு பெற்றே திரும்புவர்.

" அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ஆயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று ".

என்னும் நாலடியார் பாடலைக் காண்க.

இங்ஙனம் செல்வத்தைப் பெற்றவர் கொடாத காரணத்தால் சுற்றத்தார் நட்டார் ஆகிய இவர்களிடத்தும் அன்பு செய்தலை ஒழிவர். தம்மையும் உண்ணுதும் உடாதும் அழிவுக்குள்ளாக்கிக் கொள்வர். ஏழைகட்கு ஈதலாகிய அறத்தையும் மேற்கொள்ளார். இத்தகையர் செல்வத்தைப் பிறர்தாம் கொண்டு சென்று பயன் அடைவர். அப்பொருள் சந்ததிக்கும் பயன் படாமல் போகும். ஈட்டிய துன்பம் மட்டும் இவர்கள் பெற்றோரே அன்றி, பொருளின் பயனாகிய அறனையும் இன்பத்தையும் இழந்தவரே ஆவார். பிறர் கொள்ளுதற்குக் காரணம், இப்படிப்பட்ட லோபிகள் தேடியபொருள் அன்பு நெறியையும் தன்ம நெறியைவிட்டும், தேடியபொருள் ஆதலின் என்க.

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் ''

என்பது கொன்றைவேந்தன் அல்லவா?

'' பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும் ''

என்ற நன்னெறி பாடலையும் உணர்க.

ஆகவே, நாட்டு மக்கள் உழைத்து ஈட்டிய பொருளைப் பிறர்க்கு ஈந்து வாழ வேண்டும். இவ்வாறு இன்றி இவர்கள் தம் செல்வத்தைப் பிறர்க்கு ஈயாது வைத்திருந்தால் உலகை நிலை நிறுத்தும் மேகம் மழையைப் பொழிதல் இன்றி, மழை இன்மையாகிய வறுமையினையுற்றதற்குச் சமமாகும். அது தன் கடமையைச் செய்ய மழையைப் பொழியுமானால் நாட்டில் வறுமை வந்துறாது. அதுபோல நற்குடிச் செல்வரும் ஈந்து

மகிழ்வாராதல் வறுமை யுள்ளவர்கள் வறுமை ஒழிவர். அருளும், அன்புக் குறியும் முதலிய சீர்மைப் பாட்டினை உடையவர் தாம் பிறர்க்கு உதவ இயலாத போது நாணுவர். இத்தகைய நாணம் மிக்கவர் நாட்டில் இருந்து செல்வம் திரட்டி ஆதரவற்றவர் களை ஆதரித்து வருதல் கடமையாகும்.

## 16. மருந்து.

நாடு நன்மக்களைப் பெற்றும், நல்லமைப்புப் பெற்றும், பொருளாதர முன்னேற்றம் அடைந்தும், அப்பொருளைப் பிறர்க்கு ஈயும் கட்டுப்பாட்டினைப் பெற்றும் இருப்பதோடு, நாட்டு மக்கள், நல்ல உடல் நலம் வாய்ந்தவராய், நோய் அணுகாவழியில் தம்மைப்பாது காத்துக்கொள்பவராய் இருத்தல் வேண்டும். நோய் அணுகாமைக்குச் சில முறைகளை நாட்டு மக்கள் கையாள வேண்டும்.

நோய் வருதற்குப் பல காரணங்கள் உண்டு. அவையே பழவினைத் தொடர்பினாலும் ஏனைய காரணங்களாலும் எனலாம். ஏனைய காரணம் இன்ன என்பதைக் குமரேச சதகம்,

கல்லினால் மயிரினால் மீதூண் விரும்பலால்
கருதிய விசாரத்தினால்
கடுவழி நடக்கையால் மலசலம் அடக்கையால்
கனிபழம் கறியுண்ணலால்
நெல்லினால் உமியினால் மூழ்கலால் நித்திரைகள்
இல்லாமையால்
நீர்ப்பகையினால் பனிக் காற்றிலுடல் நோதலால்
நீடுசருகிலை யூறலால்
மெல்லிநல் லார்கலவி அதிகமுன் விரும்பலால்
வீழ்மலம் சிக்குகையினால்
மிகுசுமை எடுத்தலாய் இளவெயிற் காய்தலால்
மெய்வாட வேலைசெயலால்
வல்லிரவி லேதயிர்கள் சருகாதி உண்ணலால்
வன்பிணிக்கிடம் என்பர்காண்.

என்று கூறுவதால் அறிந்து கொள்ளலாம்.

பழவினையால் வரும் நோய்கள் அப் பழவினை நீங்கிய போதுதான் நீங்கும். பல காரணங்களால் வரும் நோய்களை உணவு முறைகள் மூலமும் மருந்து வகைகள் மூலமும் செயல் முறைகளின் மூலமும், நீக்கிக் கொள்ளலாம். மருந்தாவது உடம்புக்கு நோய் வராமல் செய்யும் திறம் என்றே மணக்குடவர் போன்ற உரையாசிரியர்கள் கூறுகின்றனர். இதனால் கடியப்படவேண்டிய உணவுகளை ஒதுக்க வேண்டும் என்பதும், கடியப்படாத உணவுகளையும் மிகுதியாக உண்ணுதல் கூடாது என்பதும், அப்படி உண்டால் நோயே மிகும் என்பதும் அளவோடு உண்ண வேண்டும் என்பதும் ஆகும் என்று இன்னமும் விளக்கமாகப் பரிதிப் பெருமாள் விளக்கி அருளினார். அவர் "மருந்தாவது ஆகாரங்களின் மிகுதியாலே நோய் கொண்டு மருந்து கொடாமல் நியமத்திலே நடப்பது நெறி" என்று கூறுகிறார். இதிலிருந்து மருந்து கொடுத்தே நோயைப் போக்கவேண்டும் என்னும் நியதி இல்லாமையை உணர்ந்து, உணவு நெறியில் விழிப்புடன் இருந்து, உடல் நலம் போற்ற வேண்டும் என்பதையும் உணர்தல் வேண்டும்.

ஆயுர்வேத முறை சித்த முறையாகிய மருத்துவ முறைகளை நன்குணர்ந்தவர், உணவு நெறி சிறிது மிகுந்தாலும், குறைந்தாலும், இவ்வாறே செயல் முறைகளும் சிறிது மிகுந்தாலும் குறைந்தாலும் வாத பித்த சிலேத்துமம் ஆகிய மூன்று நோய்களும் உடலில் தோன்றி வருத்தம் செய்யும் என்று கூறுவர். வாத பித்தம், கோழையாகிய இவற்றிற்கு ஒத்த உணவே உண்ணுதல் வேண்டும். ஒத்த உண

வாவது, சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந்திய உணவு. செயல்கள் ஒத்தல் என்பது மனம் மொழிமெய்களால் செய்யும் தொழில்களை அவை அவை வருந்துவதற்கு முன்னே செய்யாது நீக்கல் வேண்டும் என்பதாம். உறக்கமும், இன்பமும் கூட உடம்பின் அளவிற்கு மிகுதலும் குறைதலும் கூடாது. "நோய்க்கிடங்கொடேல்" என்னும் ஆத்திசூடி வாக்கியம் நம் நினைவிற்கு வருதல் வேண்டும்.

இப்படிக் கவனித்து நாம் உண்ட உணவு சீரணமாயிற்று என்பதை அறிந்து அதற்குப் பிறகு உண்டுவந்தால் உடம்புக்கு நோய் வருமா? வராதன்றோ? வராதபோது, மருந்து தேவைப்படுமோ? படாதன்றோ? உண்ட உணவு சீரணமாயது என்பதை உடல் இலேசாக இருத்தலானும், ஏப்பம் நல்முறையில் வருவதாலும், புளியேப்பம் இல்லாமல், வாய்நாற்றம் இன்மையாலும், மனமும் உறுப்புக்களும் தொழிற் செய்ய முன்னிற்றலாலும், பசி மிகுவதாலும் அறிந்து கொள்ளலாம். உண்ணும் முறையினை மேற்கொள்ளும் போதும் செரித்தாலும் அன்னம் இரண்டு கூறும், நீர் ஒரு கூறும், காற்று உலவ ஒரு கூறும், அறிந்து உண்ண வேண்டும். வாத பித்த சிலேட்டுமத்திற்கு வேண்டாத கறி வகையை நீக்க வேண்டும். பின் அசனம் பண்ண வேண்டும்;

மனம்மெய்ம் மொழிகள் வருந்தாமல்
வகுத்துத் தொழிலை மாறுபாடா
இனிய உணவை மிகப்பசித்த இடத்தின்
உடற்குப் பொருந்த உணின்

முனிசெய் பிணிகட் கிடனின்றும்
முறைகள் பிறழ்ந்து வந்துவிடின்
புனித முடைய வயித்தியரால்
வழிநின் றவற்றைப் போக்குகவே

என்ற விநாயக புராணப் பாடலையும் காண்க.

உண்ட உணவு செரித்து விட்டது என்று அளவு கடந்தும் அடிக்கடியும் உண்டுவருதல் கூடாது. சீரண மான பிறகும் அளவோடு தான் உண்ணவேண்டும். அப்படி உண்டுவரின், உடம்பு நீண்ட நாளைக்கு அழி வுறுதிருக்க வழிகண்டவராவோம். மானிடப்பிறவி கிடைப்பதே அருமை. பல பிறவி எடுத்தபின்பே இவ் வரிய மானுட உடல் கிடைக்கிறது. இந்த உண்மை யினைப் பல நூல்கள் கூறுகின்றன என்றாலும், பிரபு லிங்க லீலை, "உடலை விரைவில்அழித்திடாமல் பாது காத்துக் கொள்ளவேண்டும். இதனால்தான் இம்மை மறுமை வீடு பேறுகள் எய்த இயலும்." என்பதை

புல்மரம் ஊர்வன பறப்பு புள்விலங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங்கள் தப்பியே
வன்மைகொள் நிலமிசை மக்கள் ஆகுதல்
நன்மைகொள் உயிர்க்கலால் அரிது நந்தியே

என்று ஆனந்தமாகக் கூறுவதைக் காண்க.

உடம்பை நன்முறையில் பாதுகாக்க வேண்டு மென்பதற்காகவே திருமூலரும்,

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

என்று எச்சரிகை செய்தனர். "பாலோடாயினும் காலம் அறிந்துண்" என்பது கொன்றை வேந்தன் அன்றோ? "நொறுங்கத் தின்றவன் நூறுண்டிருப்பான்" என்பது ஒரு பழமொழி அன்றோ? ஆகவே, முன்பு உண்ட உணவு சீரணம் ஆயிற்று என்பதைக் கவனித்துப் பசி நன்கு எடுத்தபின் மாறுபாடு இல்லாத உணவுகளை உண்ணவேண்டும். மிகப் பசிக்க வேண்டுவது ஏன் எனில், சீரணமாவதோடு அல்லாமல் முன்பு உண்ட சுவையும் நீங்கவேண்டும் என்பதற்கென்க. உணவுகளில்மட்டும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது இல்லை. கால இயல்போடும் மாறுபடாமல் உண்ணவேண்டும். சுவை வீரியம் மாறுபடாவாறு அறிந்தும் உண்ணவேண்டும். உண்பவன் பகுதியோடும் மாறுபடாது உண்ணவேண்டும். உண்பவன் பகுதியோடு மாறுபடுதலாவது வாதபித்த சிலேட்டுமங்கட்கு அடாதவவற்றை உண்ணலாகும். கால இயல்போடுமாறு படுதலாவது பெரும்பொழுதுக்கு ஒவ்வாதனவற்றையும், சிறுபொழுதுகட்கு ஒவ்வாதனவற்றையும் உண்ணலாகும். சுவை வீரியங்களோடு மாறுபடுதலாவது தேனும் நெய்யும் அளவு தெரியாமல் ஒன்றுகூட்டி உண்ணுதலாகும். இப்படி உண்டால் நோயும் இறப்புமே வந்தணுகும்.

தினமும் ஒருபொழுது அசனம் பண்ணினால், நோயே வராது. "மீதூண் விரும்பேல்" என்னும் ஆத்திசூடி நினைவில் இருக்கவேண்டும்.

உணவினை மேலே கூறியவகைகளில் உண்டு வருதல் வேண்டும். உள்ளம் விரும்பும் அளவில் உண்ணாமல், நோய்வரா அளவில் உண்ணவேண்டும். இப்படி உண்டால் உயிர்க்குத் தீது ஏற்படாது. மாறுபாடுடன் உணவு உண்டால் பலாப்பழத் தைத் தின்றபின் சுக்குத் தின்பதைப் போன்ற பயனே உண்டாகும். கைப்பு, புளிப்பு, இனிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு ஆகிய சுவை வேறுபாடு டைய உண்டியே உண்ண வேண்டும் என்பது இன்றி, சுவையுடைய உண்டிகளில் சிலவற்றை ஒழித்தும் மருத்துவர் கூறும் முறைப்படி உண்டுவரின் இடை யூறு உடம்பிற்கு எய்தாது. மிகுதியாக உணவினை ஒருவன் உண்பானாயின், அவனுக்கு நோய் கட்டாயம் நீங்காது இருந்தேதீரும். சீரணமானது என்று அறிந்து உண்பவனுக்கு என்றும் இன்பம் இருந்தே தீரும். இவ்வின்பத்தால் வாத பித்த சிலேட்டுமம் தத்தம் நிலையில், திரியமாட்டா. மனம் மொழி மெய்கள் அவன் வயத்தனவாகும். இதனால் அறம், பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருள்களை யும் நன்கு அடையலாம். வயிற்றுத் தீயின் அளவு தெரிந்து, அதற்கேற்ப உண்ணவேண்டும், தன் பகுதியும், அதற்கேற்ற உணவும் காலமும் ஆராய வேண்டும். வேண்டியதோர் உணவை, வேண்டிய தோர் காலத்து வயிற்றுத் தீயளவை அறியாது உண் டால், நோயும் அளவில்லாமல் பெருகும். 'உண்டி-

வெய்யோர்க்கு உறுபிணி எளிது'' என்று முது மொழிக்காஞ்சி கூறுகிறது. தேவர்களும் அளவின்றி உண்ணின், அளவின்றி நோய் பெறுவர் என்பதற்குச் சான்று அக்கினியே ஆவன். அவன் யாகத்தில் பெரிதும் உண்டதனுல் மந்தம் என்னும் நோயால் வருந்தினுன் என இரங்கேசவெண்பா கூறுவதை

"அம்படன் வேள்வி நுகர்ந் தக்கினிக்கு மந் தமுற்ற
தென்ப தறிந்தும்''.

என்ற பாடலால் அறியலாம்.

ஆகவே, இதுவரை நோய் வருவதற்குரிய காரணங்களையும், அது வராதிருத்தற்குரிய வழிகளையும் ஒருவாறு உணர்ந்தோம். என்ருலும், நோய் வந்த பிறகு அந்நோயைப் போக்க வல்ல மருத்துவனும் நாட்டிற்கு வேண்டியவனுவான். அவன் மருத்துவ நூலில், வல்லானுயும் நோய் இன்னது என்பதை அதன் குறிகளாக அறியவல்லானுயும், நோய் இன்னது என்று கண்டறிந்தபின், அந் நோய் வந்த காரணத்தை அறிந்தவனுய், பின்பு அந்நோயைப் போக்கும் வழி அறிந்தவனுய் அவ்வழியினைத்தவருது செய்பவனுயும் இருக்கவேண்டும். நோய்வந்த காரணத்தை உணவு செயல்களால் யூகித்து அறியலாம். இவ்வாறு அறிதலே நிதானம் என்று கூறப்படும்.

உணவையும் செயலையும் அறிந்தால் நோயினையும். அந்நோய் நீங்கும் உபாயத்தினையும் ஐயமறத் துணிந்து கூற இயலும். நோய் தீரச்செய்யும் உபாயங்கள், மருந்து செய்தலும், தூய்மையற்ற செந்நீரை

நீதலுக்கு அறுத்தலும், சுடுதலும் ஆகும். இம்முறை களை மருத்துவ, முறைமையின்படி செய்யவேண்டும்.

நோயைத் துணிந்தே உறுநோய்முதல் நாடி அந் நோய்க்கு
ஆய மருந்தே அறிந்தூட்டும் அஃது உண்டு காட்டில்
பாய மறுக்கும் படியாம்அது பல்லுயிர்க்கும்
கூயத்தின் என்னை குரவர் உபதேசம் என்றான்"

என்பது நீலகேசிப் பாடல்,

நோய் நாடி, நோய் முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்த திருநாவுக்கரசரது தமக் கையார் திலகவதியார், இதற்கு ஓர் எடுத்துக் காட் டாவர். திருநாவுக்கரசர் நோயை இவ்விலக்கண முறைப்படியே தீர்த்துவைத்தார்.

"நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெந்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா"

என்னும் சோமேசர் முதுமொழி வெண்பாவைக் காண்க.

நோயின் மூலமறியாத காரணத்தால் நோய் நீங் கச் செய்யாது சமணர் விழித்ததையும் எடுத்துக் காட்டாக மொழியலாம்.

"சீலமிலாப் பேய்ச்சமணர் சிந்தை நைந்தார் பாண்டியனோய்
மூலம்அறி யாது முருகேசா"

என்ற பாடலைக் காண்க.

இத்தருணத்தில்

நலங்கொள் திருநீல நக்கர்நா தர்இல்லாள்
சிலம்பிவிழ வாய்மருந்து செய்தாள்—சலங்கொளுமுன்

என்னும் திருத்தொண்டர் வெண்பாவையும் உணர் வோமாக.

மருத்துவனுவான் நோயாளியின் பருவம், வேதனை, வலியாகிய இவற்றின் அளவையும், சாத்தியம், அசாத்தியம் யாப்பியம் என்னும் சாதி வேறு பாட்டையும், தொடக்கம், நடு, முடிவு என்னும் நோயின் வேறுபாட்டையும், வன்மை, மென்மை முதலிய வற்றையும், மருத்துவ நூல் நெறியால் அறிந்து அவற்ருேடு பொருந்தச் சிகிச்சைசெய்ய வேண்டும். பெரும்பொழுது, சிறுபொழுதுகளை, அறிந்து இப்பொழுதிற்கு இந்த மருந்தைத்தான் கொடுக்கவேண்டும் என்பதையும் உணர்ந்து மருந்து கொடுக்கவேண்டும்.

நோயைத் தீர்ப்பவனும், மருந்தைச் செய்பவனும், மருந்தும், நாட்டில் இருத்தல் வேண்டும். இம் மூன்று துணைகளும் இருந்தால்தான் நோய் உற்றவன் நோய் நீங்கப் பெறுவான். நோய் உற்றவனும், பொருளுடையவனுய், மருத்துவன் சொற்படி நடப்பவனுய், நோய் இன்னது என்பதை அறிவிப்பவனுய், மருந்துத் துன்பம் பொறுத்துக் கொள்பவனுய் இருத்தல் வேண்டும். மருத்துவனும் நோய்கண்டு இது நம்மால் தீர்க்க இயலாது என்று அஞ்சம் அச்சம் அற்றவனுய், ஆசிரியனை வழிபட்டு அவன் சொல்லிய முறைகளைப் பின்பற்றி மருந்து ஈயும் நுண்ணறிவு உடையவனுய்ப் பலமுறை பலநோய்களைத் தீர்த்த அனுபவமுடையவனுய், மனம் மொழி மெய்கள் தூய்மையுடையவனுய் இருத்தல் வேண்டும். ஒரே மருந்தாயினும் பலநோயையும் தீர்க்கும் தன்மையும், சுவை, வீரியம் விளைவு, ஆற்றலால், மேம்பட்டதன்மையும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும், பகுதியோடு பொருந்தவல்லதாகவும் அஃது இருத்தல் வேண்டும். மருந்து செய்பவனும், நோயாளியிடம் அன்பு உடைய

வனாய் மனம் மொழி மெய்களில் தூய்மையுடையவ னாய், சொல்லியபடி செய்ய வல்லவனாய் அறிவுடைய வனாய் இருத்தல்வேண்டும். இவ்வாறெல்லாம்பொருந் தப் பெற்றபோதுதான் நோய் நீங்கும். இவற்றுள் ஒன்று தவறினாலும் நோய் நீங்காது.

நோய் கொண்டவனுக்கு நல்ல உறவினர்கள் உதவியும் தேவை. மருந்து கொடுப்பவன் தெய்வ அருள்பெற்றவனாயும் இருத்தல் வேண்டும். மருந்து செய்பவர் சுறுசுறுப்பும் தருமகுணமும் உடையவரா யும், தாய் அன்பு உடையவராயும் இருத்தல்வேண்டும். இந்நோய்கண்டு கவலை படமாட்டோம். நோயாளிகள் இந்நோய் தீரும் அளவு முயற்சியும், உணவும், குறியும் முதலியவற்றை இவ்வாறு சொல்லுவோம்'' என்னும் அறிவு உடையவராயும் இருத்தல் வேண்டும், இவ் வாறு பாகுபடுத்திக் கூறியதன் நோக்கம், நோய் தீர் தற்குரிய வழிகளை அறிவிப்பதற்கே என்க.

ஆகவே, இதுவரை கூறிவந்த கருத்துக்களால், நல் அரசு நாட்டில் இருக்க வேண்டுமானால், அதற் குத்துணைக் கருவிகளாக இருக்கும் பலவற்றுள் நாட் டின் தன்மை, அரண் அமைப்பு, குடிமக்கள் இயல்பு, பொருளாதார நிலை, ஆரோக்கியம் இன்றியமையா தவை ஆகும் என்பனவற்றை உணர்ந்தோம். இனி இத்தகைய அருமை வாழ்ந்த நாட்டிற்கு ஒரு தலைவன் தேவை அல்லவா? அத்தலைவன் இன்னான் என்ப தைப் பின்னர் உணர்வோமாக.